# தேவி பாகவதக் கதைகள்



ஆக்கம்: மு.சிவலிங்கம்

வெளியீடு: இணுவில் சைவத்திருநெறிக்கழகம்

மாசி, 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி

# தேவி பாகவதக் கதைகள்



பூத்தவளே! புவனம் பதினான்கையும் பூத்த வண்ணம்
காத்தவளே! பின் கரந்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே! உன்னையன்றி மற்றோர் தெய்வம்
வந்திப்பதே

**ஆக்கம் மூ. சிவலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் - தேவிபாகவதக் கதைகள்

ஆக்கம் - மூ. சிவலிங்கம்

பக்கங்கள் - xi + 90

எழுத்து அளவு - 12

பக்க அளவு - A5

கணனி வடிவமைப்பு - சுடர்நிலவு கிரபிக்ஸ், இணுவில்.

அச்சுப்பதிப்பு - வைரஸ் கிரபிக்ஸ், இணுவில்.

வெளியீடு - இணுவில் சைவத்திருநெறிக் கழகம்

காலம் - 2011, பங்குனி

விலை விலை ரூா. 150.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் சிவகாமி அம்பாள் தேவஸ்தான
# பிரதம சிவாச்சாரியார்
# சிவஸ்ரீசாம்பசிவ சோமசபேசக்
# குருக்கள் அவர்களின் ஆசிச் செய்தி.



எல்லாம் வல்ல ஆதி பராசக்தியின் அம்சமாக இணுவில் திருவூரில் ஆட்சி புரியும் சிவகாமி அம்பாளின் பேரருளால் இங்கு வாழும் யாவரும் பல சீரும் சிறப்பும் பெற்று நலமுடன் வாழ் கின்றனர். அன்னையின் திருமுன்றில் அமைந் துள்ள சிவகாமி அறநெறிப் பாடசாலை இப் பகுதி மாணவர்களுக்கு பெரிதும் துணை செய்கிறது. இப் பாடசாலையை இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தினர் பதினான்கு ஆண்டுகளுக்கு முன் நிறுவி நன்கு இயக்கி வருகின்றனர். இப் பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி இதற்கு முன் பல சமய நூல்களை வெளியிட்டுள்ளனர். அவையாவும் தரமாக அமைந்ததால் யாவருக்கும் நன்மை யளித்தன.

இன்று இவர்களின் வெளியீடான “தேவிபாகவதக் கதைகள்” என்னும் நூல் மகா சக்தியின் பேரருளையும் மகிமையையும் வெளிப்படுத்துகின்றது. இந்த நூல்களினால் எமது சிவகாமி அம்பாளின் அடியார்கள் சக்தி வழிபாட்டின் சிறப்பை அறிய முடிகிறது. இந்த மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இவர்கள் மேலும் பல நூல்களை வெளியிட்டு சக்தியின் பேரருளைப் பெற வேண்டுமென எங்கள் சிவகாமி அம்பாளை பிரார்த்தித்து எனது இதய பூர்வமான வாழ்த்தையும் தெரிவிக்கிறேன்.

**“வேத சிவகாம கிரியாரத்தினம்”**
***சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள்***
சிவகாமி அம்பாள் தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



சைவநெறி மேலோங்கிய இணுவில் திருவூரில் இணுவில் சைவத்திரு நெறிக் கழகத்தினர் தமது பணியில் சைவச் சிறார்களுக்கு சைவசமயத்தின் பெருமைகள், எங்கும் நிறைந்திருக்கும் இறைவனின் அருட்செல்வம், திருவிளையாடல்களை உணரும் வண்ணம் வருடா வருடம் நூல்களை வெளியிட்டு வருகின்றனர். எம்மை நாம் உள்ளும் புறமும் தூய்மையாக்க இறைவனிடத்தில் அன்பு பக்தி செலுத்த வேண்டும். எமது சைவ சமய பாரம்பரியத்தைக் காக்க வேண்டும். அதனை அனுசரித்து ஒழுக வேண்டும். என்ற ஆவலினால் இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தின் பொறுப்பான உறுப்பினரும் சமய சமூக சேவையாளரு மான மூ. சிவலிங்கம் அவர்கள் "தேவிபாகவதக் கதைகள்" என்னும் நூலை எழுதி வெளியீடு செய்வதையிட்டு இதய பூர்வமான உள்ளன் போடு வாழ்த்துரை வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

எமது சைவசமயத்தை, சைவசமய பாரம்பரியத்தை இளைய தலைமுறையினரும் வாழையடி வாழையாக அனுசரித்து ஒழுக வேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டு இணுவில் சைவத் திருநெறிக் கழகம் இயங்கி வருகிறது. இவர்கள் சிவகாமி அறநெறிப் பாடசாலையை நிறுவி இயக்கி வருகிறார்கள். சைவசமய நெறி வளர்க்கும் இவர்களின் பணி பாராட்டுக்குரியது.

நல்லதை செய்வோம் நன்மையைச் செய்வோம் சமய அறப்பணியில் தொண்டாற்றுவோம் என்னும் மனப்பாங்குடன் பணிபுரிந்து வருவது போற்றத்தக்கது. இவர்களின் உயரிய குறிக்கோளை மதித்து ஊக்குவித்து எமது சைவ சமயத்தைக் காக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் சைவ மக்களாகிய எமக்கே உரியது.

எங்கள் ஆதிபராசக்தியின் அருட்செல்வம், அற்புதங்களின் பெருமைகளை இளஞ்சிறார்கள் உணர்ந்து உய்யும் வகையில் நல்ல இலகு தமிழில் கதைகளைக் கூறியிருப்பது சிறப்பம்சமாகும். நாம் யாவரும் வாசித்தறிந்து எமது பள்ளிச் சிறார்களை வாசிக்கத் தூண்டிச் சமய உணர்வை வளர்க்குமாறு பெற்றோர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தின் நற்பணி யினைப் பாராட்டுவதுடன் மேன் மேலும் அவர்களின் அறப்பணி சிறக்க எல்லாம் வல்ல அகிலாண்டகோடி நாயகியான அன்னை சிவகாமியின் மலரடி போற்றி வாழ்த்துகிறேன்.

***செ. குபேரநாதன்***
கோட்டக்கல்விப் பணிப்பாளர் - உடுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்" என்ற மறை வாசகத்திற்கேற்ப இணுவையம்பதி சிவபூமியாக விளங்குகிறது. சிவ வழிபாட்டுடன் சக்தி வழிபாடும் மளிர்ந்து விளங்குவது இணுவையம்பதி.

சித்தர்களும் பக்தர்களும் வாழ்ந்து வருகின்ற ஊர் இணுவையம்பதி அற்புதம் நிறைந்த ஆலயங்களால் சிறப்புப் பெற்ற ஊர் இணுவை. இத்தகைய சிறப்பினையுடைய இணுவையம்பதியை ஆட்சி செய்யும் தாயாக விளங்குபவள் சிவகாமியம்மை. இச் சிவகாமித் தாயின் பெயரால் சைவத்திரு நெறிக்கழகமும் அற நெறிப் பாடசாலையும் இயங்கி வரு கின்றன.

இச் சைவதிரு நெறிக்கழகம் காலத்திற்குக் காலம் சைவத் நூல்கள் பலவற்றை வெளியிட்டு வருகின்றது. அவற்றின் வருமானம் அறநெறிப் பாடசாலைக்குப் பயன்படுத்தப்படு கிறது. இந்தவகையில் கழகமானது தேவியின் பல்வேறு அற்புதங்களை தொகுத்து ஒரு நூலாக வெளியிடுவது பெருமைக்கும் மகிழ்ச்சிக்குமுரியதாகும். இந்த உன்னதமான பணி வளர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இந்நூல் மாணவர்களுக்கு மட்டுமின்றி பெரியவர் களுக்கும் படித்துப் பயன்பெறக் கூடியவை. எனவே தேவி பாகவதக் கதைகள் சைவ மக்கள் எல்லோரும் படித்துப் பயன் பெற வேண்டுமெனச் சிவகாமித்தாயை வேண்டி சைவத்திரு நெறிக் கழகப் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

வணக்கம்.

***பண்டிதை திருமதி வை. கணேசபிள்ளை***
அமைப்பாளர்,
ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார்
திருநெறிய தமிழ்மறைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



கிராமசேவையாளராக இருந்து ஓய்வு பெற்ற அறிஞர் திரு.மூ.சிவலிங்கம் அவர்கள் 1997ல் அறநெறிப் பாடசாலை ஒன்றை இணுவிலில் ஆரம்பித்து பெரும் தொண்டு செய்து வருபவர். குழந்தைகள், சிறுவர்களின், ஆன்மீக வளர்ச்சிக்காக சீரிணுவைத் திருவூர், மழலைச் செல்வம், இறையருட் செல்வர்கள், சக்தியின் அற்புதங்கள் வரிசையில் இன்று "தேவிபாகவதக் கதைகள்" என்ற நூலின் வெளியீடும் அமைகின்றது.

இந்நூலில் சுமார் 30 கதைகள் தேவி பராசக்தியின் மகத்துவம் பற்றிப் பேசுகின்றன. புராணப்படி, புராணப்பிரசங்கம், கதாப் பிரசங்கங்கள் என்பன ஒரு காலத்தில் சைவாலயங்களிலும் பெருங் கோயில்களிலும் ஊர் தோறும் கிராமந் தோறும் நடைபெற்று வந்தன. அவை தவிர யாழ் குடா நாடு புகையிலைச் செய்கைக்கு பெயர் என்ற இடமாகும். அந்த நாளில் புகையிலை சுருட்டும் கொட்டில்களில் குடிசைகளில் எல்லாம் இதிகாசங்களும் புராணங்களும் கூட பாட்டும் பயனும் கூறி நடைபெற்றன. இங்குள்ள தொழிலாளர்கள் புகையிலை வேலை செய்யும் வேளையில் ஒருவர் பாடவும் இன்னொருவர் பயன் சொல்லவும் ஏற்பாடாகியிருக்கும் மேற் சொன்ன புராண படனங்களைக் கேட்டு மனநிறைவுடன் தொழிலும் நடந்தது. கூடவே தெய்வ பக்தியும், புத்தியும், சமய வாழ்வியல் ஒழுக்க மேம்பாடும் இணைந்தே சமூகத்தில் வளர்ந்து செழிப்பதற்கும் காரணமாயின.

ஆனால் இன்று காலம் மாறிவிட்டது. சிறு கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள் பலவும் மறைந்து விஞ்ஞான தகவல் தொழிநுட்ப யுகம் வளர்ச்சி கண்டுள்ள காலமாகும். எல்லாமே விஞ்ஞான மயமாகும் காலம் ஆலய வழிபாடு, பூசைக் கிராமங்களிலும், கட்டிட, சிற்ப ஓவியக்கலை வளர்ச்சியிலும் அறிவியல் கருத்துகள் புகுந்து விளையாடும் திறன்கள் இன்று பரவலாக்கம் பெற்று வருகின்றன. புராணப் படனங்கள், பிரசங்கங்கள், கதாபிரசங்கங் களுக்குப் பதிலாக இன்று கணனியில் அவற்றையெல்லாம் பதித்து ஆலயங்களில் ஒலிபெருக்கியில் போட்டு சிலர் கேட்பதற்கு பதில் ஒரு கிராமமே கேட்கும் அளவுக்கு அறிவியல் ஆலயங்களில் புகுந்து விட்டது. "பழையன கழிதலும் புதியன புகுதலையுமே" இன்று இவை அடையாளப்படுத்துகின்றன. இதிகாசப் புராணக் கதைகளே இந்துக் கோயில்களின் கலை வளர்ச்சிக்கு ஆணிவேராக அடிப்படை சாத்திரங்களாக அமைந்துள்ளன. யாழ் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறையில் நான்கு வருடக் கற்கைநெறிகளுக்குள்ள பாட அலகுகளில் "தெய்வீக வரலாற்றிலே" (Hindu Mythology) என ஒரு பாடத்திட்டம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பகுதியில் இதிகாச புராணம் கூறும் கதைப் பரப்பு களிலிருந்து வழிபாட்டுக்குரிய கடவுள் வடிவங்கள், மூர்த்திகள், தெய்வத் திருவுருவங்களை வடிவமைப்பதற்கான மூலங்கள் பலவும் பெறப்பட்டன. தெய்வீக வரலாற்றுத் தொன்மங்களை அறிவதற்கும் அக்கடவுள் மேலுள்ள பலத்தையும் சக்தியையும் பக்தியையும் புலப்படுத்துவதற்கும் வணங்குவதற்கும் தெய்வீக கதாம்சங் களிலிருந்தே பலவித பதிவுகள் கிடைத்தன. அந்த வகையில் தேவி பாகவதக் கதைகள் என்னும் இந்த நூலாக்கமும் இன்றைய இளைய தலைமுறையினருக்கு வருமோ, என்னவோ சிறு குழந்தைகள் மத்தியில் ஆர்வமாகப் படிக்கத் தகுந்த சிறந்த நூலாக வெளிவருகிறது. குறிப்பாக அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் தேவைப்படும் இன்றியமையாத ஒரு நூலாகவும் இதனைக் கொள்ளலாம். பாலர்களிடையே அறிவியல் புகுந்து மனித அறிவைக் குழப்புவதற்கு முன்னர் பகுத்தறிவு என்ற பெயரில் பொய்மைகளும், குழப்பங்களும், தெய்வ நம்பிக்கைகளும் கேலிக்குள்ளாகும் நிலையில் அவற்றினால் பாதிக்கப்படாத குழந்தைகளிடத்தில் இத்தகைய பாகவதக் கதைகளை படிப்பதால் சிறு வயதிலேயே தெய்வ வழிபாடும், பக்தியும், நம்பிக்கையும் ஒழுக்க மேம்பாடும் வளர்வதற்கு இது சாதனமாகவும் பேருதவியாகவும் அமையும். "கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலில் விளங்கினார்" என்ற பெரிய புராண மரபிற்கிணங்க அன்பினையும், நம்பிக்கையினையும் மட்டுமே ஆணி வேராகக் கொண்ட சமய நூல் "தேவிபாகவதக் கதைகள்" என்ற இந்நூலாகும். ஆசிரியர் அவர்களின் கடின உழைப்பும், தெய்வீக நம்பிக்கையும் இனிவரும் காலத்தில் தலைமுறை சந்ததி சந்ததியாக இவற்றைப் பயன்பெற வேண்டும் என்ற உயர் நோக்கமும் இங்கு வெளிப்படுகிறது. வயது முதிர்ந்த காலத்திலும் ஓய்வுக் காலத்தை சமுதாய சேவைக்காகவும் இளந்தலைமுறையினரை வழிப்படுத்தும் முயற்சியாகவும் நூலாசிரியர் அம்பிகை அடியவர் திரு.மூ.சிவலிங்கம் அவர்களது அயரா எழுத்தாக்க முயற்சி பாராட்டப்பட வேண்டியதே. அப்பெரியார் மேன்மேலும் தெய்வ கடாட்சம் பெற்று நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து மேலும் பல தொண்டுப் பணிகளை ஆற்ற அம்பிகை அருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

***பேராசிரியர். கலைவாணி – இராமநாதன்*** M.A., Ph.D.,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
ஸ்ரீலங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை



சைவமும் முத்தமிழும் வாழ்ந்திடும் சீருவைத் திருவூரின் தாய்த் தெய்வமாக அமைந்துள்ள சிவகாமி அம்பாளின் கருணை நிழலில் வாழும் நாம் அறப்பணியாம் சைவப் பணியில் எம்மை இணைத்துள்ளோம். எமது சூழலில் சைவ நெறியை எமது இளம் சிறார்களிடையே வளர்ப்பதன் பேரில் 1997இல் சிவகாமி அறநெறிப் பாடசாலையை நிறுவினோம். இப் பிள்ளைகளதும் வளர்ந்தோர்களதும் சமய அறிவிற்கு உறுதுணையாக சில நூல்களை வெளியிட முனைந்தோம்.

எமது கழக ஆரம்ப கால உறுப்பினரும் சிவகாமி அறநெறிப்பாடசாலை பொறுப்பாளரும் ஒய்வு பெற்ற கிராம அலுவலருமான திரு மூ. சிவலிங்கம் அவர்கள் சிறந்த சைவ சமய நூல்களை எழுதினார். இதற்கு முன் இவரின் படைப்பான ஆறு நூல்கள் எம்மால் வெளியிடப்பட்டன. இந்த ஆறு நூல்களும் எம் மக்களிடையே பெரிதும் நன்மதிப்பைப் பெற்றதுடன் சகல மாணவர்களுக்கும் பெரும் உதவியாகவும் இருந்தன. பலரின் வேண்டுதலுக்கேற்ப தேவிபாகவதக் கதைகள் என்னும் நூலை எழுதியுள்ளார். இந்த நூலை எமது ஏழாவது நூலாக மலர வைப்பதில் பெருமகிழ்வடைகிறோம். இதனால் சக்தி வழிபாட்டின் சிறப்புகளை எம் இளந்தலைமுறையினர் கற்று சிறப்படைய வேண்டுமென்று எல்லாம் வல்ல இணுவில் சிவகாமி அம்பாளைப் பிராத்திக்கிறேன்.

***ந. காசிவேந்தன்***

உபதலைவர்

இணுவில் சைவத்திரு நெறிக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



ஆனைமுகன் ஆறுமுகன்
அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாபமெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசிந்திடல் வேண்டும் அன்னாய்!

யாவரும் வியந்து போற்றும் வண்ணம் சைவமும் முத்தமிழும் சிறப்புடன் வாழ்ந்திடும் இணுவில் திருவூரில் உறைந்துள்ள தெய்வங்களின் பெருங்கருணை போற்றத்தக்கது. இணுவில் சிவகாமி அம்பாளின் ஆலயப்பணியில் இணைந்த இணுவில் சைவத்திருநெறிக்கழகத்தினர் தமது அறப்பணியின் ஓரங்கமாக அறநெறிப் பாடசாலையொன்றை நிறுவ முன்வந்தனர். சிவகாமி அம்பாளின் ஆலய முன்றலில் அமைந்திருக்கும் அன்னதான மண்டபத்தில் சிவகாமி அறநெறிப் பாடசாலையை 1997ல் நிறுவினர். இவ்வறநெறிப் பாடசாலையில் சிவ நெறிபோற்றும் சிந்தனைமிக்க சிறார்கள் இணைந்து கற்று வருகின்றனர். இவர்களின் சமய நெறிக்கு உறுதுணையாக அமையும் வண்ணம் 2003ஆம் ஆண்டு முதல் இதுவரை ஆறு சமய நூல்களை வெளியிட்டோம். இந்த நூல்களின் சிறப்பினால் மக்கள் மத்தியில் பெருமதிப்பேற்பட்டது. இவ் வெளியீட்டினால் கிடைத்த நிதியம் அறநெறிப் பாடசாலையின் வளர்ச்சிக்காக உவந்தளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்கால நெருக்கடி நிலை காரணமாக ஆலய வழிபாடு மேலோங்கியுள்ளது. இணுவில் சிவகாமி அம்பாளின் பெருங்கருணையால் சக்தி வழிபாடு பிரபலமடைந்துள்ளது. சக்தி வழிபாட்டின் சிறப்பை நோக்கி எம்மால் 2009ல் வெளியிடப்பட்ட "ஈழத்துச்சக்தியின் அற்புதங்கள்" என்னும் நூல் யாவராலும் போற்றப்பட்டது. இதன் பேறாக சக்தியின் அற்புதங்களையும் பெருமைகளையும் யாவரும் நன்கு அறிவதன் பேரில் "தேவிபாகவதம்" என்னும் மகா புராணத்திலிருந்து சில கதைகளைத் தொகுத்து நூலுருவில் வெளியிடுமாறு பல பெரியார்கள் கேட்டிருந்தனர். சக்தியின் திருவருளால் அவர்களின் கோரிக்கை கைகூடியது. சக்தியின் பல சிறப்புகளையும் கொண்ட முப்பது கதைகளை தெரிவு செய்து "தேவிபாகவதக் கதைகள்" என்னும் நூலாக வெளியிடும் பேறு கிடைத்துள்ளது. இந் நூலையும் இணுவில் சைவத்திருநெறிக் கழகம் தனது ஏழாவது நூலாக வெளியிடுகிறது. இதன் மூலம் கிடைக்கும் நிதியமும் எமது அறநெறிப் பாடசாலையின் வளர்ச்சிக்காகக் கிடைக்கிறது.

சிவகாமி அம்பாளின் பெரு நிழலில் வாழ்ந்து அறப்பணி யாற்றும் எம்மையெல்லாம் நற்பணியாற்ற உணர்த்திய சக்திதேவி யின் திரு பொற் பாதங்களில் இம் மலரினைக் காணிக்கையாக்குதில் மனநிறைவடைகிறேன். என் கடன் பணி செய்து கிடப்பதுவே.

*என்றும் அறப்பணியில்*
***மூ. சிவலிங்கம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1 முகவுரை
2. பரிசித்து மன்னன் கேட்ட கதை
3. கண்ணனுக்காக நடந்த கதையமுது
4. கிருஷ்ணர் சியமந்தக மணியையும் ஜாம்பவதியையும் பெற்ற கதை
5. முருகன் சொன்ன கதை
6. தீய சிந்தனையுடைய மகனைத் திருத்துவதற்காக நடந்த கதை
7. ரேவதியின் கதை
8. நாராயணர் செய்த தேவியின் யாகம்
9. திருமகளைப் பார்த்து திருமால் சிரித்த கதை
10. மதுகடைபரின் போர் வெறியும் வதமும்
11. சத்திய விரதனின் கதை
12. துருவசித்துவின் கதை
13. நவராத்திரி பூசை முறையும் விரத மகிமையும்
14. இராமர் நவராத்திரி விரதமிருந்த கதை
15. தேவ அசுரர் போராட்டம்
16. தேவியைத் துதித்தல்
17. மகிஷாசுரன் தோன்றிய கதையும் வதமும்
18. சும்ப நிசும்ப அசுரர்கள் கதை
19. விருத்திராசுரன் கதை
20. இந்திரப் பதவியும் நகுஷனும்
21. சதாஷிதேவியும் துன்முகாசுரனும்
22. சக்தியை அறியாத சிரிப்பு
23. சதிதேவி தீப்பாய்தலும் சக்திதேவியின் அங்கங்கள் தங்கிய தலங்களும்
24. ஜோதி மயமாகத் தோன்றிய குமாரி
25. சாவித்திரிதேவியின் பூசையும் விரதப் பயன்களும்
26. தேவேந்திரனுக்குத் துர்வாச முனிவர் இட்ட சாபம்
27. பிராமரியம்மனின் மகிமை
28. அமரர்களின் அகந்தையை அடக்கிய யக்ஷன்
29. பிராமணர்களின் பொறாமையும் கௌதம முனிவரின் சாபமும்
30. சக்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி பாகவதக் கதைகள்

## முகவுரை

உலகமெல்லாம் உய்யும் வண்ணம் ஆதியில் தோன்றிய ஆதிபராசக்தியே உலகின் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் சக்தி என்னும் தாயாக அமைந்துள்ளாள். படைத்தல் தொழிலுக்குப் பிரம்மாவையும், காத்தல் தொழிலுக்கு திருமாலையும், அழித்தல் தொழிலுக்கு உருத்திரனையும் தோற்றுவித்தாள். இவர்கள் மும்மூர்த்திகள் என அழைக்கப்படுகின்றனர். படைத்தல் தொழிலுக் குரிய கடவுளான பிரம்மாவை இயக்குவதன் பேரில் சரஸ்வதியையும், காத்தல் கடவுளான திருமாலை இயக்குவதன் பேரில் மகாலட்சுமி யையும், அழித்தல் தொழிலுக்குரிய கடவுளான உருத்திரனை இயக்குவதன் பேரில் துர்க்கையையும் தோற்றுவித்தாள்.

சரஸ்வதி பிரம்மாவின் சக்தியாக இயங்குவதுடன் கல்விக்கும் ஆய கலைகள் அறுபத்திநாலினுக்கும் அதிபதியாகவும் விளங்கு கிறாள். மகாலட்சுமி திருமாலின் சக்தியாக இயங்குவதுடன் சகல செல்வங்களுக்கும் சகல சம்பத்துகளுக்கும் அதிபதியாக விளங்கு கின்றாள். துர்க்கை உருத்திரனை இயக்கும் சக்தியாகவும் வீரத்துக்கு அதிபதியாகவும் விளங்குகின்றாள்.

சக்தி இன்றேல் சிவமில்லை என்னும் உறுதிமொழிக்கமைய மும் மூர்த்திகளும் தத்தமது சக்திகளுடன் இணைந்து செயற்படுவதால் தத்தமது கடமைகளை நிறைவேற்றுகின்றனர். சக்தியானவள் செயற் படாவிட்டால் உயிரினங்களின் தோற்றமே இல்லை என்னும் தத்துவத்தை முன்வைத்தே வியாசமுனிவர் தேவிபாகவதம் என்னும் மகா புராணத்தைத் தோற்றுவித்தார். சக்திதேவி என்னும் பகவதியின் பெருமைகள் இந்தப் புராணத்தில் கூறப்படுவதால் தேவி பாகவதம் என வழங்கப்பட்டது. இப்புராணத்தை வியாசமுனிவர் தமது சீடர்களுக்கு உபதேசித்தார். இச் சிறந்த புராணத்தையிட்டுச் சிந்திப்பவர்களுக்கும், ஏனையோருக்குப் போதிப்பவர்களுக்கும் அதைப் பொறுமையுடன் கேட்டின்புறுவோருக்கும் சக்தியின் பேரருள் கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிகாலம் தொடங்கினால் தீமைகள் ஏற்படலாமென உணர்ந்த சௌனகாதி முனிவர்கள் பிரம்மாவின் ஆலோசனைப்படி நைமிசாரணியத்தில் ஆச்சிரமம் அமைத்துத் தவநெறியைப் பேணி யாகங்கள் பல செய்து தவசீலர்களாக உயர்ந்தனர். ஒரு சமயம் மகா முனிவரான சூத முனிவர் நைமிசாரண்யத்துக்கு வந்தார். சூதமுனி வரின் பெருமையை நன்குணர்ந்த முனிவர்கள் அவரை அன்புடன் வரவேற்று உபசரித்தனர். சூதமுனிவரை வணங்கிய முனிவர்கள் தேவிபாகவதம் என்னும் மகா புராணத்தின் சிறப்புகளையும் பெருமையையும் தமக்கு உபதேசிக்குமாறு பணிந்தனர். முனிவர் களின் வேண்டுதல்களை மகிழ்வுடன் ஏற்ற சூதமுனிவர் தேவிபாக வதத்தை மிகத்தெளிவாக விளக்கிக் கூறினார். சௌனகாதி முனிவர் களும் தமக்கு ஏதும் சந்தேகமில்லாதவாறு கேட்டு இன்புற்றனர்.

## பரிசித்து மன்னன்மகன் கேட்ட கதை

பரிசித்து மன்னனின் மகனான ஜனமேஜயன் முதன்முதல் தேவி பாகவதத்தை வியாசமுனிவரிடம் கேட்டு நற்பயனடைந்தான்.

ஒரு சமயம் பரிசித்து மன்னன் ஒரு முனிவரின் சாபத்தினால் அரவத்தினால் தீண்டப்பட்டுத் துன் மரணமடைந்தான். இதனால் அவன் சிவகதி கிடையாது தவித்தான். மனவேதனையடைந்த மகனான ஜெனமேஜயன் தன் தந்தையின் ஆன்மா சாந்தியடைய வேண்டி வியாச முனிவரை நாடினான். வியாச முனிவர் அவனது தந்தை நற்கதி யடைவதற்காகத் தேவிபாகவதத்தைச் சிரவணஞ் செய்யவேண்டிய விதி முறைகளையும் அதன் பலனையும் தெரிவித்தார். தன்னிடம் முதன் முதல் நாடி வந்தவனுக்குத் தாமே உதவ முன் வந்தார். ஜனமேஜயனுக்கு வியாச முனிவரே ஒன்பது நாளும் உபதேசித்தார்.

ஒன்பதாம் நாள் பரிசித்து சக்திதேவியின் பேரருளால் சாயுச்சிய பதவியை அடைந்தான். அன்று பரிசித்து தன் மகன் முன் தோன்றி மகனே வியாசரின் அருளினாலும் சக்தி தேவியின் திருவருளினாலும் தேவி பாகவதத்தைச் சிரவணஞ் செய்த நற்பயனாலும் ஆத்மசாந்தி யடையச் செய்தாய் என்று கூறி மறைந்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணனுக்காக நடந்த கதையமுது

கம்சன் என்னும் கொடியவன் மூவுலகத்தோரையும் துன்புறுத்தினான். பாதிக்கப்பட்டவர்களைக் காத்தருளுவதற்காகத் திருமால் கம்சனின் சகோதரியான தேவகியின் மகனாகப் பிறந்து கம்சனை அழிக்கச் சித்தம் கொண்டார். தேவகிக்கும் வாசுதேவனுக்கும் நடந்த திருமணத்தைத் தொடர்ந்து ஊர்வலம் வரும்போது "தேவகியின் கருவிலுதிக்கும் எட்டாவது பிள்ளையால் கம்சனுக்கு மரணம் ஏற்படும்" என அசரீரி வாக்கு ஒலித்தது. அத்திருமண ஊர்வலத்துடன் வந்த கம்சனுக்குப் பீதி ஏற்பட்டது. இதனால் மணமக்களைச் சிறையிலிட்டுக் கொடுமைப்படுத்தினான். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளை அன்றே எடுத்துச் சென்று கொன்றான். இதனால் வேதனையடைந்த வாசுதேவன் தமது குலகுருவான கர்க்க முனிவரை வரவழைத்து ஆலோசனை கேட்டான். முனிவரின் ஆலோசனைப்படி தம்பதியருக்காகக் கர்க்க முனிவரே விந்திய மலையில் பெருவேள்வி செய்தார். அப்போது துர்க்காதேவி கர்க்க முனிவரின் முன்தோன்றி நாராயணர் தேவகியின் வயிற்றில் பிறப்பார் அவர்களுக்கு நற்பலன் கிடைக்குமெனக் கூறி மறைந் தார்.

உரிய காலத்தில் தேவகி ஒரு ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். இந்த எட்டாவது பிள்ளை நாராயணரின் சாயலில் இருந்தது. வாசுதேவனை நோக்கித் தன்னை எடுத்துச்சென்று யாதவ குலத்தில் வாழும் நந்தகோபனின் மனைவி யசோதையின் அருகில் வைத்துவிட்டு அங்குள்ள பெண்குழந்தையைக் கொண்டு வந்து தேவகியினருகில் வைக்குமாறு கூறியது. அதே சமயம் சிறைக்காவலர்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தனர். சிறைக்கதவு தானாகவே திறந்து வழிவிட்டது. வாசுதேவன் அப்பிள்ளையை எடுத்து ஒரு கூடையில் வைத்துத் தலையில் சுமந்து சென்றான். ஆதிசேடன் தன் படங்களை விரித்துக் கூடைக்கு மேலாகக் காவலாகச் சென்றது. குறுக்கே பாய்ந்தோடிய ஆறு தானாகப் பிரிந்து வழிவிட்டது.

வாசுதேவன் குறிப்பிட்டபடி தமது பாலகனை யசோதையினருகே வைத்துவிட்டு அங்கிருந்த பெண்குழந்தையை எடுத்து வந்து தேவகியின் அருகே வைத்தான். உடனே அப்பிள்ளை வீரிட்டு அழுதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைக்கதவு தானாகவே பூட்டுண்டது. காவலர்கள் தூக்கத்திலிருந்து எழுந்தோடிச் சென்று கம்சனிடம் குழந்தை பிறந்ததாகத் தெரிவித்தனர். கம்சன் உடன் வந்து சிறையினுட் புகுந்து அப்பிள்ளையின் கால்களிற் பிடித்துத் தூக்கிக்கொண்டுபோய் பாறையில் மோதிக் கொல்ல முற்பட்டான். அப்போது அப்பெண்குழந்தை அவனின் பிடியிலிருந்து தப்பி மேலெழுந்தது. மேலெழுந்த அப்பிள்ளை சுயரூபமெடுத்து துர்க்காதேவியின் வடிவிற் தோன்றி "கம்சா உன்னைக் கொல்வது நானல்ல. இன்னொருவன் பிறந்துள்ளான். அவனால் உனக்கு மரணம் ஏற்படும் எனக்கூறி மறைந்தாள்.

உரிய நியதிப்படி கண்ணன் (கிருஷ்ணர்) கோகுலத்தில் வளர்ந்து உரிய காலத்தில் பல அசுரர்களையும் கொன்று குவித்தான். பிற்காலத்தில் (திருமாலின் ஒன்பதாவது) கிருஷ்ண அவதாரமாகத் துவாரகையில் அமர்ந்து அரசாண்டார்.

## கிருஷ்ணர் சியமந்தகமணியையும் ஜாம்பவதியையும் பெற்ற கதை

ஒரு சமயம் யாதவ குலத்தவனான சத்ராஜித்து என்பவன் சூரியனை வழிபட்டதன் பேறாகச் சூரியனிடமிருந்து சியமந்தகமணி என்னும் இரத்தினத்தைப் பெற்றான். அதனால் அவன் நாளாந்தம் பொன்னும் பொருளும் அடையப் பெற்றான். இதனால் அவன் பெருநிதியின் அதிபதியானான். ஒருநாள் அவனின் தம்பி அச்சியமந்தக மணியை எடுத்துத் தன் மார்பில் அணிந்துகொண்டு வேட்டைக்குப் புறப் பட்டுச் சென்றான். காட்டிலே எதிரில் வந்த சிங்கம் அவனைக் கொன்று அச்சியமந்தக மணியையும் எடுத்துச் சென்றது.

அக்காட்டில் வாழ்ந்த இராம பக்தனான ஜாம்பவான் என்னும் கரடி சிங்கத்துடன் சண்டை செய்து சிங்கத்தைக் கொன்று சியமந்தக மணியையும் எடுத்துச் சென்றது. அக்கரடி தன் மகளான ஜாம்பவதி யிடம் அம் மணியைக் கொடுத்தது. ஜாம்பவதி மணியை வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள்.

இதேசமயம் சத்திராஜித்து தனது சியமந்தக மணியைக் காணாது தேடினான். துவாரகாவில் அரசனான கிருஷ்ணர்தான் அந்த மணியைக் கவர்ந்தான் என்னும் அவச் சொல்லைப் பரப்பினான். இதையறிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணர் தன்மீதிருந்த பழிச்சொல்லை நீக்குவதற்காக அந்த மணியைத் தேடிக் கானகஞ் சென்றார். கானகத்தில் ஜாம்பவானின் மகள் விளையாடிக்கொண்டிருந்த சியமந்தக மணியைக் கிருஷ்ணர் கவர முற்பட்டார். அச்சமயம் ஜாம்பவானும் அவ்விடம் வரவும் இருவருக்கும் இடையில் போர் மூண்டது. இருவரும் நெடுநாட்களாகக் கடும்போர் புரிந்தும் ஒருவராலும் வெற்றி பெற முடியாதளவு போர் நடந்தது.

இதேசமயம் கிருஷ்ணரின் தந்தையான வாசுதேவன் தனது மகன் வெகுநாட்களாகியும் வீடு திரும்பவில்லையே என்று கூறி நாரதருடன் ஆலோசித்தார். வாசுதேவன் நாரதரின் சொற்படி மகாசக்தியின் பெருமையை அறிந்து தேவிபாகவதத்தை ஒன்பது நாள் சிரவணஞ் செய்தார். ஒன்பதாம் நாள் தேவியின் பேரருளால் ஜாம்பவான் கிருஸ்ணரை அடையாளங் கண்டு சண்டையை விடுத்துச் சியமந்தக மணியை அவர் கையிற் கொடுத்தான். மேலும் தன்மகள் ஜாம்பவதியைத் திருமணஞ் செய்து இருவரையும் அனுப்பி வைத்தான். வாசுதேவன் தேவிபாகவதஞ் செய்த இறுதிநாளன்று கிருஷ்ணர் சியமந்தகமணியுடனும் ஜாம்பவதியுடனும் வருவது கண்டு யாவரும் மகிழ்ந்தனர். சக்திதேவியின் பெருங்கருணையைப் போற்றிப் புகழ்ந்து இன்புற்றனர்.

## முருகன் சொன்ன கதை

முன்னொரு காலத்தில் சிரார்த்ததேவன் என்னும் அரசன் தனக்கொரு மகப்பேறு கிடைப்பதற்காக வசிட்ட முனிவரை நாடினான். முனிவரின் ஆலோசனைப்படி புத்திரகாமேஷ்டி யாகஞ் செய்தான். யாகஞ் செய்த குருவிடம் சிரார்த்த தேவனின் மனைவி தன் கணவனுக்குத் தெரியாதபடி பெண்குழந்தை கிடைக்க ஏற்பாடு செய்தாள். அதன் பேறாக வேள்வித்தீயிலிருந்து ஒரு பெண்குழந்தை தோன்றியது. இது கண்டதும் விசனமுற்ற சிரார்த்ததேவன் வசிட்ட முனிவருடன் ஆலோசித்து காமேஸ்வரரை வழிபட்டான். வசிஷ்டரின் தவ வலிமையாலும் சக்தி தேவியின் திருவருளாலும் அப் பெண் மகவு அனைவரதும் கண்ணுக்கு முன்னே ஆண் மகனாக மாறியது. யாவரும் தேவியின் பெருங் கருணையை வியந்தனர். தேவியின் திருவருளை மெச்சி அப் பிள்ளைக்கு சுத்துய்மன் எனப் பெயரிட்டு அரவணைத்தனர்.

சுத்துய்மன் தேவியின் அருளால் பலசீருடனும் வளர்ந்து அரசனானான். இவன் ஒரு நாள் வேட்டைக்காக மேரு மலைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரலுக்குச் சென்று ஒரு காட்டை அடைந்தான். முன்னொரு சமயம் அக் காட்டில் இறைவனும் இறைவியும் தனிமையாக இருந்து சல்லாபித்துக் கொண்டிருந்தபோது அவ்வழியே வந்த சில முனிவர்களைக் கண்டதும் தேவி நாணமுற்றாள். இதனால் இக்காட்டுக்கு எந்த ஒரு ஆண் வந்தாலும் பெண்ணாவாள் என்னும் சாபமிருந்தது. இதனை அறியாது தமது உதவி யாட்களுடன் குதிரை மீது வந்ததும் சுத்துய்மனும் குதிரையும் உதவியாட்களும் பெண்ணாக மாறினர்.

சிலகாலம் பெண்ணாக இருந்த சுத்துய்மன் வசிட்ட முனிவரின் ஆலோசனையுடன் பார்வதி பரமேஸ்வரனை வேண்டித் தவமிருந்தான். தவத்தை மெச்சிய இறைவன் அவன் மீது மனமிரங்கி ஒரு மாதம் ஆணாகவும் ஒரு மாதம் பெண்ணாகவும் இருக்கலாமென வரம் தந்து மறைந்தருளினர். அச் சமயம் அங்கு தோன்றிய சக்திதேவி வசிட்டரை நோக்கி சுத்துய்மனின் அரண்மனைக்குச் சென்று தேவிபாகவதத்தை முறைப்படி ஒன்பது நாளும் சிரவணஞ் செய்யுமாறு கூறினாள். அப்படியே இருவரும் சுத்துய்மனின் அரண்மனையை அடைந்து பக்தி சிரத்தை யுடன் சிரவணஞ் செய்து நிரந்தரமாகவே ஆணுருவில் இருக்கத் தேவியின் அருள் பாலித்தது. பலகாலம் சக்தியை இடையறாது வழிபட்டுத் தேவியின் சாயுச்சிய பதவியை அடைந்தான்.

## தீய சிந்தனையுடைய மகனைத் திருத்துவதற்காக நடந்த கதை

முன்னொரு காலத்தில் ரிதவாக் என்னும் முனிவருக்கு ரேவதி நட்சத்திரத்தில் ஒரு மகன் பிறந்தான். இவனின் பிறப்பைக் கண்டாந்தம் எனச் சோதிட நூல் கூறுகிறது. அதன் பேறாக அவன் தமது குலத்துக்கு மாறான தீய வழியிற் சென்று யாவரையும் துயரில் ஆழ்த்தினான். ரிதவாக் மகரிஷி தமது மகனின் சாதகக் கிரகநிலை பற்றி அறிவதன் பேரில் "கர்க்க மகரிசி"யை நாடினார். அவரின் ஆலோசனைப்படி துர்க்காதேவியைப் பூசித்தார். தேவியின் அருளால் துன்மார்க்கன் நல்லவனாக மாறினான். பெற்றோரும் ஏனையோரும் சக்திதேவியின் திருவருளை வியந்து மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரேவதியின் கதை

ரேவதி நட்சத்திரத்தில் பிறந்த தன் மகன் துன்மார்க்கத்தில் இருப்பதைக் கண்டு சினமடைந்த ரிதவாக் மகரிசி ரேவதி நட்சத்திரத்தை வானிலிருந்து விழுமாறு சபித்தார். சாபமடைந்த ரேவதி வானிலிருந்து பூமியில் விழுந்தது. வீழ்ந்ததும் அதன் ஒளியிலிருந்து ஒரு பேரிளம் பெண் தோன்றினாள். இவ்விடத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த பிரமுகர் என்னும் முனிவர் அப்பெண்ணை எடுத்து ரேவதி என்னும் நாமஞ்சூட்டி வளர்த்தார். இதேசமயம் வேட்டையாட வந்த துர்த்தமன் என்னும் அரச குமாரன் ரேவதியைக் கண்டான். அவளின் பேரழகைக் கண்டதும் அவள் மீது மையல் கொண்டான். விதி வசத்தால் இளவரசனின் சிந்தனையை உணர்ந்த முனிவர் ரேவதியை அவனுக்கே திருமணஞ் செய்து வைத்தார். முனிவர் துர்த்தமனை நோக்கி உனக்கு வேண்டிய ஒரு வரத்தைக்கேள் தருகிறேன் என்றார். அவன் தன்குலம் சிறக்க ரேவதி மூலம் ஒரு சற்புத்திரனை அடையவேண்டுமெனக் கேட்டான்.

முனிவர் அவனை நோக்கிச் சக்திதேவியைத் துதித்துத் தேவிபாகவதத்தைச் சிரவணஞ் செய்தால் “ரைவதன்” என்னும் பெயர் கொண்ட மகன் பிறப்பான். அவனே ஐந்தாவது மன்வந்தராதிபதியாக விளங்குவான் என்றார். துர்த்தமன்னன் ரேவதியையும் அழைத்துக் கொண்டு தன் நாட்டை அடைந்தான். ஒரு சமயம் லோசமர் என்னும் முனிவர் மன்னனிடம் வந்தார். மன்னன் தேவிபாகவதத்தை லோசம முனிவர் மூலம் முறைப்படி சிரவணஞ் செய்தான். தேவியின் அருளால் கருவுற்ற ரேவதி ஒரு அழகிய புதல்வனைப் பெற்றெடுத்தாள். அப் பிள்ளைக்கு ரைவதன் எனப் பெயர் சூட்டி வளர்த்தனர். அவன் சக்திதேவியின் கருணையினால் வளர்ந்து சகல கலைகளையும் பயின்று தமது அரசகுலம் சிறக்க நற்புகழீட்டினான்.

# நாராயணர் செய்த தேவியின் யாகம்

முன்னொரு காலத்தில் சக்திதேவியின் ஆணைப்படி மும் மூர்த்திகளும் தத்தமது தேவியருடன் வந்து தமது பணிகளைச் செய்யத் தொடங்கினர். விஷ்ணு வைகுண்டத்தில் மகாலட்சுமியுடன் மகிழ்ந்திருந்தார். அச் சமயம், பாற்கடலில் பள்ளி கொண்டிருந்த வேளை பாற்கடலில் அமைந்த இரத்தினத்தீவில் தோன்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராசக்தியை நினைத்துத் தியானித்தார். பின்னர் வைகுண்டத்தி லிருந்து கைலாயஞ் சென்று மகாதேவரையும் அழைத்துக்கொண்டு தேவியக்ஞஞ் செய்ய முனைந்தார். அதன் காரணமாக பிரம்மா, இந்திரன், வருணன், குபேரன் முதலியோரை வரவழைத்தார். மேலும் வசிட்டர், காசிபர், தக்ஷன், வாமதேவர், பிரகஸ்பதி, தேவப் பிரம்ம ரிஷிகள் யாவரையும் வரவழைத்தார். யாகத்துக்குரிய சகல பொருட்களையும் சேகரித்தார். சிறந்த விசாலமான யாகசாலையை அமைத்து நன்கு அலங்காரஞ் செய்வித்தார். யாக மண்டபம் அலங்கரிக்கப்பட்டதும் யாகத்தைத் தொடக்கினார். தேவியின் மந்திரங்களை பீஜாஷ்கரங்களோடு ஆரம்பித்தனர். வேதியர்கள் ஆசார சீலர்களாக விதிமுறைப்படி பிரதிஷ்டை செய்த அக்கினி குண்டத்தில் அவிசுகளைச் சொரிந்தனர். அச்சமயம் விண்ணிலிருந்து ஒரு அசரீரி பின்வருமாறு ஒலித்தது.

"விஸ்ணுவே தேவர்களுட் சிறந்தவராகவும், சாமர்த்திய சாலியாகவும் யாவராலும் மதிக்கப்படக்கூடியவராகவும் பிரம்மா உருத்திரரும் பக்தி செலுத்துபவராகவும், யாவருக்கும் வரங்கள் தருபவராகவும் விளங்குவாய் சகல சம்பத்துக்களும் உடைய வனாகவும், உன்னை நாடிவரும் தேவர்களான அமரர்களுக்கு நிம்மதியையும், ஆனந்தத்தையும் கொடுப்பாய். அதனால் ரட்சகமூர்த்தி என்று வழங்கப்படுவாய். எப்போது தர்மம் அழிகிறதோ அப்போது உனது ஓர் அம்சத்தினால் பூமியில் அவதரித்து தர்மத்தை நிலை நாட்டுவாய். எத்தகைய அவதாரங்களை எடுத்தாலும் என் அம்சமான வராகி, நரசிங்கி போன்ற சக்திகளே உன்னிடம் தோன்றி எனக்கே புகழைத்தரும் பல்வேறு இழிவான யோனிகளிற் பிறந்தாலும் முடிவில் புகழையே பெறுவாய். இதுவே உனக்குத் தரும் வரங்களாகும். அவ்வவ் அவதாரங்களில் கிடைக்கும் சக்திகளே உலகில் நிலைத்து நின்று அருள் பாலிக்கும். இச் சக்திகளால் உன்னையும் இவர்களுடன் சேர்த்து விக்கிரங்களாக அமைத்து வழிபடுவார்கள்" என அசரீரி ஒலித்தது. நாராயணனான விஷ்ணுமூர்த்தி தொடர்ந்து தமது யாகத்தைச் செய்து நிறைவு கண்டார். இதன் பின் தேவியைப் போற்றி வழிபடும் வழக்கம் தோன்றி பிரபலமடைந்தது. இவ்வரலாற்றினால் இன்று சக்தி வழிபாடு சிறப்புற்றிருப்பதை நாம் அறிய முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமகளைப் பார்த்து திருமால் சிரித்தகதை

முன்னொருகாலத்தில் திருமாலின் தலை வில்லினால் அறுபட்டபோது தேவர்கள் பராசக்தியை வேண்டிப் பலவாறு துதித்து அபயமளிக்குமாறு வேண்டினர். அப்போது பராசக்தியானவள் திருமாலின் தலை அறுந்துபோகுமாறு இட்ட சாபத்தினை நினைவு கூர்ந்தாள். ஒரு சமயம் திருமால் தன் அருகிருந்த மகாலட்சுமியின் அழகிய முகத்தைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார். இதனால் விசனமடைந்த மகாலட்சுமி தன் கணவன் வேறொரு பெண்ணை ஆசை நாயகியாக வைத்திருப்பதாகவும் அவளிலும் தான் கேவலமாகக் காட்சியளிப்பதாகவும் எண்ணியே சிரித்தான் என எண்ணினாள். உடனே கடுங்கோபங்கொண்டு தன் கணவனை நோக்கி "என்னைப் பார்த்துச் சிரித்த உமது தலை அறுந்து போகட்டும்" எனச் சாபமிட்டாள். அதுவே திருமாலுக்கு வினையாக வந்ததெனப் பராசக்தி நினைவூட்டினாள்.

## திருமால் ஹயக்கிரீவரான தோற்றம்

முன்னொரு காலத்தில் பன்னெடுங்காலமாக அசுரர்களுடன் போர் புரிந்ததினால் களைப்புற்றிருந்த திருமால் தமது வில்லை நிலத்தில் நிறுத்தி அதன் மேல் முனையின் மீது தமது முகநாடியை வைத்தவாறு உறங்கிவிட்டார். இதேசமயம் இந்திராதி தேவர்கள் அவசியமாகச் செய்யவேண்டிய யாகத்துக்காகத் திருமாலைத் தேடினர். திருமால் அழைக்க முடியாத வண்ணம் உறக்கத்தில் இருந்தார். தமது அவசிய நோக்கமாக இந்திரன் செல் (கறையான்) உருவெடுத்து நிலத்திற் குத்திய வில்லின் முனையில் கட்டப்பட்டிருந்த நாணை அறுத்தான். இதனால் வில் பெருஞ்சத்தத்துடன் மேலெழுந்தது. வில்லின் முனை எழுந்த வேகத்தால் திருமாலின் தலை துண்டிக்கப்பட்டது. இதனைக் கண்ட தேவர்கள் அனைவரும் அஞ்சி நடுங்கியவாறு சக்திதேவியிடம் தமக்கு உதவுமாறு வேண்டினர்.

சக்திதேவி திருமாலின் தலை துண்டிக்கப்பட்டதற்குத் திருமகளின் சாபத்தை விபரித்தார். மேலும் பிரமதேவனை நோக்கி பாய்ந்தோடும் குதிரையின் தலையை வெட்டித் திருமாலின் உடம்புடன் பொருத்துமாறு பணித்தாள். பிரம்மதேவரின் முயற்சியால் திருமால் ஹயக்கிரீவர் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொரு காலத்தில் ஹயக்கிரீவன் என்ற அசுரன் தோன்றினான். அவன் தனக்கு வேறெவராலும் மரணம் ஏற்படக் கூடாதென்றும் தன் பெயரால் மட்டும் ஏற்படவேண்டுமென்றும் பராசக்தியிடம் வரம் கேட்டிருந்தான். மகாசக்தியும் ஒரு ஹயக்கிரீவனால் உனது மரணம் ஏற்படுமென்றும் வரம் தந்தாள். அசுரன் தான் பெற்றவரத்தால் மூவுலகத்தோரையும் துன்புறுத்தினான். இதன் பேறாகத் தேவர்களும் முனிவர்களும் முறையிட மகாவிஷ்ணுவான ஹயக்கிரீவரால் அசுரன் கொல்லப்பட்டான்.

## மதுகடைபரின் போர்வெறியும் வதமும்

முன்னொரு காலத்தில் சமுத்திரம் பெருக்கெடுத்ததினால் மூவுலகமும் நீரில் மூழ்கியது. திருமால் கடல் நடுவே ஆதிசேடனான அரவணையில் துயில் கொண்டிருந்தார். அப்போது அவரின் காதுகளிலுள்ள அழுக்கிலிருந்து மது, கடைபர் என்னும் இரு கொடிய அசுரர்கள் வெளி வந்தனர். அவர்கள் அக்கடலில் வாழ்ந்து வந்தனர். நாட்கள் செல்லத் தமது பூர்வீகத்தை ஆராய முற்பட்டனர். யாவற்றையும் இயங்க வைக்கும் சக்திதேவியை வேண்டி தமது எண்ணத்தை நிறைவேற்ற எண்ணினர். இதற்காகப் பன்னெடுங்காலம் கடுந்தவமியற்றினர். சக்திதேவி நேரிற்தோன்றவும் தாம் விரும்பும்போதுதான் மரணம் ஏற்படவேண்டுமென வரம் பெற்றனர். வரம் பெற்ற அசுரர்கள் தம்முடன் கடலில் வாழும் உயிரினங்களோடு கலந்துறவாடிக்கொண்டிருந்தனர்.

ஒருநாள் பிரம்மா அசுரர்களைச் சந்திக்க நேர்ந்தது. தாம் பெற்ற வரத்தின் பெருமையால் மமதை கொண்ட மது, கடைபர் என்னும் இரு அசுரர்களும் தமது போர் வெறியை நிரூபிப்பதற்காகப் பிரம்மாவைப் போருக்கழைத்தனர். இதனால் பயங்கொண்ட பிரம்மா செய்வதறியாது ஓடிச் சென்று மகாவிஷ்ணுவை நாடினார். மகாவிஷ்ணுவோ நித்திராதேவியின் அரவணைப்பில் இருந்ததால் பிரம்மாவால் ஏதுஞ் செய்ய முடியவில்லை. தமது பயந்த நிலையை எண்ணிய பிரம்மா யோகசக்தியைத் துதித்துத் தன்கவலையை நீக்குவதற்காக நித்திரா தேவியின் வசப்பட்ட திருமாலைத் துயிலெழுப்புமாறு துதித்தார். அம்பிகையின் பேரருளால் திருமால் துயிலெழுந்தார். அப்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர்களுக்கு அஞ்சி நடுங்கிய வண்ணம்நின்ற பிரம்மா பிதாவே உங்கள் காதுகளின் அழுக்கிலிருந்து உருவான அசுரர்கள் என்னைத் துரத்தி வருகின்றனர். எனவே நான் பயந்து உங்களைச் சரணடைந் தேன் என்றார். திருமால் மகனுக்கு ஆறுதல் தந்து அசுரர்களைக் கொலை செய்வதாகவும் உறுதியளித்தார்.

அச்சமயம் அசுரர்கள் மீண்டும் போருக்கழைத்தனர். மகா விஷ்ணு தாமே போராடச் சென்று பல்லாண்டுகாலம் ஒருவர் மாறி ஒருவருடன் போராடி இழைத்தார். அசுரர்களை வெற்றி கொள்ளும் வேறு மார்க்கத்தை எண்ணினார். பராசக்திதேவியை நினைத்த வண்ணம் விண்ணை நோக்கினார். அங்கு தோன்றிய சக்திதேவியின் உந்துதலில் தொடர்ந்து போரிட்டார். போர் தணியவில்லை. பராசக்தி போர் முனையில் ஜெகன்மோகினியாகக் காட்சி தந்தாள். அசுரர்கள் மோகினியின் மையலில் கூடிய கவனஞ் செலுத்தினர். போர் தளர்வுற்றது. அச்சமயம் மகாவிஷ்ணு அவர்களை நோக்கி உங்கள் போர்த்திறனை மெச்சினேன். வேண்டும் வரம் யாதெனக் கேட்டார். நாங்கள் உன்னிடம் வரம் கேட்கவில்லை. உனது திறனை மெச்சி னோம். உனக்கு வேண்டிய வரம் யாதெனக் கேட்டனர். அச்சமயம் மகிழ்ந்த மகாவிஷ்ணு எனக்கு உங்களைக் கொல்லும் வரம் வேண்டு மென்றார். செய்வதறியாத அசுரர்கள் வரம் தந்தனர்.

மகாவிஷ்ணு தமது சுதர்சனம் என்னும் சக்கராயுதத்தால் அசுரர் களின் தலையை அறுத்தெறிந்தார். இவ்விடத்தில் மகாவிஷ்ணுவின் வீரமோ சூழ்ச்சியோ அசுரர்களைக் கொல்லவில்லை. ஜெகன்மோகினி யாக வந்த சக்திதேவியின் திறமையே அசுரர்களை அழித்தது.

## சத்திய விரதனின் கதை

முன்னொரு காலத்தில் வியாசமுனிவர் தீர்த்த யாத்திரை யின்போது நைமிசாரண்யவனத்தை அடைந்தார். அவ்வனத்திலிருந்த பலமுனிவர்களிற் சிறந்த யமதக்கினி முனிவர் ஏனையவர்களை நோக்கி நாம் வணங்கும் தேவாலயங்களில் வணக்கத்துக்குரியவரும் விரைவில் நாம் வேண்டுவதை எளிதில் தருபவருமான அருள் புரியக்கூடியவர் யாரெனக்கேட்டார். அப்போது அங்குள்ள லோமசர் என்பவர் கேட்ட மாத்திரத்தே அதிவிரைவில் அருள் தருபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாசக்தியான தேவியாவாள் என்றார். மேலும் அவர் தொடர்ந்து கோசல நாட்டில் தேவதத்தன் என்னும் அந்தணர் வாழ்ந்தார். அவருக்குப் பிள்ளைகள் இல்லாத காரணத்தால் புத்திரகாமேஷ்டி யாகஞ் செய்ய முற்பட்டார்.

அவ்வேதியர் தமசா என்னும் நதிக்கரையில் யாகசாலை அமைத்துச் சிறந்த வேதவல்லுனர்களான அந்தணர்கள் மூலம் உரிய விதிமுறைப்படி யாகத்தைத் தொடங்கினார். யாகம் நடந்துகொண்டிருந்த வேளை சாமவேதகானம் இசைத்த கோபிலர் என்பவர் சப்தரசத்துடன் கூடிய ரந்திர என்ற சாமத்தை ஸ்வரத்துடன் இசைக்கும்போது தமது மூச்சை அடக்கி இசைக்க முடியாது மூச்சை விட்டு ஸ்வர பங்கமாக இசைத்தார். இதை அவதானித்த தேவதத்தன் கோபங்கொண்டு "ஓய் மகரிஷியே மகப்பேற்றுக்காக நடாத்தும் இந்தச் சுப யாகத்தில் ஏன் ஸ்வரஹீனமாகப் பாடுகிறீர்" என்றார். இதைக் கேட்டதும் கோபிலரும் கோபத்துடன் எனது தளர்வான உடல் நிலைமைக்கேற்ப மூச்சை விட்டே இசைத்தேன். இதனால் ஸ்வர பங்கம் ஏற்பட்டது. இதை அறியாமல் நீ என்னை மூடனென்று நிந்தித்த காரணமாக உனக்கும் பிறக்கும் பிள்ளை மூடனாகவும் முரடனாகவும் ஊமையாகவும் பிறக்கக்கடவது எனச் சபித்தார். உடனே தேவதத்தன் கோபிலரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கிச் சாபவிமோசனங் கேட்டான். சற்று மனமிரங்கிய கோபிலர் மூடனாகப் பிறந்தாலும் ஒரு காலத்தில் ஒரு நல்ல வித்துவானாக வருவான் எனக்கூறினார்.

யாகத்தின் பேறாக தேவதத்தனுக்கு உதத்தியன் என்னும் ஆண்மகவு கிடைத்தது. ஆனால் அவன் கல்வி ஏறாத மூடனாகவே இருந்தான். இவனின் அறிவின்மையால் யாவரும் மூடன் என்றே இகழ்ந்தனர். இவன் தனது பன்னிரண்டாம் வயதில் எவருக்கும் தெரியாமல் வீட்டிலிருந்து புறப்பட்டு வேறொரு காட்டுக்குச் சென்றான். கங்கைக் கரையில் ஒரு ஆச்சிரமம் அமைத்து பொய் சொல்லாமை என்னும் விரதத்தைக் கைக்கொண்டு காய்கனிகள் மட்டும் புசித்து வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இரு வருடங்கள் கழிந்த பின் தான் ஏன் மூடனாக இருக்க வேண்டும் ஒரு தெய்வத்தை வழிபட்டு கடைத்தேற வேண்டுமென எண்ணினான். ஒரு நாள் இவன் தனது ஆச்சிரமத்தில் இருந்தபோது வேடனால் தாக்கப்பட்ட பன்றி ஒன்று உடல் தளர்ந்து ஓடச் சக்தியற்ற நிலையில் இவனது காலடியில் வீழ்ந்தது. அப் பன்றியானது வரும்போது ஹ்ரு ஹ்ரு என்ற ஓசையுடன் வந்ததை அவதானித்த சத்திய விரதன் அதன் மீது இரக்கங் கொண்டதுடன் அதன் குரலையும் அறிந்து கொண்டான். அவன் ஊமையாக இருந்ததனால் வேறு குரல் கொடுக்க முடியாது ஹ்ரு ஹ்ரு என்று கூறி ஓலமிட்டான்.

சத்திய விரதனின் பூர்வ புண்ணிய வசமாக அவன் கூறியவை சக்தியின் திருவருளால் தேவியின் ஸ்ரீவித்தியா மந்திரசாயலான பீஜாக்ஷர உச்சரிப்பாக அமைந்தது. அப்போது அப்பன்றியும் வேதனையுடன் ஒரு புதரினுள் மறைந்தது. அச்சமயம் ஒரு வேடுவன் வந்து தன்னால் அடிபட்ட பன்றி எங்கே எனக்கேட்டான். ஏற்கனவே அவன் கடைப்பிடித்த சத்தியவிரதப்படி ஒருவருக்கும் கெடுதி யில்லாமல் பன்றி பதுங்கியிருந்த புதரருகே சென்று ஹ்ரு ஹ்ரு எனக்கூறிக் கூச்சலிட்டான். அவன் கூறிய சொற்களின் அதிதேவதை யான சக்திதேவி சத்திய விரதன் முன் தோன்றி அவனுக்குச் சகல வித்தைகளையும் தந்தருளி மறைந்தருளினாள். அக்கணமே அவன் சகலவற்றையும் கற்றுணர்ந்தவனாகி வித்யாபதியாகவும் வால்மீகி போன்ற மகாகவியாகவும் மாறினான். அப்போது சத்திய விரதன் தன் எதிரில் நின்ற வேடனை நோக்கி "யாபஸ்யதி" என்ற ஒரு சுலோகத்தைச் சொன்னான். அச்சுலோகம் பின்வருமாறு பொருள் தரும்.

"எவன் காண்கிறானோ அவன் சொல்வதில்லை
எவன் சொல்கிறானோ அவன் காண்பதில்லை
உடலின் பயனையே கருதியுள்ள வேடனே
அடிக்கடி என்ன கேட்கிறாய் ஆ விந்தையிதே"

என்ற பாடலைக் கேட்ட புண்ணிய வசத்தால் வேடன் அவ்விடம் விட்டகன்றான். தேவியின் கருணையால் சத்திய விரதன் மகாபண்டித னானான். தனது ஆற்றலினால் சத்தியத்தில் ஆர்முள்ளவனாகவும் பிற உயிர்களிடத்து அன்புள்ளவனாகவும் தமது ஆச்சிரமத்திலமர்ந்து ஸ்ரீ வித்தியை விதிமுறைப்படி துதித்துப் பிரபலமடைந்தான். இவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையை ஏனைய மகரிசிகளும் கண்டு வியந்துபோற்றினர். சத்திய விரதனின் பெற்றோரான தேவதத்தன் ரோகினி ஆகியோர் அவனின் பெருமையை அறிந்ததும் அங்கு வந்து மகனைக் கண்டு வியந்தனர். தமது இல்லத்துக்கு மகனையும் அழைத்துச் சென்று இன்புற்றனர்.

சக்தியின் பேரருளினால் ஊமையாகவும் மூடனாகவும் இருந்தவன் சத்தியவிரதம் காத்துத் தேவியின் அருள் பெற்ற மகா பண்டிதனானான்.

## துருவசித்துவின் கதை

முன்னொரு காலத்தில் அயோத்தியை ஆண்ட துருவசித்து என்பவன் சிறப்புடன் செங்கோலோச்சினான். இவனுக்குப் பட்டத்து இராணியிடம் சுதர்சனன் என்னும் மகனும் காமக்கிளத்தியாகிய லீலாவதி மூலம் சத்துருஜித் என்னும் மகனும் பிறந்தனர். மன்னன் தனது மனைவிகள், மகன்களை நன்குபேணி வளர்த்து வந்தான்.

ஒரு நாள் துருவசித்து காட்டுக்கு வேட்டையாடச் சென்றபோது சிங்கத்தினாற் கடியுண்டு மாண்டான். பட்டத்து இராணியின் மகனான சுதர்சனனுக்கு பட்டஞ்சூட்டுவதற்காக மந்திரிமார் ஏற்பாடுகளைச் செய்தனர். இதேவேளை லீலாவதியின் தந்தையும் உஜ்ஜயினிப் பட்டினத்து அரசனுமான யுதாசித் என்பவன் தனது பேரனான சத்துருஜித் என்பவனுக்கே முடிசூட்ட வேண்டுமென்று வாதாடினான். அதையறிந்த பட்டத்து இராணியான மனோரமையின் தந்தையான கலிங்க தேசத்து மன்னன் வீரசேனன் உரிய முறைப்படி தனது பேரனான சுதர்சனனுக்குத்தான் முடிசூட வேண்டுமென்று வாதாடினான். இதனால் ஏற்பட்ட போரில் வீரசேனன் மாண்டான். யுதாசித் சுதர்சனனைக் கொல்ல முயன்றான்.

இராணியான மனோரமை தனது மகன் சுதர்சனனைக் காப்பாற்றும் நோக்கமாக மந்திரி ஒருவரின் உதவியுடனும் ஒரு தாதியுடனும் கங்கையைக் கடந்து சென்றனர். திரிகூட மலைக்குச் சென்று பரத்வாச முனிவரிடஞ் சரணடைந்தனர். முனிவரின் ஆசியுடன் இராணியும் மகனும் ஆச்சிரம வாழ்வில் இணைந்தனர். சுதர்சனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிகுமாரர்களுடன் விளையாடி மகிழ்ந்தான். ஒரு நாள் அரசைக் கைப்பற்றிய யுதாசித் சுதர்சனனைக் கொல்வதற்காகத் தனது படைகளுடன் வந்து பரத்வாச முனிவருடன் வாதிட்டான். முனிவரின் பேச்சுக்கு மறுத்துரைத்து வாதிட்டால் கேடு விளையும் என மந்திரி கூறியதும் அவ்விடம் விட்டகன்றான்.

ஒருநாள் சுதர்சனன் தனது ஐந்து வயதில் வேறு பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டிருந்தான். மனோரமையுடன் இருந்த ஒரு பேடியை முனி புத்திரன் ஒருவன் "ஓக்ளீபனே" (ஆண்மையற்றவனே) இங்கு வா என்று கூப்பிட்டான். கூட நின்ற சுதர்சனன் இதன் முதல் எழுத்தை நன்றாகத் தெரியும் வரை எட்டு ஆண்டுகளாக அடிக்கடி உச்சரித்து வந்தான். காமராஜம் என்ற பீஜாக்ஷரம் அதுவாகையால் அதை உச்சரித்து வந்த சுதர்சனனுக்கு பூர்வ ஜென்மப்படி அது பயன்கூடலாயினது. அவன் உச்சரித்த தேவியின் மந்திரத்தின் பயனாக பரத்வாச முனிவர் கற்றுத் தந்த வேதங்கள், கலைகள், வித்தைகள் யாவற்றையும் இலகுவில் கற்றுத் தேறினான். அவன் தானாகவே பல சாஸ்திரங்களிலும் பண்டிதனாகி தனது தாய்க்கும் வேண்டிய பணிவிடைகளைச் செய்து வந்தான். ஓய்வு நேரங்களில் கங்கைக் கரையோரம் உலாவி வந்தான்.

ஒருநாள் தேவியானவள் சிவந்த நிறமும் செந்நிற ஆடைகளுடனும் சிவந்த ஆபரண அலங்காரங்களுடனும் சிங்க வாகனமீதமர்ந்து மகாலட்சுமியாக சுதர்சனனுக்குக் காட்சி தந்தாள். அவள் ஒரு சிறந்த வில்லையும் கூர்மையான அம்புகளையும் அம்பறாத் தூணிகளையும் வஜ்ர கவசத்தையும் அவனுக்குக் கொடுத்துவிட்டு மறைந்தருளினாள். அச்சமயம் அவ்வழியால் சென்ற காசிராசனின் தூதுவர்கள் இதனைக் கண்டனர். ஒருசிலர் சுதர்சனனின் அழகைக் கண்டு வியந்தனர். அவர்கள் காசிக்குச் சென்றதும் சுதர்சனனின் அழகையும் தோற்றத்தையும் காசிராசனின் மகள் சசிகலைக்குச் சொல்லி வியந்தனர். இதைக் கேட்டதும் சசிகலை சுதர்சனனையே தன் மனதிற் பதித்துக் காதல் கொண்டாள். ஒரு நாளிரவு இராஜராஜேஸ்வரி அவளின் கனவிற் தோன்றி "பெண்ணே நீ அறிந்த சுதர்சனன் என் பக்தன். அவனையே நீ திருமணஞ் செய்துகொள்வாய்" என்று கூறி மறைந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் வசப்பட்ட சசிகலை ஊண் உறக்கமின்றி வாடிப்போய் இருப்பதைத் தாய் கேட்டபோதும் நாணத்தால் உண்மை சொல்ல வில்லை. ஆனால் தனது உண்மைத் தோழியிடம் மட்டும் தனது நிலையைத் தெரிவித்தாள். ஒருநாள் மாலை தன் தோழியுடன் நந்தவனத்தில் பூப்பறித்தபோது அவ்வழியே வந்த வேதியரை அழைத்த சசிகலை எங்கிருந்து வருவதாகக் கேட்டாள். வேதியர் தான் பரத்வாச முனிவரின் ஆச்சிரமத்திலிருந்து வருவதாகக் கூறினார். அவ்வேதியர் மூலம் சுதர்சனனைப் பற்றி நன்கறிந்து தனது காதலுக்கு உரமூட்டினாள். சுதர்சனனையே மணப்பதாகவும் உறுதி பூண்டாள்.

## சசிகலையின் காதல்

எழில்மிகு தோற்றமும், இளமையும் கொண்ட இளவரசி சசிகலை பரத்வாச முனிவரின் ஆச்சிரமத்திலிருந்து வந்த அந்தணர் சுதர்சனனைப் பற்றிக் கூறிய வார்த்தைகளால் நன்கு கவரப்பட்டுத் தன்னைச் சுதர்சனனுக்கே அர்ப்பணிக்க திடசங்கற்பம் பூண்டாள். வேதியரை அனுப்பிய பின் சுதர்சனனின் உருவத்தைத் தோழியின் உதவியுடன் கற்பனையில் தோற்றுவித்தாள். காதலின் வேதனையால் தவித்தாள். பெற்றோரான சுபாகு மன்னனும் அரசியும் மகளின் நிலை கண்டு அவளின் இசைவுடன் சுயம்வரம் நாட்ட முன்வந்தனர்.

ஒருநாள் ஜெகன் மாதாவான மகாதேவி சுதர்சனனின் கனவிற் தோன்றினாள். மறுநாள் சிருங்கோபுரத்து வேடராசன் வந்து சுதர்சனன் வெற்றி வீரனாகத் திகழ்வதைக் கண்டு அவனுக்கு வீரக் கொடிகளையும் பதாதைகளையும் நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியையும் பெரு நிதியையும் தந்தான். அவனைக் கட்டித் தழுவி அன்பினால் உறவாடி மகிழ்ந்தான்.

காசிராசனும் மனைவியும் தமது மகளிடம் சுயம்வரம் பற்றிக் கேட்டதும் தனது காதலனான சுதர்சனனையேயன்றி வேறொருவரை யும் ஏற்க மறுத்தாள். இதைக் கேட்ட பெற்றோர் சுதர்சனன் அரச குமாரனாக இருந்தாலும் நாடு நகரமின்றி, அரசின்றி, படைபலமின்றிக் காட்டில் காய் கனிகளையே உண்டு அனாதை போல் இருப்பதாகவும் இளவரசியான சசிகலைக்குகந்தவன் அல்ல என்றும் உரைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சசிகலை தனது திருமண விடயத்தில் சுதர்சனனையேயன்றி வேறு மாற்றமில்லையென்றும் உறுதியாகக் கூறினாள். இதனால் தம் மகளுக்கு இச்சா சுயம்வரம் நடாத்த ஏற்பாடு செய்தனர். (முற்காலத்தில் அரசர்கள் தமது புதல்வியரின் விருப்பத்திற்கேற்ப கணவனைத் தெரிந்தெடுத்து மாலையிடுவது இச்சா சுயம்வரம் என்று அழைக்கப் பட்டது. பந்தயச் சுயம்வரம் என்பது ஒரு போட்டியை முன்வைத்து அதில் வெல்பவனுக்கு மாலையிடுவது. மூன்றாவது வீர சுயம்வரம் வீரத்தினால் ஒரு கன்னியை மனைவியாக ஏற்பது)

சசிகலையின் இச்சா சுயம்வரத்துக்காக எல்லா நாட்டரசர்களும் கூடி வந்தனர். இதேநேரம் சசிகலை நாளை நடைபெறும் சுயம்வரத்தில் தவறாது சமூகமளிக்குமாறு சுதர்சனனுக்குச் சொல்லியனுப்பினாள். குறிப்பிட்டபடி சுயம்வரத்துக்காகப் பல்வேறு நாட்டு மன்னர்களும் வந்திருந்தனர். அயோத்தி மன்னனான சத்துருஜித்துவும் அவனுடன் பேரனான யுதாசித்துவும் வந்திருந்தனர்.

குறிப்பிட்ட நாள் நேரத்துக்குச் சுயம்வர மண்டபத்தில் சகல மன்னர்களும் சமூகமளித்திருந்தனர். சசிகலை சுயம்வரத்துக்கென அறிவித்த நேரத்துக்கு வர மறுத்தாள். இதனால் பெரிய குழப்பம் ஏற்பட்டது. சுபாகு மன்னன் சபையில் வந்து மகளின் மன மாற்றத்தினால் மறுநாள் சுயம்வரம் நடக்கும் எனக்கூறிவிட்டு அங்கிருந்த அனைவரிடமும் மன்னிப்புக் கோரினார். அன்றிரவு சுதர்சனன் சசிகலையின் திருமணம் யாவருமறியாமல் ஆசார முறைப்படி நடந்தேறியது. இதனை அறிந்த ஏனைய அரசர்கள் திரண்டு போருக்கு ஆயத்தமானார்கள். காசிராசனின் அரண்மனையைச் சூழ முற்றுகையிட்டுச் சுதர்சனனைத் தாக்குவதற்கு முற்பட்டனர்.

## தம்பதியினரின் வழியில் ஒரு போராட்டம்

சுபாகு மன்னன் தனது மருமகனுக்குத் தக்க மரியாதைகளைச் செய்து மணமக்களை வாழ்த்தினான். அதிசிறப்புடைய கௌரவ விருது களும் தந்து உபசரித்தான். மணமக்களை நன்கு உபசரித்து எமது கடமைகளை நிறைவேற்றினோம். இவர்கள் வெளியேற விடாது நகர், கோட்டை வாசலில் சூழ்ந்துள்ள பகைவர்களின் படைகளை விலக்கிச் செல்வது எப்படி என மந்திரிகளுடன் ஆலோசித்தான். உடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதர்சனன் மாமனை நோக்கி நீங்கள் வருந்தாது வழியனுப்பி வையுங்கள். நாங்கள் எவருக்கும் அஞ்சாது பரத்வாச முனிவரின் ஆச்சிரமத்தை அடைவோம் என்றான். உலகமாதாவான தேவி உமக்கும் ஒரு தீங்கும் வராது காப்பாள் என்று கூறிவிட்டு மாமனார் தந்த சீர்வரிசைகள், பொன் பொருட்கள், படை வரிசைகளையும் திரட்டிக் கொண்டும் தாயாரையும் தனது புத்திளம் மனைவியையும் தேரில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டான். அவன் புறப்படும்போது கோட்டை வாசலில் பகை அரசர்கள் வருவதைக் கண்டதும் தன் இதயத்திலிருந்த மகேஸ்வரியான சக்திதேவியைத் தியானித்தான். "தாயே நான் உன் அடைக்கலம்" என்று கூறிவிட்டு உயிராபத்து ஏதும் நேரிடாதவாறு காமராஜம் என்னும் ஓரெழுத்து மந்திரத்தை ஓயாமல் ஓதிக்கொண்டிருந்தான்.

பகை அரசர்கள் சுதர்சனனைக் கொல்லவும் பெண்ணின் கற்பைச் சூறையாடவும் எண்ணிப் பொங்கியெழுந்து வந்து சூழ்ந்தனர். சுபாகு மன்னன் தனது படைகளைத் திரட்டிப் போருக்கு ஆயத்த மானான். இரு பகுதியினருக்குமிடையில் போர் மூண்டது. சுதர்சனன் சக்திதேவியின் தியானத்திலிருந்தான். அச்சமயம் மகாதேவி சிவந்த ஆடை அணிகளுடன் மந்தாரை மாலையணிந்த வண்ணம் சகல விதமான ஆயுதங்களையும் கையில் ஏந்தியபடி சிங்க வாகனத்தில் ஏறி காட்சி தந்தாள். அங்கு வந்த தேவியையும் சிங்க வாகனத்தையும் கண்ட பகையரசர்களெல்லாம் இது என்ன அதிசயம், யார் அந்தப் பெண் எனவும் எங்கிருந்து சிங்க வாகனத்தை ஓட்டி வந்தாள் எனவும் பலவாறு குழம்பித் திகைத்தனர். அப்போது சுதர்சனன் மாமனாரான சுபாகு மன்னனை நோக்கி நமக்குக் காட்சி தரும் சக்திதேவியைத் தரிசனஞ் செய்யுங்கள். எனக்கு அருள் புரியவே கருணையுடன் தேவி வந்திருக்கிறாள். எமது பயமெல்லாம் நீங்கிவிட்டது என்றான். அவனும் சுபாகு மன்னனும் தேவியை வழிபட்டு ஆனந்தக் கூத்தாடினர்.

அப்போது தேவியின் சிங்க வாகனமானது ஹூம் என்று ஒரு பயங்கரக் கர்ச்சனை செய்தது. இதனால் பகையரசர்களின் யானைகள் யாவும் மடிந்து வீழ்ந்தன. சிங்கம் மேலும் ஒரு பெருமூச்சு விட்டது. அப்பெருமூச்சு பயங்கரச் சூறாவளியாக மாறிப் பகைவரின் படைகளை யெல்லாம் எட்டுத் திக்குகளுக்கும் தூக்கி வீசியது. இதே சமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதர்சனன் தனது சேனாபதியை அழைத்துத் தமது பகைவர்கள் எங்கிருக்கிறார்கள் எனப் பார்த்து வருமாறு அனுப்பினான். யாவரும் பயந்து ஒடுங்கி நின்றனர். யுதாசித்துவும் சத்துருஜித்துவும் கோபாவேஷங்கொண்டு சுதர்சனனைக் கொல்வதற்காக வில்லேந்தி நாண் பூட்டினர். சுதர்சனனனும் எதிர்ப்பாணம் விடுத்தான். அதேசமயம் துர்க்கையானவள் மிகவும் கோபாவேஷங்கொண்டு பல உருவங் களாக மாறி யுத்தம் புரிவது போல வந்து யுதாசித்துவையும் சத்துருஜித்துவையும் கொன்றாள். சுதர்சனன் வெற்றிச் சங்கை ஊதி யாவரையும் மகிழ வைத்தான். சுதர்சனனின் பக்தியால் சக்திதேவி உரிய நேரத்தில் பகைவரை அழித்துத் தன் பக்தனைக் காத்தாள்.

தமக்கு வர இருந்த தொல்லைகளை நீக்கி மகிழ்வித்த சக்திதேவியை சுபாகு மன்னன் பலவாறு போற்றித் துதித்தான். சக்திதேவியும் மகிழ்ந்து சுபாகு மன்னனுக்குக் கேட்ட வரம் தந்தாள். சுபாகு மன்னனின் வேண்டுதலின்படி காசிமாநகரம் என்றும் முத்தி தரும் பூமியாக இருக்குமெனவும் தான் காசியில் குடிகொண்டிருப்ப தாகவும் சக்தி தேவி வாக்களித்தாள். அதற்கமைவாகவே இன்றுவரை காசி (இறக்க) முத்திதரும் புண்ணிய பூமியாக விளங்குகிறது. துர்க்காதேவியின் வழிபாடும் இன்றுவரை காசியில் பிரசித்தி பெற்றமை நாம் அறிவோம்.

அன்னை தேவியவள் சுதர்சனனை நோக்கி அயோத்திக்குச் சென்று தன்னை வழிபட்டு நாட்டைச் செவ்வனே ஆட்சிபுரியுமாறு கூறினாள். கிருஷ்ண பட்ச அட்டமி, நவமி மற்றும் சதுர்த்தசியிலும் தனது பூசைகளைப் பக்தர்கள் செவ்வனே கொண்டாட உதவுமாறும் கூறினாள். அச்சமயம் எஞ்சியுள்ள அரசர்கள் யாவரும் தேவியைச் சூழ்ந்து பலவாறு போற்றிப் புகழ்ந்தனர். மேலும் சுதர்சனனை நோக்கி உன் பக்தி யாலன்றோ எமக்கும் தேவியின் தரிசனம் கிடைத்தது. இனிமேல் நீயே எங்கள் தலைவன் எனப் பெருமிதமடைந்தனர். சக்திதேவி யாவரையும் ஆசீர்வதித்ததும் மறைந்தருளினாள்.

தேவியின் தரிசனம் கிடைத்த களிப்பினால் யாவரும் தேவியை வழிபடும் விதிமுறைகளைச் சுதர்சனனிடம் கேட்டனர். அவனும் தேவியின் பக்திநெறியையும் வழிபடும் முறைகளையும் விளக்கமாகக் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு திரண்டிருந்த அனைவரிடமும் விடைபெற்றுக்கொண்ட சுதர்சனன் தனது தாயார், மனைவி ஆகியோருடன் அயோத்தியை நோக்கிச் சென்றான். அயோத்தி வாழ் மக்களெல்லாம் சுதர்சனனையும் தாயார் மற்றும் சசிகலையையும் பெருமகிழ்வுடன் வரவேற்றனர். மந்திரி பிரதானிகள் சகிதம் அயோத்தியின் ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றான். தொடர்ந்து தனது சிற்றன்னை லீலாவதியை வணங்கி அவளின் மகன் தந்தை போரில் இறந்ததை மன்னிக்கும்படியும் தனது அரசாட்சிக்கு ஆசி கூறும்படியும் வேண்டினான். அவளும் தன் மகனின் தவறுதலை எண்ணி வருந்தியபோதும் சுதர்சனனின் சிறப்புகளை அறிந்து மகிழ்வுடன் அவனை வாழ்த்தி ஆசி வழங்கினாள்.

சுதர்சனன் தனது ஆட்சிப் பொறுப்பை ஏற்குமுன் சக்திதேவியின் வழிபாட்டைச் சிறப்புடன் நடாத்த முற்பட்டான். முதலில் சிறந்ததோர் மண்டபம் அமைத்து நவரத்தினங்களாலான சிம்மாசனம் அமைத்து வழிபடவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்தான். அயோத்தியில் சக்திதேவி யின் வழிபாடு மிகப் பிரபலமடைந்தது. இதனால் மக்களும் தேவியின் அருளால் பல நன்மைகளையும் பெற்று இன்புற்றனர். சக்தியின் பேரருளால் அறப்பணி மேலோங்கியது.

## நவராத்திரி பூசை முறை

முன்னொரு காலத்தில் ஜனமேஜயன் வியாச முனிவரிடம் நவராத்திரி விரதத்தையும், பூசை முறைகளையும் தமக்கு விபரமாகக் கூறும்படி கேட்டதற்கமைய வியாச முனிவரால் எடுத்துக் கூறப்பட்டவை இதுவாகும்.

வசந்தகாலம், சரத்காலம் என்ற இரு ருதுக்களும் இயமனுடைய இரு கோரப்பற்களுக்கு ஒப்பானவை. அக்காலங்கள் மனித குலத்துக்கு இறையருள் கிட்டாதவாறு தடைசெய்து இனப் பகையையும் நோய்களையும் தரக்கூடிய கொடியவைகளாகும். இதை உணர்ந்த அறிஞர்கள் இக் காலங்களில் ஏற்படும் கெடுதிகளிலிருந்து விடுவிப்பதன் பேரில் சக்தி தேவியை நோன்பிலிருந்து ஆசாரமான பூசை வழிபாடுகள் செய்து நன்மையடையுமாறு கூறினார்கள். தேவிக்குரிய சிறப்பான நாட்கள் இரவில் பூசைகள் செய்து வழிபட்டதையே நவராத்திரி என்றமைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்த கால நவராத்திரி சித்திரை வைகாசி மாதத்திலும், சரத் கால நவராத்திரி புரட்டாதி மாதம் அமாவாசைக்கு மறுநாளும் ஒன்பது நாளிரவில் வழிபடுதலாகும். இந்த வழிபாட்டின் பயனாக ஏற்படும் சித்தியால் பத்தாம் நாள் விஜய (வெற்றி) தசமி எனப் போற்றி மகிழ்வதை நாம் அறிவோம். நவராத்திரிக்கால பூசைகள் செய்வதற் காக அமாவாசையன்றே தொடரும் ஒன்பது நாட்களுக்குரிய பொருட் களையும் தேடிக் கொள்ள வேண்டும். பிரதமை அன்று பூசையை ஆரம்பிக்க வேண்டும். பூசைக்குரிய மண்டபம் சமதரையில் பசுஞ் சாணத்தால் மெழுகிட்டு செம்மண்ணாலேயே அமைக்க வேண்டும். நான்கு மூலைகளிலும் உயரமான தூண்கள் (மரங்கள்) நாட்டி அவற்றில் மாவிலை தோரணங் கள் அமைக்க வேண்டும். இதன் நடுவே நான்கு முழ நீளமும் ஒரு முழ உயரமுள்ள சமனான மேடையை அமைக்க வேண்டும்.

பின்பு பராசக்திதேவியின் பூசைக்குரிய மந்திரங்களையும் அதன் தத்துவங்களையும் நன்குணர்ந்தவர்களாகவும் ஆசார சீலர்களாகவும், சாதுக்களாகவும், வேத மந்திரங்களை உரிய விதிப்படி ஓதக் கூடியவர் களாகவுமுள்ள ஒன்பது அல்லது ஐந்து. மூன்று, ஒன்று என்ற வரிசையில் இயல்புக்கேற்றவாறு அந்தணர்களை நியமிக்க வேண்டும். அவர்கள் குறிப்பிட்ட ஒன்பது நாளும் நியமம் தவறாது சமூகமளிக்க வேண்டும். இவர்கள் ஒன்பது நாளும் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு புனித நீராடி குலமரபுப்படி ஆசாரம்பேணி உரிய அந்தணர்களுடன் பூசை மண்டபத்துக்கு வர வேண்டும். அவர்கள் வேதங்களை ஓத மேடை மீது வெண்பட்டு விரித்த சிங்காசனத்தை அமைத்து அதன் மீது சங்கு, சக்கரம் கதை பத்மம் தரித்திருக்கும் நான்கு கரங்களையுடைய தேவியின் வடிவத்தையாவது பதினெண் கரத்தையுடைய வடிவத்தை யாவது எழுந்தருளச் செய்தல் வேண்டும். தேவிக்கு நல்ல ஆடைகள் அணிகலன்கள் அணிவித்து நன்கு அலங்கரித்து எழுந்தருளச் செய்தல் வேண்டும். பின்னர் கும்ப பூசைக்காகச் சிம்மாசனத்தின் அருகே கலச கும்பம் அமைத்து உள்ளே பொன் இரத்தினங்கள் வைத்துப் புனித நீரால் நிரப்ப வேண்டும். கும்பத்தில் மாவிலை முதலிய ஐவகைத் தளிர் களை வைத்து வேத மந்திரங்களால் மந்திரித்து மங்கள வாத்தியம் முழங்க பூசைப் பொருட்களால் பூசிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசை முடிந்த பின் "தாயே அம்பிகா சிறப்பான நவராத்திரி விரதத்தைச் செய்கிறேன். தடங்கல் ஏதும் வராமல் துணை புரிவாயாக இந்தப் பூசையை என் சக்திக்கு இயன்றவரை செய்கிறேன்" என்று தீர்மானித்துக்கொண்டு அகில், சந்தனம், பச்சைக் கற்பூரம், கஸ்தூரி ஆகிய நறுமணப் பொருட்களாலும், சாதி மல்லிகை நறுமணம் கமழும் மலர்களாலும், வில்வ இலைகளாலும் தூப தீபங்களோடு பக்தி பூர்வமாகத் தேவியைப் பூசித்து நிவாரண பூசை செய்ய வேண்டும். இளநீர், மாதுளை, மா, பலா, வாழை முதலிய கனிகளைப் படைத்து அன்ன நிவேதனஞ் செய்ய வேண்டும். தொடர்ந்து ஆடல் பாடல் வாத்தி யங்களுடன் மூன்று வேளையும் செய்தல் வேண்டும்.

நவராத்திரி விரதமிருப்பவர்கள் உபவாசமிருந்து பூசித்தபின்பே உணவருந்த வேண்டும். வெறும் தரையில் உறங்க வேண்டும். பிரதமை திதியில் அத்த நட்சத்திரம் கூடுமானால் அது உன்னதமான நாளாகும். பூசை முடிந்த பின் கன்னியர் பூசை செய்ய வேண்டும். பூசைக்குரிய கன்னியர்கள் நறுமணம் முதலியவற்றை அறியக்கூடியவராய் இரண்டு வயது முதல் பத்து வயது வரையுள்ள கன்னியராவர். இவர்களுக்கு முறையே குமாரி, திருமூர்த்தி, கல்யாணி, ரோகினி, காளி, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்திரா என்று பெயர்கள் உண்டு.

அந்தப் பெயருடைய கன்னியை ஸ்ரீரஸ்து, ஸ்ரீ யுத்தம் என்ற பெயர்களை முறையாகக் கொண்டுள்ள வேத விற்பன்னர்களால் பூசிக்க வேண்டும். ஒரு வயதுப் பெண்ணும் பத்து வயதுக்கு மேற்பட்ட கன்னிகையும் பூசைக்குத் தகுதியற்றவர்கள். இக்கன்னியரைத் தினம் ஒருவராகவோ முதலிருந்து 2, 3, 4 என்றபடி சேர்த்தோ பூசை செய்ய லாம். இக்கன்னியர் பூசையைத் தமது நிதிநிலைமைக்கேற்பச் செய்ய வேண்டும். குமாரியைப் பூசித்தால் வறுமை நீங்கும். பகைவர் வெற்றி யும், ஆயுள் விருத்தியும், செல்வ வளர்ச்சியும் ஏற்படும். திரு மூர்த்தியைப் பூசித்தால் தர்மார்த்தகாமியமும், தானிய விருத்தியும், புத்திர சந்தானமும் உண்டாகும். கல்யாணியைப் பூசித்தால் வித்தை வெற்றி அரச சுகம் ஆகியன உண்டாகும். ரோகினியைப் பூசித்தால் ரோகங்கள் நிவர்த்தியாகும். காளியைப் பூசித்தால் பகைவர் அழிவு உண்டாகும். சண்டிகையைப் பூசித்தால் ஐஸ்வரியம் உண்டாகும். சாம்பவியைப் பூசித்தால் போரில் வெற்றியும், கொடிய வறுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கமும் உண்டாகும். துர்க்கையைப் பூசித்தால் கொடிய பகைவர் நாசமடைவதோடு செய்ய முடியாதவற்றைச் செய்யும் ஆற்றலும், பரலோக சுகமும் உண்டாகும். சுபத்திரையைப் பூசிப்பதால் மங்களங்களோடு மனோரத சித்தியும் கிடைக்கும். இவ்வாறு அவரவரது விரும்பும் பலன்களைக் கொடுக்கக் கூடிய குமாரி முதலான கன்னியர்களைப் பூசிப்பது என்றால் அந்தப் பெயர்களுக்கு மூல காரணமான பகவதியைத் தியான சுலோகங்கள் கூறித் தியானிப்ப தாகும்.

## நவராத்திரி மகிமை

நற்குடியிற் பிறந்து, நோயற்றவளாகவும், சகல அங்க லட்சணங்கள் பொருந்திய அழகுடையவளாகவும் அமைந்த கன்னிகையே பூசைக்கு உகந்தவள். சகல இஷ்ட சித்திகளுக்கும் அந்தணர் குலத்துக் கன்னிகையே சிறந்தவள். வெற்றியை விரும்புவோர் அரச குலக் கன்னியர்களையும் பூசித்தல் சிறப்பாகும். யார் எதனைப் பெற விரும்பு கின்றனரோ அதற்கேற்ற கன்னியர்களைப் பூசிக்க வேண்டும்.

தக்சனின் யாகத்தை அழிக்க பத்திரகாளியானவள் அநேக கோடி யோகினிகளோடு தோன்றிய தினமாதலால் ஒன்பது நாட்கள் விரதம் இருக்க ஆற்றலற்றவர்களும் அட்டமி திதியன்று தவறாது நவராத்திரி விரதத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். சக்தியற்றவர்கள் சப்தமி, அட்டமி, நவமி ஆகிய மூன்று நாட்களையாவது உபவாசத்தோடு பூசித்தால் ஒன்பது நாட்களிலும் நவராத்திரி விரதமிருந்த பலன் கிடைக்கும். நவராத்திரி விரதமிருப்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நற் பலன்களை அடைவர். செந்நிறமான சந்தனத்தில் தோய்த்த வில்வந்தனங்களால் மகேஸ்வரியைப் பூசிக்கும் ஒருவன் அரசனாவான். தேவர்களும், பிதுர்தேவதைகளும் "ஸ்வாஹா ஸ்வாஹா" என்னும் தேவியின் மந்திரப் பெருமையினாலேயே திருப்தியடைகின்றனர்.

கோசல நாட்டில் முன்னொரு காலத்தில் வாழ்ந்த சுசீலன் என்னும் வைசியன் பல குழந்தைகளையுடைய பெரிய குடும்பத்துடன் வறுமை காரணமாக மிக வருந்தினான். வறுமையாக இருந்தபோதும் இவன் நற்குணங்கள், நற்பண்பு, ஆசாரம், வாய்மை, சினங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாமை போன்ற குணங்களுக்கு உறைவிடமாகவும் இருந்தான். ஒரு நாள் இந்த வைசியனின் வீட்டுக்கு வந்த வேதியர் இவனின் பரிதாப நிலை கண்டு நவராத்திரி விரதத்தைக் கடைப்பிடிக்குமாறு கூறினார். நவராத்திரி விரதத்தை அனுட்டித்துத் தேவி பூசையும் யாகமும் உன் இயல்புக்கு ஏற்றவாறு செய்தால் வறுமையிலிருந்து நீங்கத் தேவி அருள் புரிவாள். வறுமையின் துயரம் நீங்கிச் சிறப்புடன் வாழலாம் என்றார். வேதியரின் கூற்றை அறிந்த வைசியன் அவ்வேதியரையே குருவாக ஏற்று முறைப்படி நவராத்திரி விரத மிருந்து அதற்குரிய நற்பலனையடைந்தான்.

## இராமர் நவராத்திரி விரதமிருந்த கதை

முன்னொரு காலத்தில் இராமபிரான் அரண்மனை வாசத்தை விட்டுத் தம்பி இலக்குவனுடனும் சீதையுடனும் வனவாசஞ் செய்தார். சீதையை இராவணன் கவர்ந்து சென்றதால் ஆழ்ந்த கவலையில் மூழ்கி யிருந்தார். அச்சமயம் அவ்வழியே வந்த நாரதர் இராமனை நோக்கி இராமச்சந்திரா நீயும் உன் தம்பியும் அறிவற்ற பாமர மக்களைப் போல் வருந்தலாமா? இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றதை அறிந்தேன். அவன் தனது மரணகாலம் நெருங்குவதை உறுதிப் படுத்தவே சீதையைக் கவர்ந்தான். இராவணனைக் கொல்ல வென்றே பிறந்த உனக்கு கடமை கைகூடும் காலம் வந்துள்ளது. பதிவிரதையான சீதை உன்னையே எண்ணிக்கொண்டிருக்கிறாள். தேவலோகத்தி லுள்ள காமதேனுவின் பாலை ஒரு பாத்திரத்திலிட்டுத் தேவேந்திரன் அனுப்பினான். அதை உண்டே சீதை உயிர் வாழ்கிறாள்.

இந்த மாதம் நவராத்திரிக் காலமாகும். பராசக்தியின் நவராத்திரிக் காலத்தில் தேவியைக் குறித்து நவராத்திரி விரதத்தை இந்த ஒன்பது நாளும் உபவாசமிருந்து மகேஸ்வரியின் பூசை, செபம், யாகம் யாவற்றையும் செய்தால் பூரண சித்தி கிடைக்கும் என்றார். நாரதரின் அறிவுரைக்கேற்ப இராமர் குறிப்பிட்டபடி அமாவாசையன்று சகல பொருட்களையும் சேகரித்துக்கொண்டு அன்றிரவு தொடக்கமே உபவாசமிருந்து நாரதரையே குருவாகக் கொண்டு நவராத்திரி விரதத்தை ஆரம்பித்தார். தொடர்ந்து ஒன்பது நாளும் விரதத்தை நன்கு கடைப்பிடித்தார். அட்டமி திதியன்று நள்ளிரவில் சக்திதேவி மகிழ்ந்து அந்த மலை உச்சி மீது சிம்ம வாகனத்தில் வந்து தரிசனம் தந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி இராமரை நோக்கி ராமா நீ செய்த இந்தப் பூசையிலும் விரதத்திலும் நான் மகிழ்ந்தேன். நீ வேண்டிய வரத்தைக் கேட்பாயாக. முன்னொரு அவதாரத்தில் நீ மச்சமாகப் பிறந்து அசுரர்களை அழித்து வேதங்களைக் காத்தாய். கூர்ம அவதாரத்தில் மந்திர கிரியை மத்தாகத் தூக்கி நாட்டி தேவர்களைக் காத்தாய். வராக அவதாரத்தில் கோரத் தந்தத்தால் பூமியைத் தூக்கி நிறுத்தி வைத்தாய். நரசிம்மராக வெளிப்பட்டு இரணியனைக் கொன்று பிரகலாதனனைக் காத்தாய். வாமனாவதாரம் எடுத்து மகாபலியைப் பாதாளத்தில் அமிழ்த்தினாய். ஜமதக்கினியின் மகன் பரசுராமனாகப் பிறந்து சத்திரியர்களின் பூமிகளையெல்லாம் எடுத்துக் காசிப முனிவருக்குக் கொடுத்தாய். இப்போது தசரதனின் மகனாகப் பிறந்து இராவணனை அழிக்கப் போகிறாய்.

நீ விஷ்ணுவின் அவதாரமாய்ப் பிறந்தாய். இந்த வானரக் கூட்டமெல்லாம் தேவர்களின் அம்சமேயாகும். எனது சக்தியம்சத் தையும் உனக்கு உதவுகிறேன். ஆதிசேடன் இலக்குவனாகப் பிறந்து இந்திரஜித்துவை அழிப்பான். நீ இராவணனைக் கொன்று சுகமாய் அயோத்திக்குச் சென்று செங்கோலாட்சி செய்து பரம பதத்தை அடைவாய் என்றருளினாள்.

தொடர்ந்து இராமர் மனம் மகிழ்ந்து நவராத்திரி விரதத்தைப் பூர்த்தி செய்தார். அநேக தானதருமங்களை வழங்கினார். நாரதரைப் பணிந்து நன்றி கூறினார். நாரதர் இராமரை வாழ்த்தி ராமா உனக்கு வெற்றியும், மங்களமும் உண்டாகட்டும் என்றார். மறுநாள் விஜயதசமி யன்று இராமர் தம்பியுடனும் வானர சேனையுடனும் சேதுபந்தனஞ் சென்று இலங்கையை அடைந்து இராவணனை அழித்தார். சீதையைச் சிறைமீட்டு அயோத்தி சென்று செங்கோலாட்சி செய்தார்.

## தேவ அசுரர் போராட்டம்

தோன்றிய காலந்தொட்டே தேவர்களும் அசுரர்களும் தாமே உயர்ந்தவர்கள் எனவும் மறுதரப்பினர் தமக்கு அடிபணிய வேண்டு மெனவும் குல அடிப்படையில் அதிகார வர்க்கப் பகை இருந்தது. இரு பகுதியினரதும் குலகுருவாக இருந்தவர்களின் ஆலோசனைகளும் அவர்களை யுத்த முனையில் சந்திக்க வைக்கும் தூண்டுதலாக இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களின் அரசனான இந்திரன் தனது பதவிக்கும் சுகபோகத் துக்கும் குறைவின்றி நிலைபெறுவதற்காக எவரையும் அழிக்கவும் அதனால் பெருமையடையவும் விருப்புற்றிருந்தான். தேவகுலகுரு வான பிரகஸ்பதி தமது தேவகுலத்தவர்களுக்கு நற்பலன் பெறும் ஆலோசனைகளை வழங்கி வந்தார். தேவர்களின் மேம்பாட்டுக்காக அசுரர்களை அழிக்கும் நோக்கில் யுத்தம் புரிவதற்கான ஏற்பாடுகளை யும் செய்தார். அதேசமயம் அசுரகுல குருவான சுக்கிராச்சாரியார் அசுரர்களின் தீய சிந்தனைகளுக்கேற்பவே ஆலோசனைகளை வழங்கினார். யுத்தங்களின் மூலம் பேரழிவும் ஏற்படும் வண்ணம் தாமே தவமிருந்தும் யாகங்களைச் செய்தும் அசுரர்களை நெறிப்படுத்தினார். கிருஷ்ண பக்தனான பிரகலாதனன் நல்லறிவையும் நற்போதனையையும் போதித்தாலும் தமது குலத்தவரின் வேண்டுதலுக்காக அசுரர்களுக்கான யுத்தத்தில் தலைமை தாங்கிச் சமர் புரிந்துள்ளான். இவ்வாறு பலதடவைகள் யுத்தங்கள் நடைபெற்றன. ஒரு சமயம் இரு குலத்தவர்களுக்கும் இடையே நடைபெற்ற யுத்தத்தை இந்திரனும் பிரகலாதனனும் வழிநடத்தினர். இப்போரில் தோல்வி கணட இந்திரன் தமது நிலையை தமது குல குருவிடம் முறையிட்டான். அவர் தமது ஆலோசனையில் உலக மாதா வாகிய புவனேஸ்வரியிடம் வேண்டி வழிபடுமாறு கூறினார். இந்திரன் சக்திதேவியை ஏற்றியும் போற்றியும் துதித்து இடையறாது வழிபட்டான். இந்திரனின் வழிபாட்டை மெச்சிய தேவி சங்கு சக்கரம், கதாயுதங்களைக் கைகளில் ஏந்திய வண்ணம் சிங்க வாகனத்தில் ஏறி வந்து இந்திரன் முன்பாகத் தோன்றினாள். இந்திரனின் கோரிக்கைப்படி அசுரர்களுடன் போர் புரியும் நோக்கில் சக்தி புவனேஸ்வரியாக அசுரர்கள் முன் காட்சி யளித்தாள்.

தேவியின் கோலத்தையும் நோக்கத்தையும் கண்ட அசுரர்கள் எதிரில் வந்து போரிட முடியாமல் தயங்கினர். பரந்த அறிவுடைய பிரகலாதனன் அன்னை சக்தி முன் வந்து போற்றி வழிபட்டான். மேலும் அசுரர்கள் வீணாகச் சண்டைக்கு வரவில்லையென்றும் தேவர்களா கவே வலிய வந்து சண்டையை ஆரம்பித்ததாகவும் தாம் பதிலுக்குப் போராடியதாகவும் தெரிவித்தான். மேலும் தேவர்கள் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளுக்காகப் பாற்கடலைக் கடைவதற்கு முன்வந்து அசுரர் களுக்கும் பாகம் தருவதாகக் கூறி அசுரர்களையும் உதவிக்கு வருமாறு அழைத்தனர். அமுதம் வெளிவந்ததோடு திருமகள், ஐராவதம், கற்பகதரு, காமதேனு, உச்சஸ்வரம் என்னும் வெண்புரவி, பல்வகை யான செல்வங்கள் என்பனவும் வெளிவந்தபோது தாமே யாவற்றை யும் அபகரித்துச் சென்றனர். இதுபோன்ற பல தீமைகளையும் உருவாக்கினர். தேவி! தேவர்களின் சுயநலமும் நீதியுமற்ற வேண்டுதலுக்குமா வந்தீர்கள். ஆனால் அசுரர்களாகிய எங்கள் நிலையையும் சமன் செய்து சீர்தூக்கிப் பார்த்து எம் மீது தவறிருந்தால் இப்பொழுதே அசுரர் குலத்தை அழித்து விடுங்கள். இன்றேல் எம்மை அமைதியுடன் வாழ விடுங்கள் என்றான். பிரகலாதனனின் நீதியான வேண்டுதலை ஏற்ற தேவி அசுரர்களைப் பாதாள லோகஞ் சென்று அமைதியாக வாழ வரம் தந்து மறைந்தருளினாள். தேவர்களும் மன அமைதியுடன் போர் தவிர்த்துத் தேவலோகஞ் சென்றனர்.

## தேவியைத் துதித்தல்

பூலோகத்தில் ஆங்காங்கே பல அசுரர்கள் தோன்றித் தமது தவ வலிமையால் மக்களை வருத்தி அல்லலுற வைத்தனர். அசுரர்களின் கொடுமையால் பூபாரம் தாங்க மாட்டாத பூமாதேவி மகாவிஷ்ணு விடம் முறையிட்டாள். மகாவிஷ்ணு பூமாதேவியை நோக்கிப் பின்வருமாறு கூறினார். முனிவர்களின் சாபத்தினாலும், மக்களைப் பல அசுரர்கள் கொடுமைப்படுத்தியதாலும் மிருகங்களின் ஈனப் பிறவிகளிலும் மானிடப் பிறவியிலும் பிறந்த அசுரர்களை அழிப்பதன் பேரில் பல துன்பங்களை அனுபவித்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட தாக தெரிவித்தார். தமது துன்பங்களைப் போக்குவதற்கு எல்லாம் வல்ல தேவியைத் துதித்தே அமைதி பெற்றேன். அதேபோல மேலும் பல அசுரர்களை அழிக்கவும் பூபாரம் தீர்ப்பதற்காகவும் புவனேஸ்வரி யான சக்தி தேவியை யாவரும் ஒரே நோக்கில் துதிப்பதே தீர்வாகும் எனக்கூறினார். இந்திரன், பிரம்மா, விஷ்ணு, பூமாதேவி யாவரும் தேவியை உள்ளன்போடு துதித்தனர்.

தேவர்களின் ஒருங்கமைந்த வேண்டுதலை மெச்சியதேவி, அவர்கள் முன்தோன்றி நீங்கள் வேண்டுவன யாவை எனக் கேட்டாள். தேவர்கள் தமது பணிவான பதிலில் பூவுலகில் பல அசுரர்கள் தோன்றிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்பல கொடுமைகளைச் செய்கின்றனர். இதனால் பூமாதேவி பூபாரம் தாங்க முடியாது கவலையடைந்துள்ளாள். இக்கவலையை நீக்கியருள வேண்டுமெனத் தேவர்கள் வேண்டினார்கள்.

தேவர்களை நோக்கிய சக்தியானவள் மகாவிஷ்ணு கிருஷ்ண ராகவும், தேவர்கள் பாண்டவர்களாகவும் முனிவர்களும் பல அவதாரங்களை எடுக்கவும் நியமிக்கப்படுவார்கள். யாவும் சிறப்படை யும். பூமாதேவியும் அமைதி பெறலாம் எனக்கூறி மறைந்தருளினாள். தேவியின் நியதிப்படி கிருஷ்ணரும் பாண்டவர்களும் தமக்கு நேர்ந்த பல இன்னல்களையும் தாங்கிக் கொண்டனர். இதனால் இவர்கள் எடுத்த அவதாரங்களின் நோக்கங்களை நிறைவேற்றினர். தேவியின் கருணையால் நியமிக்கப்பட்ட சகல கடமைகளும் சித்தியடைந்தன. தேவி அனைவரதும் துன்பங்களை அகற்றி அமைதி கொள்ள வைத்தாள். இவை சக்தியின் உயர்ந்த கருத்துக்களையும் வலிமை யையும் எடுத்துக் காட்டியது. இதனால் சக்திதேவியின் கருணை எக்காலத்திலும் எல்லா விடயங்களிலும் பரந்து நிலைத்திருக்கும் என அறியலாம்.

## மகிஷாசுரன் தோன்றிய கதை

ஆதிகாலத்தில் அசுரர்குலபதியான ரம்பன் என்பவன் தமக்கொரு மகப்பேறு வேண்டித் தவமிருந்தான். தனது தவத்துக்கு வலிமை சேர்ப்பதன் பேரில் பஞ்சாக்கினி (ஐந்து யாககுண்டம் அமைத்து அக்கினியை வளர்த்தல்) நடுவே கடுந்தவம் செய்தான். அசுரனின் தவத்தை மெச்சிய அக்கினி தேவன் உரிய வரத்தைத் தந்தான். ரம்பன் தனது அசுரபலமும், காமசிந்தனையும் மேலிட ஒரு காட்டினூடாகச் சென்றிருந்தான். அக்காட்டிலிருந்த ஆலமர நிழலில் ஒரு அழகிய பெண் எருமை படுத்திருப்பதைக் கண்டான்.

அசுரனின் தீயசிந்தனையும் விதிவசமும் கைகூட அப்பெண் எருமையுடன் கூடி இன்புற்றான். அப்பெண் எருமையும் மகிழ்ந்து கருவுற்றது. காலம் கடந்தது. ஒரு நாள் அப்பெண் எருமையை அழைத்துச் சென்று நன்கு பராமரித்தான். அப்பெண் எருமையுடன் கூடிக் குலாவுவதற்காக மூர்க்கமாக ஆண் எருமை ஒன்று நாடி வந்தது. அசுரன் அதனை விரட்டினான். சினங்கொண்ட ஆண் எருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைத் தனது கொம்பினால் தாக்கியது. அசுரனான ரம்பன் மாண்டான். அசுரனின் உடல் தகனத்துக்காக எடுத்துச் சென்று தீ மூட்டியபோது எருமை நிறை மாதக் கருவுற்ற நிலையில் ரம்பனின் உடல் தகனஞ் செய்த இடத்துக்கு வந்தது. ரம்பன் மீதிருந்த அன்பின் காரணமாக எவரும் எதிர்பாராத வண்ணம் அப் பெண் எருமை எரியும் தீயின் மீது பாய்ந்தது. உடன் கட்டையேறியது. எருமையின் உடலும் தீயில் சங்கமமானது. உடல் கருகியபோது அதன் வயிற்றிலிருந்து ஒரு ஆண் மகவு வெளிவந்தது. அந்த மகவு எருமைத் தலையும் அசுர உடலும் கொண்ட தோற்றத்துடன் காணப்பட்டது. ரம்பனின் உறவினர் அந்த எருமைத் தலையுடன் கூடிய பிள்ளையை எடுத்துச் சென்றனர். அப்பிள்ளை அசுர அரண்மனையில் சிறப்பாக வளர்க்கப்பட்டது. காலங்கள் கடந்தன. ரம்பனின் வரத்தினால் தோன்றிய பிள்ளை எருமைத் தலையுடன் பிறந்த காரணமாக அவனுக்கு "மகிஷாசுரன்" எனப் பெயரிட்டு வளர்த்தனர். மகிஷாசுரன் தந்தையின் தவப்பயனாகச் சிறந்த வீரனாகவே தோன்றினான்.

மகிஷாசுரனுக்கு சிறப்பினால் மேலோங்கும் எண்ணம் தோன்றியதால் பிரம்மதேவரைக் குறித்துத் தவஞ் செய்தான். அவனின் கடுந்தவத்தை மெச்சிய பிரம்மதேவன் அவன் முன் தோன்றி வேண்டும் வரம் யாதெனக் கேட்டார். மகிஷன் பிரம்மாவிடம் தனக்கு இறவா வரம் தருமாறு கேட்டான். பிறந்தவர் யாவரும் இறக்க வேண்டுமென்பது நியதியென்பதால் வேறு வரம் கேட்குமாறு கூறினார். மகிஷன் தன்னை எவராலும் வெல்ல முடியாத பலமும் பெண்ணைத் தவிர வேறெவராலும் மரணம் ஏற்படக்கூடாதெனவும் வரம் கேட்டுப் பெற்றான்.

மகிஷன் சிறப்பான வரம் பெற்ற மமதையினால் அனைத்து உலகங்களையும் அடக்கி ஒரு குடைக்கீழ் ஆட்சி செய்ய முற்பட்டான். பூவுலகம், பாதாள லோகங்களைக் கொடுங்கோலாட்சியில் வைத் திருப்பது போல தேவலோகத்திலும் ஆட்சிபுரியவும் இந்திரலோக சுகபோகங்களை அனுபவிக்கவும் துணிந்தான். முதலில் ஒரு தூதுவனை இந்திரனிடம் அனுப்பி இந்திரலோகத்தை விட்டேகுமாறும் தவறின் யுத்த மூலம் தேவலோகத்தைக் கைப்பற்றப்போவதாகவும் தெரிவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவ அசுர யுத்தம்

இந்திரனிடம் வந்த அசுரதூதுவனிடம் மகிஷனை இழிவாகப் பேசி அனுப்பினான். மகிஷன் கடுஞ்சினங் கொண்டு தனது நால்வகைச் சேனைகளையும் திரட்டிக்கொண்டு தேவலோகஞ் சென்றான். முதலில் படைத்தளபதிகளின் தலைமையில் போர் நடைபெற்றது. அப்போது தேவசேனை பின்நோக்கியது. பிரம்மாவும் விஷ்ணுவும் மற்றும் தேவர்களும் தேவர் சேனைகளுக்கு உதவினர். அசுரர்சேனை தமது சூழ்ச்சியாலும் திறமையாலும் தேவர் சேனையை விரட்டியது. இப்போரில் தேவர்கள் புறமுதுகிட்டோட இந்திரனின் பட்டத்து யானையான ஐராவதத்தின் மீதேறிய மகிஷாசுரன் இந்திர லோகத்தை யடைந்தான். அங்கு இந்திரனின் சிம்மாசனத்தின் மீதமர்ந்த மகிஷன் தனது அசுர சேனைகளையும் சேர்த்து இந்திர போகத்தை அனுபவித்தனர். இதேவேளை பயந்தோடிய இந்திரன் மேரு மலைச் சாரலில் பதுங்கியிருந்தான். இந்திரனுடன் மேரு மலைச்சாரலிலிருந்த ஏனைய தேவர்களும் தமது நிலையை உணர்ந்து பிரம்மாவிடம் சென்றனர். பிரம்மா இந்திராதி தேவர்களுடன் தமது நிலையைப் போக்குவதற்காக சிவபிரானிடஞ் சென்று முறையிட்டனர். தமக்கு வாழ்வளிக்குமாறும் கோரினர். அப்போது சிவபிரான் பிரம்மனை நோக்கி மகிஷாசுரனுக்கு வேண்டிய வரங்கள் வழங்கிய நீயே தேவர்களின் துயரத்துக்கு காரணமாகும் என்று கூறினார்.

மகிஷனுக்கு ஒரு பெண்ணினால் தான் அழிவு ஏற்படும் என்ற வரம் இருக்கிறது. எம்மில் உறைந்திருக்கும் எந்தச் சக்தியும் மகிஷனை அழிக்கும் ஆற்றலற்றவை. அவனுக்கு வரம் அளிக்கும்போது அவனை அழிக்கும் சக்தியைப் படைக்கவில்லையே. அசுரர்களின் மாயாசக்தி யிலும் கூடிய சக்தி மகாவிஷ்ணுவிடம் இருக்கிறது. இப்பிரச்சினை யைத் தீர்க்க வல்லவரான மகாவிஷ்ணுவிடஞ் சென்று உங்கள் துயரத்தைக் கூறி அமைதி பெறுமாறு சொல்லியருளினார்.

## சக்தியின் வெளிப்பாடு

இந்திராதி தேவர்களுடன் பிரம்மா வைகுண்டத்தை அடைந்தார். திருமாலினைப் பணிந்து மகிஷாசுரனுக்கு ஒரு பெண்ணினால்தான் மரணம் ஏற்படும். இதற்கமைவான ஏற்பாடுகளைச் செய்து இந்திராதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களின் துயரை நீக்குமாறு வேண்டினர். அது கேட்டதும் திருமால் இதுவரையும் எமது சக்திக்கேற்பவே செயற்பட்டோம். எங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட மகாசக்தியானவள் பெண்ணுருவமாகவே அமைந்துள் ளாள். அச்சக்தியைத் தோன்றச் செய்யவேண்டின் சக்திநாதனாகிய சிவபிரானையும் சக்தியையும் உள்ளமுருக வழிபட்டால் சிவமும் சக்தி யும் தோன்றுவர் எனக்கூறி யாவரும் சிவத்தையும் சக்தியையும் போற்றித் துதித்தனர். உடனே சர்வதேவா சொரூபினியாகிய மகாசக்தி யானவள் ஒவ்வொரு தேவர்களிடமிருந்தும் தனித்தனியாக வெளிப்பட்டுப் பேரொளியாகக் காட்சி தந்தாள். யாவரும் போற்றி வணங்கினர்.

தேவர்களிடமிருந்து தோன்றிய அழகின் பிம்பம் ஒன்று சேர்ந்த தால் யாவரும் வியப்புடன் நோக்கினர். அவ்வொளிப் பிளம்பிலிருந்து வெண்மை ஒளி வீசும் முகமும், கருவிழிகளும், பவளம் போன்ற உதடுகளும் பதினெட்டு ஆயுதங்களை ஏந்திய பதினெண் திருக்கரங் களும் அமைந்த சொரூபினியாக சர்வாபரணங்களையும் அணிந்து மும்மைக் குணங்களும் மும்மை நிறமுடையவளாகவும் விளங்கும் பிரபஞ்சமோகினியாகவும், நித்தியசுந்தரியாகவும் ஈடிணையற்ற பதுமையாகத் தோன்றிய மகாசக்தி தேவியின் அழகையும் மும் மூர்த்தி களாலுமே வர்ணிக்க முடியாத சிறப்புடையவள் என யாவரும் வியந்த னர். மேலும் ஒரு பெண்ணுக்குரிய முப்பத்திரண்டு சாமுத்திரிகா இலட்சணங்களையுமுடைய யாவராலும் ஒப்பிட முடியாத அழகும், இளமையும், வீரமும் கொண்ட பேரொளி கலந்த பெண்ணுருவில் சிம்ம வாகனம் மீதமர்ந்து பராசக்தியானவள் காட்சி தந்தாள். அரிபிரமேந்திராதி தேவர்களும் தத்தமது ஒளிவீசும் ஆயுதங்களையும் சக்தி தேவியிடம் தந்து பணிந்தனர். தமக்குக் கேடு விளைவிக்கும் மகிஷாசுரனை அழித்துத் தம்மைக் காத்தருளுமாறு வேண்டினர்.

தேவர்களின் அளவற்ற அன்புக்கும் உபசரணைக்கும் அக மகிழ்ந்த சக்திதேவி அவர்களைக் கருணையுடன் நோக்கினாள். தேவர்களே அகந்தை, அநீதிகளால் அறிவற்ற மூடனும் கொடிய வனுமாகிய மகிஷாசுரனை உங்கள் நலனுக்காக நீதியை நிலை நாட்டவும் அவனை அழிக்கவே இங்கு தோன்றினேன். அவன் தானாகவே ஒதுங்கி பாதாள உலகஞ் சென்றாலன்றி அவனையும், உடந்தையரான அசுர குலத்தையும் அழித்து உங்கள் யாவரையும் பாதுகாப்பதே என் பணியாகும் என உறுதியளித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் முதலானோர் உலக மாயையிற் சிக்குண்டு பல செல்வங்களையும் அதிகாரங்களையும் அனுபவிப்பதில்தான் கவனஞ் செலுத்துகின்றனர். இதனால் ஆசைக்கேற்ற துன்பங்களையும் அனுபவிக்கின்றனர். அசுரர்களுக்குக் கேட்ட வரங்களையும் அதனால் அதிகாரங்களையும், செல்வங்களையும் வழங்கியதால் இப்போது துயரமடைகின்றனர். இவர்களின் உலக வாழ்வியலை நோக்கிக் கலகலவெனச் சிரித்தாள். இவ்வாறு நகைத்ததும் தேவர்கள் முதல் அசுரர்கள் வரை நடுங்கும்படி தேவி அட்டகாசத்துடன் கர்ச்சித்தாள். இவ்வொலி கேட்ட மகிஷாசுரனும் மற்றும் அசுரர்களும் நடுங்கினர். மகிஷாசுரன் அவ்வொலி எங்கிருந்து வருகிறதென அறியும்படி தூதுவர்களை அனுப்பினான். மேலும் இவ்வொலியை எழுப்பியது எவராயினும் அவரை தன்முன் இழுத்து வருமாறும் பணித்தான். சென்ற தூதர்கள் தேவியைக் கண்டதும் பயந்து நடுங்கிய வண்ணம் மகிஷாசுரனிடம் வந்து முறையிட்டனர். மேலும் தேவியின் உருவம், அழகு, இளமை, வீரப்பொலிவு யாவற்றையும் வியந்து கூறினர். தேவியின் விபரங்களைத் தூதுவர் தவறாது விபரித்துக் கூறியதும் மகிஷாசுரனுக்கு அகங்காரம் நீங்கிக் காமம் ஏற்பட்டது. காம மேலீட்டினால் ஒரு அமைச்சரை அழைத்து அமைச்சரே தூதுவர்கள் கூறியதும் அப்பெண் மீது போர் நாடாது அன்பே ஏற்பட்டது. போர் புரிய இருந்த என்னை அவள் மீது மோகங்கொள்ளச் செய்துள்ளது. அவளிடஞ் சென்று சாமபேததான முறையைக் கையாண்டு என்மீது வெறுப்படைய விடாது நயமாகப் பேசி எனது காமக்கிழத்தியாக அழைத்து வருமாறு கூறினான்.

மந்திரி தனது நால்வகைச் சேனைகளுடன் தேவி இருக்கு மிடத்தை அடைந்தான். தேவியின் அண்மையிற் செல்லாது சற்றுத் தூரத்தில் நின்றவாறு தான் மகிஷாசுரனின் மந்திரி என்றும் தூதுவனாக வந்ததாகவும் தெரிவித்தான். மகிஷாசுரன் அசுர குலத்தரசன், மாவீரன், எருமைத் தலையுடன் இருந்தாலும் அழகும் பலமும் கொண்டவன். இங்கு வந்த தேவர்களையெல்லாம் சண்டையிலிருந்து புறமுது கிட்டோட விரட்டியவன். அவன் பேரழகியாகிய உன் மீது மோகங் கொண்டுள்ளான். அவனின் வீரத்துக்கும், அழகுக்கும், செல்வத்துக்கும் ஏற்ற பேரழகியாகவே நீ காணப்படுகின்றாய். நீ யார்? ஏன் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாய்? உனக்கு வேண்டிய யாவற்றையும் செய்துதர எம்மன்னன் ஆயத்தமாக இருக்கிறான். என்னுடன் கூட வந்தால் அவனிடம் உன்னை அழைத்துச் செல்கிறேன். எமது அரசனின் பட்டத்து ராணியாக இருந்து சகல செல்வங்களையும் ஆண்டு அனுபவித்துப் பல நன்மைகளையும் அடையலாம் எனப் பலவாறு இன்னுரை பேசினான்.

அசுர மந்திரி கூறியதைக் கேட்டதும் தேவி தான் அசுரர்களால் துரத்தப்பட்ட தேவர்களின் துயர் துடைக்கும் வண்ணம் அசுரர்களை வதைத்து நீதியை நிலைநாட்ட வந்த சக்திதேவி என்று தெரிவித்தாள். நன்கு கற்று மந்திரிப்பதவி பெற்ற நீ எருமை மாட்டின் மிருக புத்தியுடன் அறிவற்ற சிந்தனையுடன் ஏதோ பேசுகிறாய். நீ ஒரு தூதனாக வந்ததால் உன்னை நான் தண்டிக்கவில்லை. மகிஷாசுரனிடஞ் சென்று சொந்தமான பாதாள உலகத்துக்குப் போய் உயிரைக் காப்பாற்றும் படியும், தேவர்களுக்குத் தீங்கு செய்யாமலும் இருந்தால் நல்லது. அன்றேல் எருமை மாட்டின் அசுர குலத்தை வேரோடு அழிப்பேன் என்று சொல்லுமாறு உரத்துக் கூறினாள். இந்த மகிஷாசுரனுக்கு ஒரு பெண்ணாலேயே மரணம் என்றுள்ளது என்பதை உறுதிப்படுத்தித் தானே அவனைக் கொல்ல வந்ததாகவும் தெரிவிக்குமாறு கூறினாள். மகிஷாசுரனிடம் சென்ற அமைச்சர் தேவி கூறிய யாவற்றையும் தெளிவாகக் கூறி பாதாள உலகஞ் செல்வதா அல்லது போரிடுவதா என நன்கு சிந்திக்குமாறும் கூறினான்.

## காமப் போருக்கு மந்திராலோசனை

மகிஷாசுரனின் கொடுஞ் செயல் காரணமாக அவனை அழிக்க வந்தவள் பராசக்திதான். நேரில் பாராதபோதும் தூதுவர்களின் மூலம் சக்தியின் அழகில் மதிமயங்கிய மகிஷாசுரன் மோக நிலையிற் காணப் பட்டான். சக்தியிடம் தன் காதலை வெளியிட்டு அவளை அடைய விரும்புவதாக அமைச்சர் மூலம் தூதுவிட்டான். சக்தி தனது வந்த நோக்கத்தை விரிவாக எடுத்துக்கூறினாள். அப்படியாயின் மகிஷன் எவ்வாறு தன்மீது காதல் கொள்வதாகப் பிதற்றுவான். மும்மூர்த்தி களையோ மற்றும் தேவர்களையோ விரும்பாத தான் அவன்மீது எவ்வாறு ஆசை வைப்பேன். வீண் கற்பனையை விட்டு உயிருடன் வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினால் தனது குலத்தவர் யாவரையும் அழைத்துக்கொண்டு பாதாளலோகஞ் செல்லட்டும் அன்றேல் போருக்கு வருமாறு தெரிவிக்கும்படி கூறி இடிமுழக்கம் போல் கர்ச்சித்தாள். இக் கர்ச்சனையைக் கேட்டதும் பயந்து மகிஷனை நோக்கி ஓடினான். இக்கர்ச்சனையைக் கேட்டதும் தேவர்களும் நடுங்கினர். பூமியும், மலைகளும் மரங்களும் அசைந்தன. தேவியின் சிங்க வாகனமும் கர்ச்சித்தது. மகிஷாசுரனும் கேட்டு நடுங்கினான். பின்னர் மந்திரிமாரை நோக்கி நாம் இப்போது செய்ய வேண்டியது யாதெனக் கேட்டான்.

மந்திரிமாரில் மதியூகமான பிடாலன் என்பவன் உட்படப் பல மந்திரிகளும் போரிடுவதே சாலச்சிறந்தது என்று கூறி முடிவு செய்தனர். அவர்களுள் துன்முகன், பாஸ்கலன் ஆகிய இருவரும் தாமே முதற் சென்று போராடி வெற்றி வாகை சூடுவோமெனச் சூளுரைத்தனர். அவர்கள் இருவரும் நால்வகைச் சேனைகள் புடை சூழ வீராவேசத்துடன் புறப்பட்டுச் சென்றனர். முதலில் இருவரும் தேவியுடன் வாதாடித் தமது அரசனுக்காகப் பரிந்து பேசினர். தேவியும் எதிர்வாதஞ் செய்தாள். உடனே இருவரும் தேவி மீது பாணம் தொடுத்தனர். தேவிக்கும் அசுர மந்திரிகளுக்குமிடையே நடந்த கதாயுதப் போரில் பாஸ்கலன் மாண்டான்.தொடர்ந்து துன்முகனும் மாண்டான்.

இரு அமைச்சர்களின் மரணத்தைத் தொடர்ந்து சிக்ஷ• என்பவன் தேவியை நாடிச் சென்று வாதிட்டான். போர் மூண்டது. இவனுடன் தாம்பரன் என்பவனும் இணைந்து போரிட்டான். இவர்களும் தேவியால் கொல்லப்பட்டனர்.

இரண்டாவது போரில் இரு பலவான்கள் கொல்லப்பட்டதும் மகிஷன் பிடாலன், அசிலோமன் ஆகிய இருவரையும் போரிற் தலைமை தாங்க அனுப்பினான். அவர்களும் முதலில் தேவியுடன் வாதிட்டனர். பின்னர் போரிட்டனர். முதலில் பிடாலன் கொல்லப் பட்டான். அசிலோமன் தேவியுடன் மோதமுடியாமல் தன் கதாயுதத்தால் சிங்க வாகனத்துக்கு அடித்தான். சிங்கம் அவனை கால் நகங்களால் கிழித்தது. தேவி அவனை வாளால் வெட்டி வீழ்த்தினாள். பல படைவீரர்கள் சிங்கத்தினால் கடியுண்டு பலியாகினர். மகிஷனின் பல தளபதிகளும் படையினரும் இறந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவிக்கும் மகிஷாசுரனுக்கும் இடையே வாக்குவாதம்

மகிஷாசுரன் கெடுமதியால் போரிடத் தொடங்கியதால் தனது பலம் மிக்க பல தளபதிகளையும் அசுரர் படைகளையும் பலி கொடுத்தும் அவனின் காமத்தீ அடங்கவில்லை. தானே போர்க்களம் புகுந்தான். தனது சுயரூபமான எருமைத் தலையுடன் சென்றால் தேவியைக் கவர முடியாதென்றெண்ணி இளவயதுடைய மன்மதன் போல உருவெடுத்து அதிசிறந்த ஆடை ஆபரணங்களை அணிந்தான். அகத்தில் அசுர அகந்தையையும் தேவி மீதிருந்த காதல் மோகத்தையும் சுமந்து கொண்டு தேவி முன் சென்று புன்னகையுடன் உரையாடத் தொடங்கினான். போர்ச் சிந்தனையின்றித் தனது காமக்கோலத்தை விமர்சிக்கும் ஆண் பெண் உறவுகள் அனுபவிக்கும் சுகங்கள் பற்றி அளவற்றதும் தேவையற்றதுமான காம சிந்தனை பற்றியே பிதற்றலா னான். தேவியின் அழகும் இளமையும் தன் போன்ற வீரம், அழகு, பொருட்செல்வம் ஆகியவற்றின் சிறப்பையும் மிகைப்படுத்தியே பிதற்ற லானான்.

மகிஷாசுரனின் தேவையற்ற பேச்சினைக் கேட்ட தேவி பொறுமையுடன் புன்னகைத்தாள். மகிஷனே உன்னை நான் நன்கறி வேன். ஆனால் நீ மட்டும் என்னை அறியவில்லை. அசுர குலத்தின் அரசனான உன் நயவஞ்சக சிந்தனையில் பெண் என்னும் இனத்தினர் போர் புரியும் ஆற்றலில்லாதவரென்று எண்ணியே எவராலும் உனக்கு மரணம் ஏற்படக்கூடாதென்றும் பெண்ணினால்தான் மரணம் ஏற்படலாம் எனவும் வரம் பெற்றாய். இந்திரன் முதலான தேவர்களை உன் கொடுமையால் தேவலோகத்திலிருந்து துரத்தினாய். இந்திராதி தேவர்களின் பொருட்களையெல்லாம் சூறையாடினாய். அசுரனாகிய நீ இந்திரபோகத்தை வலோற்காரமாக அபகரித்தாய். உன் அக்கிரமம் தாங்காமல் மும்மூர்த்திகளும் தேவர்கள் யாவரும் தமது சக்தி களையும் ஒன்றிணைத்த பராசக்தியாகவே என்னைத் தோற்றுவித்து இங்கு உன்னையும் உனது அசுர குலத்தையும் அழித்து நீதியை நிலைநாட்டவே யாவரும் என்னைப் பணிந்து கேட்டனர். நீயோ பெண்ணழகில் மோகித்துப் பசப்பு வார்த்தைகள் பேசுகிறாய். உன் வீண் வார்த்தைகளை விட்டுப் பாதாள உலகத்துக்குப் போனால் உயிர் தப்புவாய். முடியாவிடின் மடிந்துபோ என்று உயர்ந்த தொனியில் தேவி கர்ச்சித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிஷாசுரன் வதை

தேவியின் உறுதியான நிலையறிந்த மகிஷாசுரன் தனது காம சிந்தனையை விட்டு யுத்தவெறியனாய் வில்லில் நாணேற்றிப் போர் புரிந்தான். ஏனைய அசுரர் படைகளும் தேவி மீது பாணங்களைத் தொடுத்தன. தேவி உக்கிரமாகப் போராடினாள். தேவியின் சிங்கமும் பலரைக் கொன்றது. தேவி மகிஷன் மீது தனது கதாயுதத்தால் தாக்கினாள். மயங்கி வீழ்ந்த மகிஷன் மீண்டும் போரிட வந்தபோது தன் உருவை மாற்றிச் சிங்க வடிவாகப் பலமுறை வந்து போர் செய்தான். தேவியின் மோதலுக்கு அஞ்சியவன் யானை வடிவில் வந்தான். தேவியின் வீரத்துக்கஞ்சியவன் பாம்பு வடிவமெடுத்துப் போராடினான். பாம்பினாலும் தேவியை வெல்ல முடியவில்லை. இறுதியாகத் தனது சுய ரூபமான எருமை மாட்டுத் தலையுடன் வந்தான். விற்போர், வாள்ப்போர் நடந்தது. எவ்வகையிலும் மகிஷன் வெற்றி பெறமுடியாத உக்கிரமமான போர் நடந்தது. போரின் வெம்மையால் மகிஷன் கலகலவெனச் சிரித்துத் தன் அசுரபலத்தைப் பயன்படுத்திப் பலவாறு போர் புரிந்தான். தேவி தனது சூலாயுதத்தினால் மகிஷனின் மார்பைப் பிளந்தாள். தேவியின் ஏனைய ஆயுதங்கள் அசுர படையை அழித்தன. மகிஷனின் தலையில்லாத முண்டம் வானுயரப் போய் மண்ணில் மடிந்தது. தேவியின் சிங்கம் எஞ்சிய அசுரர்களைப் பந்தாடியது.

தேவர்கள் ஆனந்தக் கூத்தாடித் தேவியைத் துதித்துப் பாடி இன் புற்றனர். மகிஷாசுரனை வதைத்த பராசக்திதேவிக்கு மகிஷாவர்த்தனி என்றும் சண்டிகாதேவி என்றும் பெயர்கள் வழங்கப்பட்டன. அசுரர்களை வதைத்து நீதியை நிலை நாட்டித் தேவர்களை அச்சமின்றி வாழ வைத்த சக்திதேவி மறைந்தருளினாள்.

## சும்ம நிசும்ம அசுரர்களின் அட்டகாசம்

முன்னொரு காலத்தில் சும்மன், நிசும்மன் என்னும் சகோதரர் களான இரு அசுரர்கள் பாதாள லோகத்தில் அரசாண்டனர். இவர்கள் பாதாள உலகத்திலிருந்து பூவுலகிலுள்ள புஷ்கரசேத்திரத்தில் பிரம்மனை வேண்டிப் பன்னெடுங்காலம் கடுந்தவஞ் செய்தனர். அசுரர் களின் தவத்தை மெச்சிய பிரம்மா அவர்கள் முன்தோன்றி வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரங்கள் யாதெனக் கேட்டார். அவர்கள் இருவரும் இறவா வரம் வேண்டுமென்றனர். பிரம்மா அவர்களை நோக்கி பிறந்தவர்கள் யாவரும் இறக்கவேண்டிய நியதி உள்ளதால் வேறு வரம் கேட்குமாறு கூறினார். அசுரர்கள் தமக்குப் பெண்களைத் தவிர வேறெவராலும் மரணம் ஏற்படக்கூடாதெனக் கேட்டனர். பிரம்மாவும் கேட்டவரம் தந்து மறைந்தருளினார்.

அவ்விருவரும் பிருகு முனிவரை அழைத்து ஒரு சுபவேளை யில் அசுரராச்சியப் பட்டாபிஷேகஞ் செய்வித்தனர். வரங்கள் பல பெற்ற அசுரர்கள் மூவுலகையும் அடக்கியாள முற்பட்டனர். வரங்களின் வலிமையால் பல தீய செயல்களுக்கும் உறைவிடமானார்கள். தேவலோகஞ் சென்று இந்திராதி தேவர்களுடன் போர் புரிந்து தேவலோகத்தில் இந்திரப் பதவியைக் கைப்பற்றினர். மற்றும் பல தேவர்களின் பதவிகளையும் பெற்றதுடன் காமதேனு, கற்பகதரு, நிதிகள் ஏனைய அபூர்வ சொத்துக்கள் ஆகிய பல பொருட்களையும் கவர்ந்தனர். மூவுலகிலுமுள்ள சகல பட்டங் கள், பதவிகள், பொருட்கள், சிறப்புகள் யாவற்றையும் சூறையாடினர். மிகச் சிறப்பாகவும் கொடுங்கோல் ஆட்சி செய்தும் வாழ்ந்தனர். பயந்தோடிய தேவர்கள் இமய மலைச் சாரலிலுள்ள குன்றுகளிலும் குகைளிலும் பதுங்கி வாழ்ந்தனர்.

தமது குலகுருவான பிரகஸ்பதியின் ஆலோசனைப்படி பராசக்தி தேவியை வேண்டித்தவமிருந்து மந்திரங்களாலும் தோத்திரங் களாலும் மலர்களாலும் அர்ச்சித்து வழிபட்டனர். தேவர்கள் மீது இரங்கிய சக்திதேவி அவர்களுக்கு நேரிற் தரிசனந் தந்தாள். தேவியின் இளமை அழகும், சிறந்த ஆடை அணிகளும் கம்பீரமான தோற்றமும் இனிய குரலும் தேவர்களை நன்கு கவர்ந்தன. அவர்கள் தேவியைப் பலவாறு வணங்கித் துதி செய்தனர். கம்பன் நிசும்பன் என்னும் இரு கொடிய அசுரர்கள் வரங்கள் பல பெற்ற மமதையால் தேவலோகத்தில் புகுந்து எமது அரசையும் செல்வங்களையும் கவர்ந்து எம்மைத் துன்புறுத்தித் துரத்திவிட்டனர். அவர்களுள் இரத்தபீஜன், சண்டன் முண்டன் என்னும் கொடிய அசுரர்களும் இணைந்துள்ளனர். சகல பிரபஞ்சங்களையும் படைத்துக் காக்கும் தாயே எங்களை நீயே காத்தருள வேண்டுமெனப் பணிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திரகாளியின் தோற்றம்

தேவர்களின் வேண்டுதலுக்கேற்ப பராசக்தி தனது உடலிலிருந்து ஒரு சக்தியைத் தோற்றுவித்தாள். இச்சக்தி கௌசிகை என வழங்கப்பட்டாள். இச்சக்தி கருமை நிறமும் வழிபாட்டுக்குரிய சொரூபமாகவும் அமைந்தாள். பத்திரகாளி என்றும் அசுரர்களுக்குப் பயங்கர வடிவத்தைக் காண்பித்ததால் காளராத்திரி என்றும் அழைக்கப் பட்டாள். இவள் அசுரர்களை அழிப்பதற்காகப் பயங்கர ரூபமெடுத் தாள். மகாதேவியானவள் தேவர்களை நோக்கி அமரர்களே அஞ்ச வேண்டாம். சும்பநிசும்ப அசுரர்களைக் கொன்று உங்களைக் காப்பாற்றவே தோன்றினேன் என்றாள். சிங்க வாகனத்தில் அமர்ந்து காளி தேவியையும் அழைத்துக்கொண்டு அசுரர்களின் நகரை அடைந்தாள். அண்மையிலிருந்த நந்தவனத்தில் காட்சி தந்தாள். அமைதியான சோலையிலிருந்து இனிய கீதங்களை இசைத்துக் கொண்டிருந்தாள். இக்கான ஓசையை மிருகங்களும் பறவைகளும் நன்கு சுவைத்து அசைவற்றிருந்தன.

அவ்வழியே வந்த சண்டமுண்டன் என்னும் இரு அசுரர்கள் இசையில் மயங்கி தேவியினண்மையிற் சென்றனர். இதுவரை எங்கும் காணாத அழகிய பெண் தனது இனிய இசையால் அசுரர்களை வியக்க வைத்தாள். அவர்கள் ஓடிச்சென்று சும்பாசுரனிடம் அரசே எமது நந்த வனத்தில் காமமோகினியொருத்தி தனது அழகினால் யாவரையும் கவர்ந்தவள் இனிய இசையினால் கேட்போரை மயங்க வைக்கிறாள். இவளைப் போன்ற அழகியை வேறெங்கும் காணவில்லை. ஒரு சிங்கத் தின் மீது அமர்ந்திருக்கும் அவள் யாரோ? ஏன் இங்கு வந்தாள்? எனத் தெரியவில்லை. அப்படியான ஒரு கட்டழகியை அழைத்து வந்து உங்களுக்கு உடமையாக்கி அந்தப்புரத்தில் அமர்த்தினால் உங்களுக்கு மேலும் இராசயோகம் கிடைக்குமெனக் கூறிச் சும்பனுக்குக் காமத்தீயை மூட்டினர்.

காமம் தலைக்கேறிய சும்பாசுரன் தனது அருகிலிருந்த சுக்கிரீவன் என்பவனை நோக்கி அப்பெண்ணின் விபரங்களை அறிந்து அவளை எம்மிடம் சேர்த்து வைக்க வேண்டிய வழி வகைகளைச் செய்து வருமாறு அனுப்பினான். அவன் தேவியிடம் சென்றடைந்ததும் அவளை வணங்கி நயமான இனிய வார்த்தைகளாற் பேசலானான். பேரழகியே மூன்று உலகங்களையும் வென்று அரசாளும் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனான சும்பாசுரன் திறமையான வீரமும், மிகுந்த செல்வமும் அடைந்துள்ளான். உன் பாடல்களையும் அழகையும் சொல்லக் கேட்டுக் காமத்தீயால் மயங்கியுள்ளான். உனது வருகையை அறிந்ததும் உனது விபரங்களை அறியவும் உன் மீது அன்பு பாராட்டவும் எண்ணியே என்னை இங்கு தூதுவனாக அனுப்பினான். அவன் உன் போன்ற பேரழகும் திறமையுமுள்ள பெண்ணை மணம்புரிந்து அனுபவிக்க ஆவலுற்றான். உனது சகல விருப்பங்களையும் விபரமாகச் சொல் வாயாக என்றான்.

தூதனின் பேச்சைக் கேட்டதும் தேவி புன்னகை செய்து தூதனை நோக்கி நான் சும்பாசுரன், நிசும்பாசுரன் ஆகியோரைப் பற்றியும் அவர் களின் அழகு, வீரம், செல்வம், கொடை ஆகியவற்றைப் பற்றியும் நன்கறிவேன். அவர்களை நேரிற் காணவே இங்கு வந்தேன். நான் சொல்வதை சும்பனிடம் அவனைத் தனியாக அழைத்து விபரமாகச் சொல்லுமாறு கூறினாள். அவள் சொன்னவை யாதெனில் "சும்பரே நீ அழகால், வீரத்தால், திறமையால், போர் ஆற்றலால், சகல கலா விற்பன்னராய், நீதியானவனாக, பண்பாளனாக காமத்திற் சிறந்தவனாக இருப்பதாக அறிந்தேன். ஆனால் உன்னை நேரிற் கண்டு உன் திறமையால் என்னை நீ வென்று என்னை அடைவாய் என்றெண்ணியே இவ்விடத்தில் வந்தேன். மேலும் நான் சிறுமியாக இருந்தபோது யுத்தஞ் செய்வதில் திறமையாக இருந்ததால் என் தோழியரிடம் ஒரு சபதஞ் செய்தேன். அச்சபதம் யாதெனில் என்னுடன் போர் செய்து என்னைத் தோல்வியடையச் செய்யும் ஒருவரைத்தான் மணஞ் செய்வேன் என்பதாம். அதற்கமைவாக என்னுடன் போர் செய்து என்னைத் தோல்வியடையச் செய்து என்னை உனதுடமை யாக்கி என் மன நிறைவை ஏற்படுத்துவாயாக என்று மன்னனிடம் கூறுமாறு சொன்னாள்.

## வீரப்போரா காமப்போரா

தேவி சொல்லி முடித்ததும் தூதுவன் அவளை நோக்கி பேரழகியே பெண்ணின் குணவியல்புகளுக்கு யுத்தம் ஏற்றதல்ல. சும்பாசுரனுடன் வந்து அவனை அடைவதால் மூவுலகையும் ஆளும் பட்டத்தரசியாக, செல்வங்களுக்கெல்லாம் அதிபதியாகவும் உன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரத்தாலும் காமத்தாலும் வென்ற கணவனின் சிந்தை கவர்ந்த வளாகவும் இருக்கலாமெனப் பலவாறு பரிந்துரைத்தான். தூதுவனின் மாயாஜாலங்களைப் பொருட்படுத்தாத தேவி அவனை சும்பா சுரனிடஞ் செல்லுமாறு வற்புறுத்தினாள். அவன் சும்பாசுரனிடஞ் சென்றதும் சகல விபரங்களையும் தெரிவித்தான். சும்பன் நிசும்பனிடமும் மந்திரிமாருடனும் ஆலோசித்தான். முடிவில் அசுரத் தளபதி தும்பரலோசனை யுத்தத்துக்கு அனுப்பத் தீர்க்கமாக முடிவு செய்தனர். துப்பரலோசனன் தமது நால்வகைச் சேனைகளுடன் தேவியை நோக்கிச் சென்றான். அவன் அங்கு சென்றதும் தேவியை நோக்கி "பெண்ணே உலகில் வீரத்தை நிரூபிப்பது வீரப் போராகும். தமது காமத்துக்காகப் போரிடுவது காமப் போராகின் நீ தோல்வியடை யும்போது வெற்றி பெற்று உன்னை அடைவதாகக் குறிக்கும். ஒரு அழகுள்ள பெண்ணாகிய நீ யுத்தமின்றிச் சும்பாசுரனிடஞ் சென்று உனது விருப்பத்தை அடையலாமென பலவாறு புகட்டினான்.

## காளி சாமுண்டியானாள்

தும்பரலோசனன் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் தேவி சிரித்தாள். காளி அவனைப் பார்த்துத் தன் நிலையை வெளியிட்டாள். அவனை நோக்கி மூடனே துன்மார்க்கனான சும்பனுக்காக வந்த நீ தேவையற்றவற்றைப் பேசி உளறாதே. இங்கு வந்த நீ யுத்தஞ் செய். அல்லது பாதாளத்திற்சென்று மறை எனக் கர்ச்சித்தாள். சினங்கொண்ட அசுரன் காளியை நோக்கி உன்னையும் சிங்கத்தையும் வெட்டி வீழ்த்தி விட்டு தேவியை அழைத்துச் செல்கிறேன் பார் என்றான். அப்போது பத்திரகாளி தன் வில்லை எடுத்து அம்புகளைச் சொரிந்தாள். இருவருக்கும் இடையே போர் உக்கிரமடைந்தது. பத்திரகாளியைத் தாக்கச் சென்ற அசுரன் காளியாற் சாம்பலாக்கப்பட்டான். தும்பராலோசனன் காளியாற் சாம்பலானான் உடன் சென்ற சேனைகள் மடிந்தும் எஞ்சியோர் அங்கவீனர்களாகவும் சென்று சும்பனிடம் சரணடைந்தனர். சும்பன் மீண்டும் தன் தளபதிகளான சண்டனும் முண் டனும் போர்க்களஞ் செல்ல அனுப்பி வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்ட முண்டர்களின் வீரசாகசம்

சண்ட முண்டர்கள் தேவியை நோக்கி கோர யுத்தத்தை விட்டுச் சும்பனை அடையும்படி தமது வீரதீரச் செயல்களால் உறுதி செய்யும் நோக்கில் தமது அரசனைப் புகழ்ந்துபாடி தேவியை அரசனிடம் வருமாறு கூறினர். அசுரர்களின் வீண் பேச்சைக் கேட்டதும் தேவி கர்ச்சித்தாள். போர் மூண்டது. சிங்கமும் பலமாகக் கர்ச்சித்தது. அப்போது தேவியின் நெற்றிக் கண்ணிலிருந்து காளி தோன்றினாள். புலித்தோலும் யானைத் தோலும் ஆடையாகவும், மண்டை ஓடுகளை மாலையாகவும் அணிந்து நீரற்ற பாழடைந்த கிணறு போன்ற அகன்ற வாயும் பெரிய தொப்புளுடனும் கோர முகத்துடனும் சிவந்த கண்களுடனும் காணப்பட்டாள். அசுரர் படையினரையும் யானை கழுதைப் படைகளையும் வாயிற் போட்டும் வதைத்தாள். சிங்கமும் பலரைக் கடித்துக் குதறிக் கொன்றது. கடும் போரில் சண்டமுண்டர்களும் பலியாகினர். இப்போரில் காளியின் வீரப் பணி மேலோங்கி யிருந்ததால் போர் முடிவில் தேவி காளியை வியந்தாள். சண்டமுண்டர்களை அழித்த பெருமைக்காக காளிக்கு "சாமுண்டி" என்றும் வழங்கப்படுவாய் எனத் தேவி வரம் தந்தாள்.

## இரத்தபீஜன் தலையீடு

தேவியுடன் போரிடச் சென்ற சண்டமுண்டர்கள் மடிந்தது அநேக அசுரப் படையினர் கொல்லப்பட்டும் அழிந்ததை போரில் அகப்பட்டு அவயவங்களை இழந்த ஒருசில அசுரப் படையினர் சும்பாசுரனிடம் தெரிவித்தனர். இச்செய்தியை அறிந்த சும்பாசுரன் கடுஞ்சினங் கொண்டான். போர்க்களத்தில் நின்று போராடிய அசுரர்கள் தேவியின் வீரத்தை நன்கு விபரித்தனர். யாவற்றையும் அறிந்த சும்பன் இரத்தபீஜன் என்னும் தலைவனை அழைத்துப் போருக்குச் செல்லுமாறு நயமாகக் கூறினான். இரத்தபீஜன் தான் போருக்குச் சென்று தேவியை வெற்றி கொண்டு அவளை அழைத்து வருவதாகக் கூறிவிட்டுச் சென்றான்.

இரத்தபீஜன் போரிட வருவதைக் கண்ட தேவி சங்கை ஊதிப் போருக்கு ஆயத்தமானாள். அசுர சேனை பயந்து தடுமாறியது. தேவியை நாடிய இரத்தபீஜன் தனது வீரம் மற்றும் போர்ச்சிறப்புகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அனுபவம் முதலிய வீரப் பிரதாபங்களை எடுத்துக் கூறினான். தொடர்ந்து சும்பாசுரனின் வீரம் சிறப்பு போன்றவற்றை வியந்து கூறி அவனை அடையுமாறு கூறினான். இதனைக் கேட்டதும் சாமுண்டியான காளியும் மகாசக்தியான தேவியும் கேலியாகச் சிரித்தனர்.

## நவசக்திகளின் வீரவிளையாடல்கள்

மகாசக்தியான தேவி கலகலவெனச் சிரித்து இரத்தபீஜனை நோக்கி மூடனே உனக்கும் முன்வந்த அசுரர் தலைவர்களுக்கும் சும்பாசுரனின் புகழ் பாடுவதும் வீரம் பேசுவதும்தான் தெரியும் எனப் பலவாறாகச் சொல்லி ஏளனமாகப் பேசினாள். இதனால் வெகு சினங் கொண்ட இரத்தபீஜன் வில்லை வளைத்துப் பாணங்களைச் சொரிந் தான். தேவியும் எதிராகப் பாணங்களைத் தொடுத்தாள். இரத்தபீஜன் மூச்சிழந்து தேரிலிருந்து கீழே விழுந்தான். இதைக் கண்ட அசுரர் படை "ஆ" என ஓலமிட்டனர். இச்சத்தத்தின் அதிர்ச்சியால் சும்பன் தன் வீரர்கள் மூலம் காம்போஜதேசத்துச் சேனைகளை அழைத்து வருமாறு ஏவினான்.

பத்திரகாளி பெருங்கூச்சலிட்டாள். தேவி தனது வில்லின் நாணொலியையும் சங்கொலியையும் ஏற்படுத்தினாள். சிங்கமும் கர்ச்சித்தது. தேவர்களின் சக்திகள் தேவர்களின் வாகனங்களில் வந்து தேவியைச் சூழநின்று அணி செய்தனர். சக்திதேவி மகிழ்ந்தாள். தேவர்கள் ஆரவாரஞ் செய்தனர். அதேசமயம் சக்தி நாதரான சிவபிரான் தோன்றி அசுரர்களை அழித்த பின் சக்திகள் யாவும் அவரவர் இடங்களுக்குச் செல்லட்டும். பின்னர் யாகங்களை நியதியாகச் செய்யவும் அவிர்பாகங்களைப் பெறவும் முடியுமெனத் தெரிவித்தார். சண்டிகையின் உடலிலிருந்து ஒரு அற்புதமான ஒளி மிகப் பிரகாசமான சிவசக்தி தோன்றிச் சிவபிரானை பொதுநலனுக் காக ஒரு தூது செல்லுமாறு கேட்டது. சும்ப அசுரர்களைப் போருக்கு வருமாறு தூது செல்வதால் யுத்தம் முடிவடையும் என அறிந்த சிவபிரான் சூலாயுதத்தையும் கையிலேந்திய வண்ணம் சும்ப அசுரர்களிடம் சென்றார். அங்கு அசுரர்களை நோக்கி உயிருக்கு அஞ்சினால் தேவருலகிலிருந்து பாதாளத்துக்குச் செல்ல வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது தேவியுடன் போருக்குச் செல்ல வேண்டு மெனப் பல யுத்த தர்மங்களையும் நயம்பட உரைத்தார். சும்ப நிசும்பர்கள் போருக்குச் செல்ல முன்வந்தனர். சிவபிரான் மறைந்தருளினார். இதனால் சண்டிகை என்னும் தேவிக்குச் சிவதூது என்னும் பெயரும் ஏற்பட்டது.

சும்பநிசும்பர்கள் போர்க்கோலம் பூண்டு யுத்த களத்துக்கு வந்ததும் சக்திக்கும் அசுரர்களுக்குமிடையே கடும்போர் மூண்டது. காளி சூலாயுதத்தை ஏந்திய வண்ணம் அசுரர்களிடையே புகுந்து கோபாவேசத்துடன் பலரைக் கொன்று குவித்தாள். மும்மூர்த்திகள் மற்றும் தேவர்களின் சக்திகளும் பல்வேறு முனையில் நின்று அசுரர்களைக் கொன்று குவித்தனர். சில அசுரர்கள் பயந்தோடினர். அச்சமயம் நவசக்திகள் தமது வெற்றிச் சங்கெடுத்து முழங்கினர். இச்சத்தத்தைக் கேட்டதும் இரத்தபீஜன் கொதித்தெழுந்து பயந்தோடும் அசுரர்களை ஒன்றுசேர்த்துக் கடும்போர் புரிந்தான்.

## இரத்தபீஜனின் இரத்தம்

இரத்தபீஜன் முன்னொரு காலத்தில் இறைவனை வேண்டிக் கடுந் தவமிருந்தான். அவன் தனது உடலிலிருந்து சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தத்திலும் தனக்கு நிகரான வீரமுடைய அசுரர்கள் தோன்றும் வண்ணம் வரம் பெற்றிருந்தான். நவசக்திகள் தனித்தும் ஒருமித்தும் அவனைக் கொல்ல முன்வந்தனர். அவனின் உதிரத்திலிருந்து பல்லாயிரம் அசுரர்கள் தோன்றினர். இரத்தபீஜனின் தன்மையை அறிந்த தேவி காளியை நோக்கித் தன்சூலத்தினால் அவனைக் குத்தும்போது அவனின் உடலிலிருந்து இரத்தஞ் சிந்தவிடாது வாயை அகலத்திறந்து யாவற்றையும் குடித்துவிடுமாறு பணித்தாள். அவ்வாறு இருவரும் செயற்பட்டனர். தேவி வாளால் வெட்டியும் சூலத்தினால் குத்தியும் தனது வீரத்தை உறுதிப்படுத்தினாள். சாமுண்டியும் தனது பணியாக ஒரு இரத்திமும் சிதறவிடாது குடித்துப் பரவசமடைந்தாள். மகிழ்ச்சியால் ஆனந்தக் கூத்தாடினாள். இரத்தபீஜன் மாண்டதும் தவறிய அசுரர்களும் "ஆ" என அலறிய வண்ணம் ஓடிச்சென்று சும்பனிடம் முறையிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறிய அசுரர் படையினர் தேவி மற்றும் நவசக்தியினரதும் வீரத்தையும் போர்த்திறமையையும் நேரிற் கண்டதால் சும்பாசுரனிடம் அந்த சக்திகளுடன் எதிர்த்துப் போரிட முடியாது. யாவரும் பாதாள உலகத்துக்குப் போகலாம் அல்லது தேவியிடம் சரணடைவது நல்லதாகுமெனத் தெரிவித்தனர். இதைக் கேட்டதும் சும்பாசுரன் கோபக்கனலுடன் தனது வலிமைக்குப் பங்கமில்லாது நேரிற்போரிட ஆயத்தமானான். நிசும்பனைத் தனக்கு உதவியாக வருமாறும் கேட்டான். அப்போது நிசும்பன் தானே போரிட்டு வென்று வருவேன். அண்ணா நீர் போர்க்களம் வர வேண்டாமெனக் கூறித் தன் அசுர சேனைகளுடன் போர்க்களம் ஏகினான்.

## நிசும்பனின் வீழ்ச்சி

போர்க்களம் வந்ததும் நிசும்பன் சரமாரியாக அம்புமாரி பொழிந்தான். சண்டிதேவி காளிதேவியை நோக்கிச் சிரித்துவிட்டுத் தானும் மறுப்பாகச் சரமாரி பொழிந்தாள். இதனால் அசுரனின் பாணங் கள் அழிக்கப்பட்டன. தேவியின் வாகனமான சிங்கம் அசுர சேனையுட் புகுந்து பலரைக் குதறிக் கொன்றும் கடித்துத் தின்றும் பசியாறியது. நிசும்பன் முதலில் காளியைக் கொல்வதென விரும்பினான். அப்போது தேவி தன் உருவத்தை அதி வனப்பு மிக்க மோகினியாக மாற்றியதுடன் கோபக்கனல் மிகுந்த தோற்றத்தில் அசுரனை நோக்கினாள். அப்போது நிசும்பன் தேவியின் தோற்றத்தில் மயங்கித் தடுமாறினான். அவனை நோக்கிய தேவி நிசும்பா இதுவரை இங்கு வந்த எவரும் வெற்றி பெற வில்லை. நீ விட்டுச் செல்வதால் நன்மையுண்டு என ஏளனமாகக் கூறினாள்.

தேவியின் மீது கோபங்கொண்ட நிசும்பன் வாளை எடுத்துச் சிங்கத்தின் மீது வீசினான். அவனது வாளைக் கதாயுதத்தினால் தேவி தடுத்தாள். மேலும் சினமடங்காத தேவி கோடரியால் நிசும்பனின் தோளை வெட்டினாள். கடும்போர் மூண்டது. அசுர சேனை சின்னா பின்னமாக்கப்பட்டு அழிந்தது. தேவி வாளினால் நிசும்பனின் தலையை வெட்டினாள். தலையற்ற முண்டமானது கையிலிருந்த கதாயுதத்துடன் போர்க்களமெங்கும் சுற்றி வரத் தேவி கால்களையும் கைகளையும் வாளால் வெட்டினாள். நிசும்பனின் உடல் தலை கை கால்கள் அற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டமாக வீழ்ந்தது. இச்செய்தியை போரிற் தப்பியோடிய அசுரர்கள் சும்பனுக்குத் தெரிவித்தனர். தமக்கு வெற்றி தோல்வி எது வந்தாலும் போரிடுவதே வீரனுக்கு அழகாகும் எனக் கூறிய சும்பன் போர்க்களம் புகுந்தான்.

## சும்பாசுரன் வதம்

சதுரங்க சேனையுடன் சகல போர்க்கருவிகளையும் ஏந்தியபடி போர்க்களம் சென்ற சும்பன் தேவியைக் கண்டதும் அவளின் பேரழகையும் அங்கங்களின் பொலிவையும் கண்டதும் அவனது வீரம் ஒரு புறஞ் செல்ல தேவி மீது மோகங்கொண்டு பலவாறு சிந்தித்தான். தனது அறியாமையால் தேவியை நோக்கி உரையாடினான். இளமையும், அழகும், பொலிவும் மிக்க ஒரு பெண் யுத்தம் புரிவது சரியல்ல. போர்க் களத்தில் அழகற்ற கோர ரூபத்துடன் போராடலாம். ஆனால் உன் உடலமைப்பு போருக்கன்று. இன்ப அனுபவத்துக்கே உரியதாகும் எனத் தொடங்கிக் காம வசப்பட்டவனாய் ஒரு பெண் முன் பேசக்கூடாத அழகற்ற வீண் வார்த்தைகளைப் பேசிய வண்ணமிருந்தான். தேவி காளியை நோக்கி அசுரனுடன் போரிடுமாறு கூறினாள். இருவருக்கு மிடையே போர் தொடங்கியது. அசுரனின் காம இச்சையால் வீரம் நன்கு செயற்பட வில்லை. காளி அசுரனின் மீது பாய்ந்து போர் புரியத் தலைப்பட்டாள். சும்பாசுரனின் தேரை அடித்து நொறுக்கிக் கழுதைகளையும் சாரதியையும் அடித்தாள். சும்பன் தனது பெரிய கதாயுதத்தைக் கையில் எடுத்துக் காளியை அடித்துவிட்டுச் சிரித்தான். காளி அவனின் ஒரு கையைக் கத்தியால் வெட்டினாள். தோளையும் ஒரு கையையும் இழந்து அங்கமெல்லாம் இரத்தம் பீறிட்டாலும் ஒரு கையால் கதாயுதத்தை ஏந்திக் காளியை அடித்தான். காளி அசுரனின் மறு கையையும் வாளால் வெட்டினாள். கைகளற்ற நிலையிலும் அவன் தனது கால்களால் காளியை உதைத்துப் போராடினான். காளி அசுரனின் இரு கால்களை வெட்டியதும் அடியற்ற முண்டமாக நிலத்தில் மலைபோல வீழ்ந்து பிணமாகக் காணப்பட்டான்.

தேவர்கள் சாமுண்டியைப் போற்றித் துதித்தார்கள். இதமான தென்றல் வீசியது. அமைதி நிலவியது. ஓமாக்கினி வலஞ்சுழித்து எழுந்தது. உயிர்தப்பிய அசுரர்கள் தமது ஆயுதங்களைக் கீழே போட்டனர். தேவியை வணங்கிவிட்டுப் பாதாள உலகஞ் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருத்திராசுரன் கதை

துஷ்டப் பிரஜாபதி என்ற தவஞானிக்கும் இந்திரனுக்குமிடையே முன்னொரு காலத்தில் தீராப் பகை ஏற்பட்டது. இதனால் இந்திரனை அழிப்பதற்கு துஷ்டப்பிரஜாபதி மூன்று தலைகளையுடைய திரிசுரன் என்னும் மகனை உருவாக்கினான். அவன் அதிசய வலிமைகள் படைத்தவனாக காம மோகங்களை விடுத்துத் தவஞ் செய்ய முற்பட்டான். எவராயினும் தனது தவநிலையை அழிக்காதவாறு கடுந்தவத்தில் ஒன்றியிருந்தான். இவனது தவத்தினால் தனக்கு இடையூறு வருமென எண்ணிய இந்திரன் தேவ மாதர்கள் மூலம் தவத்தைக் குலைக்க முற்பட்டான். இந்திரனின் எண்ணம் நிறைவேறததால் தானே திரிசிரனைக் கொல்லச் சென்றான். திரிசிரன் தவநிலையில் ஒன்றியிருந்ததால் அவனது வச்சிராயுதத்தால் கொன்றுவிட்டான்.

இதனையறிந்த துஷ்டப்பிரஜாபதி மிகக் கோபங்கொண்டு ஏது கெடுதியுஞ் செய்யாது தவத்திலிருந்த தன் மகனை இந்திரன் கொன்றான். அவனைக் கொல்லவென்றே ஒரு புத்திரனைப் படைத்து இந்திரனின் வஞ்சம் தீர்க்க உறுதி பூண்டான். துஷ்டப் பிரஜாபதி இதற்கென்றே எட்டு நாட்கள் தவமிருந்து யாகஞ் செய்தான். ஓமாக்கினியிலிருந்து அக்கினி உருவமான ஒருவன் தோன்றினான். அவன் பிரஜாதிபதியை நோக்கித் தந்தையே நீர் வேண்டுவது யாதெனக் கேட்டான். தன் மகன் திரிசிரனைக் கொன்ற இந்திரனை வென்று இந்திரப் பதவியை அடைய வேண்டும் என்றான். என் கவலையை நீக்கச் சக்தியிலிருந்து விருத்தி யடைந்த விருத்திரன் என அழைக்கப்படுவாய் என்று கூறினான்.

விருத்திராசுரன் இந்திரனை அழிப்பதற்காகச் செல்வதன் பேரில் இரு அம்பறாத் தூணிகளையும், அழகான கவசமொன்றையும் மேக மண்டலம் போன்ற ஒரு தேரையும் கொடுத்து ஆசி கூறி அனுப்பி வைத்தான். விருத்திராசுரன் போருக்காக இரதத்தின் மீதிருந்து வருவதை இந்திரன் அறிந்தான். அவனுக்கு உதவியாகப் பாதாள உலகத்து அசுரர்கள் யாவரும் ஆயுதங்களை ஏந்திய வண்ணம் வந்தார்கள். தேவர்கள் பயந்து இந்திரன் போருக்குச் சென்றால் வெற்றியடைய முடியாதெனத் தெரிவித்தனர். இந்திரன் தேவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவிடஞ் சென்றான். தேவகுரு இந்திரனை நோக்கி ஒரு தவசீலனைக் கொன்றதால் கடும் பாபச் செயலுக்கு ஆளானாய். இனி ஏதுஞ் செய்ய முடியாதெனக் கூறினார். இந்திரன் ஏனைய தேவர்களையும் அழைத்துக் கொண்டு போரை நாடாது தலைமறை வானான். இந்திராதிதேவர்கள் தமது பாதுகாப்பு நாடி "மானதோத்தா" என்னும் மலைச்சாரலில் தங்கியிருந்தனர். விருத்திராசுரன் அசுர படைகளுடன் அப்பகுதியை முற்றுகையிட்டான். இரு பகுதியினருக்கு மிடையே கடும்போர் மூண்டது. தேவர் படை பின்வாங்கி ஓடியது. விருத்திராசுரன் இந்திரனை வென்று ஐராவதம் என்னும் பட்டத்து யானையைக் கைப்பற்றியதும் தந்தையிடம் சென்று முழு விபரத்தை யும் தெரிவித்தான். துஷ்டப்பிரஜாபதி தன் மகனின் வீரத்தை மெச்சி மகிழ்ந்தான். பல நல்லுபதேசங்களையும் பல மதிநுட்பங்களையும் தெரிவித்தான். மேலும் இந்திரனின் வீராசனத்திலிருந்து பிரம்மனை நோக்கிக் கடுந்தவஞ் செய். பிரம்மன் தோன்றுவான். பிரம்மனிடம் நல்ல வரங்களைப் பெற்று இந்திரனைக் கொல்லும் வரை தனது துயர் நீங்காதெனக் கூறினான். தந்தை சொற்படி விருத்திராசுரன் மலை யொன்றிலிருந்து பிரம்மனை வேண்டிக் கடுந்தவம் இருந்தான். அவனது தவத்தைக் கெடுக்க இந்திரன் பலமுறை முயற்சித்தும் பயனடையவில்லை.

## விருத்திராசுரனின் வெற்றியும் தேவர்களின் முறையீடும்

விருத்திராசுரன் பன்னெடுங்காலம் தவமிருந்தான். பிரம்ம தேவன் அவன் முன் தோன்றி வேண்டும் வரம் யாதெனக் கேட்டான். தனக்கு எறும்புகளாலும், மரங்களினாலும், உலர்ந்த பொருட்களி னாலும், ஈரமான பொருட்களினாலும், மூங்கிலினாலும், ஆயுதங் களினாலும் மரணம் ஏற்படாமல் இருக்க வேண்டும். தேவர்களால் வெல்ல முடியாத வீரியமும் இருக்க வேண்டும் என்றான். பிரம்மாவும் வேண்டியபடி வரம் தந்து மறைந்தார்.

விருத்திரன் தந்தையிடஞ் சென்று நடந்தவற்றைக் கூறினான். மங்களம் உண்டாகட்டும் என வாழ்த்தினான். விருத்திரன் இந்திரன் மீது படை எடுத்துச் சென்றான். இந்திரனும் தேவர் படைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியூகம் அமைத்தான். விருத்திரன் இந்திரனைப் பிடித்துக் கசக்கி மொந்தையாக்கி வாயிலிட்டு மென்றான். இந்திரன் இயற்கையாகவே இறவா வரம் பெற்றவன். இதனால் விருத்திரனின் பற்களுள் அகப் படாது கடைவாயில் ஒட்டிக்கொண்டான். அப்போது தேவர்கள் ஜிரும்பிகாஸ்திரம் என்னும் அம்பை எய்தனர். அசுரனுக்குக் கொட்டாவி வரவும் அவன் வாயை அகலத் திறந்தான். கடைவாயில் ஒட்டியிருந்த இந்திரன் ஒரு சிறிய வடிவங்கொண்டு வெளியே வந்து வீழ்ந்தான். (அன்று விருத்திராசுரனுக்கு வந்த கொட்டாவி இன்று எல்லோரிடமும் உண்டாகி வருகிறது) போர் தொடர்ந்து பல காலம் நடைபெற்றது. இப்போரில் தேவர்கள் தோற்று ஓடித் தலைமறைவாக வாழ்ந்தனர். விருத்திராசுரன் சுவர்க்கலோகத்தைக் கைப்பற்றி இந்திரனின் பட்டத்து யானையான ஐராவதம், உச்சைஸ்வரம் என்னும் குதிரை, கற்பகதரு, காமதேனு, சிந்தாமணி, அப்சர மங்கையர் முதலிய சகல சம்பத்துக்களையும் கைப்பற்றினான். சகல பொருட்களுடன் கூடிய அனைத்து இந்திரபோக வாழ்வில் இன்புற்றான். அவனின் தந்தை துஷ்டப்பிரஜாதிபதியும் அங்குவந்து மகிழ்வுடன் கூடி வாழ்ந்தான்.

இந்திரன் முதலான தேவர்களும், முனிவர்களும் திருக் கைலாசம் சென்று சிவபிரானிடம் முறையிட்டனர். சிவபிரான் அவர் களை நோக்கிப் பிரம்மதேவனையும் அழைத்துக்கொண்டு மகாவிஷ்ணுவிடம் செல்லுமாறு கூறினார். பிரம்மாதி தேவர்கள் மகாவிஷ்ணுவிடம் சென்று தமது துயரை வெளியிட்டனர். மகாவிஷ்ணு யாவருக்கும் தகுந்தபடி நற்பயன் கிடைக்கச் செய்வதாகத் தெரிவித்தார்.

## தேவியிடம் வேண்டுதல்

திருமால் அனைவரையும் நோக்கி தேவர்களே விருத்திராசுரன் பிரம்மா கொடுத்த வரத்தினாலேயே வலிமையடைந்தான். தர்ம வழியில் யுத்தம் புரிந்து அவனை வெல்ல முடியாது. அவனைச் சூழ்ச்சி முறையால் தான் கொல்லலாம். முதலில் அவனுடன் அன்புடையவர்கள் போல் உறவாடி இறுதியில் போருக்கழைத்துக் கொல்ல வேண்டும். எமது நட்புறவின் மூலம் இந்திரனுக்கும் விருத்திராசுரனுக்குமிடையில் பகையை மறவாது துவேசத்தை மூட்டி போருக்கழைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது நான் இந்திரனின் வச்சிராயுதத்தின் நுனியில் ஒட்டியிருப் பேன். இந்திரன் விருத்திராசுரன் மீது ஆயுதத்தைப் பிரயோகிக்கும் போது நான் அவனைக் கொன்றுவிடுவேன். அச்சந்தர்ப்பம் வரும் வரை யில் நாம் காத்திருக்க வேண்டும். எவர் வஞ்சனைத் தொழில் செய்தா லும் அவை சக்தியின் மாயையேயாகும். நீங்கள் யாவரும் இவ்வாறு வெற்றி கிடைக்க வேண்டுமென்று சக்தியை மந்திரங்களாலும், தோத்திரங்களாலும் வழிபடுங்கள். சக்தியின் அருளால் விருத்திரா சுரனை எளிதில் வெல்லலாம். இப்பொழுதே வழிபடுங்கள் என்றார். தேவர்களும் தங்கள் துயர் நீங்கவேண்டுமென்று தேவியை வழிபட்டனர்.

தேவர்களின் இடையறாத வழிபாட்டில் மகிழ்ந்த தேவி பேரழகுடன் சிறந்த ஆடை அணிகள் பூண்டவளாக திருக்கரங்களில் பாசமும் அங்குசமும், வரதம் அபயமும் ஏந்திய வண்ணம், ஒட்டியாணம், கைவளையல்கள் ஆகியவற்றையும், திருவடிகளில் தண்டையும் திருமுடியில் பிறைச் சந்திரனும், இரத்தின கிரீடமும் அணிந்தவளாக முக்கண்ணும் அழகிய மேனியுமுடைய சச்சிதானந்த சொரூபினியாகக் காட்சி தந்தாள். தேவி தேவர்களை நோக்கி உங்கள் வேண்டுதல்கள் யாதெனக் கேட்டாள். தேவர்கள் தேவியைத் துதித்து எங்களைக் கொடுமைப்படுத்தும் விருத்திராசுரனைக் கொல்வதற்கான வழி வகைகளையும், ஆயுதங்களையும் தந்தருள வேண்டும் என விண்ணப்பித்தனர்.தேவியும் அவ்வண்ணமே ஆகுக எனக் கூறி மறைந்தருளினாள். தேவர்களும் தேவியை வியந்து அவ்விடம் விட்டகன்றனர்.

## விருத்திராசுரன் வதம்

தேவர்களும் முனிவர்களும் விருத்திராசுரனிடம் சென்று நயவுரைகள் பேசி தவ வலிமையும் வீரமும் மிக்க உம்மால் இந்திரன் தோற்கடிக்கப்பட்டவன். அவனுடன் பகைமை பாராட்டாது யாவரும் நல்லுறவுடன் வாழ்ந்தால் பல நன்மைகள் உண்டாகும். இப்போது பகைவர்களாகிய உங்கள் இருவரையும் நாங்கள் சமாதானஞ் செய்து வைக்கிறோம். உமது விருப்பம்போல நல்லுறவுடன் வாழ இந்திரன் எவ்வாறு கேட்டாலும் உமது நிபந்தனைக்கு அமைந்து நடக்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மதிக்கிறான். இதனைச் சந்தியஞ் செய்து தரவும். உங்கள் இருவரின் உறவை சமரசஞ் செய்யவும் நாங்கள் உதவுவோம் என்று கூறினர். விருத்திராசுரன் அவர்களின் பேச்சுக்கு மறுப்புத் தெரிவித்தான். ஆனால் தேவியின் விநோத சக்தியால் சிறிது மயங்கிய விருத்திராசுரன் முனிவர்களின் கோரிக்கைக்கு இணங்கினான். அச் சமயம் இந்திரனை அவ்விடம் அழைத்து வந்து இருவரையும் சமாதான உறவில் அமைய வைத்தனர். இதனால் இந்திரனும் விருத்திராசுரனும் நெருங்கிப் பழகினார்கள். நந்தவனங்கள், கடற்கரைகள் அவர்களின் பொழுதுபோக்குக்கு உதவின. விருத்திராசுரன் எதுவித சூதுவாது மின்றி மிக அந்நியோன்யமாக இந்திரனுடன் பழகினான். இந்திரனோ அவனைக் கொல்லும் சிந்தனையுடன் சிநேகிதம் போல் நடித்தான்.

இந்திரனுடன் விருத்திராசுரன் நட்புறவு பூண்டிருப்பதை அறிந்த துஷ்டப்பிரஜாபதி மகனை அழைத்துப் பின்வருமாறு கூறினான். "மகனே இந்திரன் தீயவன். உறவு காட்டி நயவஞ்சகமாக கெடுதி விளை விப்பான். இவ்வுறவு உனக்குக் கேடாக அமையும். இந்திரனின் நட்பை விட்டால் பெருங்கேடுகளிலிருந்து தப்பலாம் என்று நல்லுபதேசஞ் செய்தான். விருத்திரனின் மரண காலம் அண்மித்ததால் தந்தையின் நல்லுரையை மதிக்காதது தனது மரணத்துக்கும் ஏற்பாடு செய்ததாக அமைந்தது.

ஒரு நாள் மாலை நேரம் இந்திரன் விருத்திராசுரனைச் சந்திக்க நேர்ந்தது. விருத்திரன் பெற்ற வரத்தில் பகலும் இரவும் இல்லாத பொழு தில் விஷ்ணுவை நினைத்தான். விஷ்ணு எவரும் அறியாத வண்ணம் இந்திரனின் வச்சிராயுதத்தின் நுனியில் அமர்ந்திருந்தான். உலர்ந்து ஈரமும் அல்லாத வஸ்துவால் அந்த அசுரனைக் கொல்லலாம் என எண்ணிய போது தேவியின் அருளால் கடலில் மலைபோல நுரைக் கும்பல் எழும்புவதைக் கண்டான். அந்த நுரை உலந்தும் ஈரமில்லாதது மானதால் அது கிடைத்தது தெய்வச் செயல் என உணர்ந்தான். உடனே அந்த நுரையைத் தனது இரு கைகளாலும் எடுத்துக்கொண்டு பராசக்தி யைத் துதித்தான். தேவி தனது சக்தியின் அம்சத்தில் ஒரு பகுதியில் அந்த நுரையைச் சேர்த்தாள். இந்திரன் சிந்தை மகிழ்ந்து அந்த நுரையை வச்சிராயுத்திற் பூசி விருத்திராசுரன் மீது வீசினான். வச்சிராயுதம் அவன் மீது பட்டதும் நிலத்தில் விழுந்து உயிர் துறந்தான். தேவர்களும் முனிவர்களும் கூடி மகிழ்ந்தனர். இச்செயல் தேவியினரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளால் ஏற்பட்டதென யாவரும் தேவியைப் போற்றி வழிபட்டனர். அவ்விடத்தில் ஒரு நந்தவனம் அமைத்து ஒரு கோயில் கட்டித் தேவியின் அழகிய உருவச் சிலை ஒன்றை நிறுவினர். அன்று முதல் தேவி தேவர்களின் குலதெய்வமானாள். விருத்திராசுரனின் மடிவுக்குத் தேவி காரணமானதால் அன்று முதல் தேவியை "விருத்திர நிகர்திரீ" என்றும் அவனைக் கொன்றதால் இந்திரனை "விருத்திரஹதன்" என்றும் அழைத்தனர்.

## இந்திரப் பதவியும் நகுஷனின் மோகதாபமும்

விருத்திராசுரனைக் கொன்றதும் மகாவிஷ்ணு வைகுண்டம் சென்றார். விருத்திரனை வஞ்சனையாற் கொன்றது பாபமென்றும் இதனால் துன்பத்தை அனுபவிக்க வேண்டுமென்றும் இந்திரனின் மன நிலை அவனை உறுத்தியது. உறவாடி நம்பிக்கைத் துரோகஞ் செய்த தால் அடிக்கடி மனங்குழம்பினான்.

விருத்திரன் இறந்ததை அவன் தந்தை அறிந்தான். "ஓ" வென்று கதறி அழுதபடி மகனுக்குச் செய்யவேண்டிய ஈமக்கிரியைகளைச் செய்தான். தன்மகன் தான் சொன்னதைக் கேளாது தீய நட்புக் கொண்ட தால் இறக்க நேரிட்டதெனக் கோபத்துடன் கூறிவிட்டு வஞ்சனையாற் கொன்ற தீயவனான இந்திரன் அனுபவிக்கட்டும் என்று சாபமிட்டதும் தவஞ் செய்யப் புறப்பட்டான்.

இந்திரன் தனது பாபச் செயலுக்கு அஞ்சினான். யாவரும் வெறுத்தனர். இந்திரப் பதவியை ஏற்றாலும் பதவிக்குரிய சகல போகங் களையும் அனுபவிக்க முடியாது தனித்திருந்து கவலையுற்றான். தனது மனநிலையை இந்திராணியிடஞ் சொல்லிவிட்டுப் பிரம்மஹத்தி தோஷம் பிடிக்குமென அஞ்சினான். அதற்காகச் சுகபோகங்களை விட்டு மானச தடாகத்துக்குச் சென்று தாமரை நாளத்துக்குள் புகுந்து மறைந்திருந்தான். செயலற்று, சுகமற்று, வேறொருவரின் தொடர் பற்றுப் பிரம்மஹத்திதோஷம் பிடித்தவனாகவே மன வேதனையுட னிருந்தான். இதனால் பல தீமைகள் ஏற்பட்டன. நாட்டில் மழை இல்லை. பயிர்கள் நாசமானதால் பஞ்சமேற்பட்டது. நீர் நிலைகளில் தண்ணீர் கிடைக்காத இச்சூழ் நிலையில் தேவர்களும், முனிவர்களும் நகுஷன் என்பவனைத் தேவேந்திரனாக்கி வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவேந்திரப் பதிவியேற்ற நகுஷன் காமத்திலும் சுக போகத் தினும் கூடிய நாட்டம் கொண்டான். தேவ கன்னியர்களுடன் கூடிக் குலாவிக்கொண்டிருந்தவேளை இந்திராணியைக் கண்டான். கண்டதும் அவள் மீது மோகங் கொண்டான். இந்திராணியை நேரில் அழைத்துத் தன் மோகத்தை வெளியிட்டான். இதனால் அவள் தன் மானத்தைக் காப்பதன் பேரில் தேவ குருவிடம் தஞ்சமடைந்தாள்.

## நகுஷனின் மோகமும் இந்திராணியின் பரிதவிப்பும்

நகுஷன் தேவகுருவைத் தனது மோகத்துக்கு இடையூறு செய்வ தாக எச்சரித்தான். தேவகுரு இந்திராணியை நோக்கி அவனுடன் எதிர் வார்த்தை பேசாது ஒத்துழைப்பதாக நடித்துக் கால அவகாசம் கேட்கு மாறு அனுப்பினார். இந்திராணி தனது மதியூகத்தால் அவனிடமிருந்து குறுகிய காலத்துள் வந்து உறவாடுவதாகத் தெரிவித்துவிட்டு வந்தாள். அவனும் அனுப்பி வைத்தான். இந்திராணி தேவகுருவிடம் வந்ததும் இந்திரனைத் தேட முயற்சித்தனர். தேடலுக்காக மகாவிஷ்ணுவை நாடி னர். அவரின் யோசனைப்படி இந்திராணி பராசக்தியை வேண்டி வழிபடவும், தேவர்களைக்கொண்டு அஸ்வமேத யாகமொன்றைச் செய்யவும் முன்வந்தனர். இதனால் தேவி மகிழ்ந்து இந்திரனின் பிரம்மஹத்தி தோசத்தை நீக்கிவிடுவாள். அவள் நகுஷனை மோகத் துக்கு ஆளாக்கி அவனை அழியச் செய்வாள். அஸ்வமேத யாகத்தால் இந்திரனின் பயம் நீங்கித் தூய்மையுடன் சொர்க்கலோகம் வருவான் என்றார்.

திருமாலின் கூற்றுப்படி இந்திராணி தேவர்களைக் கொண்டு அஸ்வமேதயாகஞ் செய்வித்தாள். தேவர்கள் தேவகுருவின் துணை யோடு இந்திரன் இருக்கும் இடத்தை அறிந்து அவனது பிரம்மஹத்தி தோஷத்தின் பாபத்தில் ஒரு பகுதியை மரங்களுக்கும், ஒரு பகுதியை மலைகளுக்கும், ஒரு பகுதியை பூமிக்கும், ஒரு பகுதியை நதிகளுக் கும் மறு பகுதியைப் பெண்களுக்கும் பகிர்ந்தளித்து இந்திரனைத் தூய்மையாக்கினர். இந்திரனின் பாபத்தில் கிடைத்த பயன் காரணமாக மரங்களிலிருந்து பிசின் வடிதலும், மலைகளின் குன்றுகள் உயர வளர்ந்தாலும் புறங்களில் ஏற்படும் சிதைவுகள் கீழ் நோக்கிச் செல்வதும் நிலத்தில் கிடங்கு வெட்டினாலும் அக்கிடங்கு தூர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதும் நதியில் நீர் ஓடும்போது நுரை வருதலும் பெண்களுக்குப் பிரசவவேதனை ஏற்படுவதும் இயற்கையாக அமைந்தன.

தேவர்களின் முயற்சியை அறியாத இந்திரன் மறைந்தேயிருந் தான். இந்திராணி தேவகுருவிடஞ் சென்று தன் கணவன் ஏன் கண்ணுக்குத் தெரியாது மறைந்திருக்கிறாரே என வினாவினாள். தேவகுரு அவளை நோக்கித் தொடர்ந்து பராசக்தியை உள்ளன்போடு பூசித்து வந்தால் தேவியின் அருளால் யாவும் சிறப்பாக அமையு மென்றார். இந்திராணி தேவியை வேண்டிப் பக்திபூர்வமாகத் தவக் கோலம் பூண்டு இடையறாது வழிபட்டு வந்தாள். இந்திராணியின் பக்தியை மெச்சிய பகவதி மனமிரங்கி ஆயிரங்கோடி சூரியப் பிரகாசத் துடனும் ஆயிரம் கோடி சந்திரனின் குளிர்மையுடனும் திரிபுர சுந்தரி யாக அன்னவாகனத்தில் அமர்ந்து வந்து இந்திராணிக்குக் காட்சி தந்தாள். சக்திதேவி, இந்திராணியை நோக்கி சசியே வேண்டிய வரத்தைக் கேள் என்றாள். இந்திராணி தேவியைப் பலமுறை வணங்கிப் பகவதியே எனது கணவனை என் கண்ணுக்குத் தெரியப் படுத்தியும், என் கவலைகளை நீக்கியும், என் கணவனுடன் இந்திர லோகஞ் சென்று இன்புற்று வாழவும் வரம் தருவாய் தாயே எனப் பணிந்தாள். தேவியானவள் இந்திராணியை நோக்கித் தாமரைக் குளத்துக்குச் சென்றால் அங்கு விஸ்வகானம் என்னும் பெயருடன் தென்படும் விக்கிரகத்தைக் காண்பாய். அங்கேயே இந்திரன் மறைந் திருக்கிறான். அவனை நீ காண்பாய். குறுகிய காலத்தில் நகுஷன் மோக வசப்பட்டு இந்திரலோகத்திலிருந்து என்னால் கீழே தள்ளிவிடப் படுவான். நீங்கள் இருவரும் இந்திரலோகஞ் சென்று இன்பமாக வாழலாம் என்று கூறினாள். மேலும் தேவியின் தாதி இந்திராணிக்கு இந்திரன் இருக்கும் இடத்தைக் காண்பித்தாள். இந்திராணி கணவனை நேரிற் கண்டு ஆனந்தமடைந்தாள்.

## சப்த ரிஷிகள் தூக்கும் சிவிகையும் நகுஷனின் வீழ்ச்சியும்

பராசக்தியின் பேரருளால் இந்திராணி கணவனை நேரிற் கண்டு வியந்தாள். தான் பூசித்த தேவி தன் கணவனைக் காண வைத்ததில் மகிழ்ச்சியடைந்தாள். தன் கணவனிடம் தன் கவலையை வெளிப் படுத்தினாள். இந்திரன் சொர்க்கலோகத்தில் இல்லாததால் முனிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் தேவர்களும் நகுஷனை இந்திரப் பதவியில் அமர்த்தினர். அவன் கர்வமும், கெடுமதியும், பெண் மோகமும் மிக்கவன். அவன் தன்மீது மோகங்கொண்டு ஆசை நாயகியாக்க வற்புறுத்துகிறான். இதனால் எனது கற்பும் மானமும் பறிபோகும் நிலையிலுள்ளது எனப் பலவாறு சொல்லி அழுதாள். அவளைத் தேற்றிய இந்திரன் பொறுமையாகவும் சாதுரியமாகவும் இருந்து கற்பைப் பாதுகாக்குமாறு கேட்டுக்கொண் டான். நகுஷன் மேலும் தொந்தரவு தந்தால் தேவேந்திரன் என்ற நிலையில் சிறப்பான சிவிகையில் அமர்ந்திருக்க சப்த ரிஷிகள் சிவிகையைத் தூக்கி வர என்னிடம் கௌரவமாக வருவதே அழகாகும் என்று கூறுமாறு இந்திரன் ஆலோசனை கூறினான். சப்தரிஷிகள் தமது தவ வலிமையால் அவனுக்குச் சாபமிட அவன் அழிவான். பின்னர் யாவும் சுமூக நிலைக்கு வரும் என்று பயனுள்ள ஆறுதல் வார்த்தைகள் கூறினான். பராசக்தியை இடையறாது பூசித்து வந்தால் அன்னையவள் காப்பாற்றுவாள். துணிவுடன் நகுஷனிடஞ் சென்று சிவிகையில் உன்னிடம் வருமாறு சொல்லிவிடு என்று சொல்லியனுப்பினான்.

இந்திராணி நேரடியாக நகுஷனிடஞ் சென்று தேவராஜனே! உங்கள் மீது அதிகப் பிரியமாயுள்ளேன். உங்கள் பதவிக்கும் மதிப்புக் கும் ஏற்றவாறு என்னிடம் வரவேண்டும். உங்கள் பெரு மதிப்புக்குரிய சிவிகையில் நீங்கள் அமர்ந்திருக்க சப்தரிஷிகள் அதனைத் தூக்கி வர என்னிடம் வருவது சிறப்பாகவும் எனக்குப் பெருமையாகவும் இருக் கும். உங்கள் மீதுள்ள அன்பு என்னைத் தூண்டுகிறது. விரைவில் வந்து உங்கள் பதவிக்குரிய பெருமையை நிலை நாட்டுங்கள் என நயமாகக் கூறிவிட்டுச் சென்றாள்.

நகுஷன் சப்தரிஷிகளையும் தமது தேவசபைக்கு வரவழைத் தான். தான் இந்திராணியிடம் செல்லும் சிவிகையை சப்தரிஷிகளான நீங்கள் தூக்கிச் செல்ல வேண்டும் என்றான். அப்போது அகத்தியர் தமது தவ வலிமையால் வருங்காலத்தில் வர இருந்த நிலை இந்திராணிக்குச் சாதகமாக இருந்ததால் நகுஷனின் கோரிக்கையை ஏற்றனர். நகுஷன் சிவிகையில் அமர ரிஷிகள் சிவிகையைத் தூக்கிச் சென்றனர். நகுஷன் விரைவில் இந்திராணியை அடைய வேண்டு மென்ற காமத்தின் வேகம் உந்தியது. குள்ளமான உருவமுடைய அகத்தியரை நகுஷன் பிரம்பால் அடித்து "சர்ப்ப சர்ப்ப" என்று கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவாகச் செல்லுமாறு பணித்தான். பிரம்பால் அடிபட்ட அகத்தியர் கடுங்கோபங்கொண்டு நீ சர்ப்பமாக உன் உருவத்துக்கேற்ப மலைப்பாம்பாகப் போகக் கடவது எனச் சாபமிட்டார். உடனே நகுஷன் நடுநடுங்கித் தவசீலனே அறியாமையாற் செய்த பிழையைப் பொறுத்துச் சாப விமோசனந் தருமாறு கேட்டான். அகத்தியர் மனமிரங்கித் தருமர் இவ்வழிச் செல்லும்போது கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூறுமிடத்து உன் சாபம் நீங்கும் என்றார். அகத்தியரின் சாபப்படி நகுஷன் மலைப்பாம்பாகச் சொர்க்கத்திலிருந்து பூமியில் விழுந்தான்.

இதையறிந்த தேவகுரு இந்திரனிடஞ் சென்று விபரங்களைத் தெரிவித்தார். தொடர்ந்து தேவர்களும் முனிவர்களும் இந்திரனிடம் வந்து சொர்க்கலோகத்துக்கு அழைத்துச் சென்று பட்டாபிஷேகஞ் செய்வித்தனர். இந்திரன் தனது சகலபோகங்களுடனும் மனையாள் இந்திராணியுடன் இன்புற்று வாழ்ந்தான். துன்புற்ற தேவர்களும் முனிவர்களும் மகாசக்தியின் பேரருளினால் இழந்த சகலவற்றையும் மீளப் பெற்று இன்புற்றனர். பிரம்மஹத்திதோஷத்தினால் உள்ளம் நடுங்க ஆட்சியையும் இழந்து உற்ற பட்டத்து இராணி மற்றும் சகல சுக போகங்களையும் இழந்து வெளியில் வந்து நடமாடவும் அஞ்சி உரு மாறி தாமரைத் தண்டையே தஞ்சமென குறிப்பிட்ட காலத்துக்கு வாழ்ந்தவன், தேவகுருவின் நெறிப்படுத்துதலில் ஆதிபராசக்தியாம் தேவியை உள்ளன்போடு வழிபட்ட இந்திராணியின் சக்தி மீதிருந்த பக்தியால் யாவற்றையும் அடையச் செய்து இன்புற வைத்த பெருமை சக்திதேவிக்கே சமர்ப்பணமாகும்.

## சதாஷி தேவியும் துன்முகராசனும்

முன்னொரு காலத்தில் இரணியஷனின் குலத்துதித்த துன்முகாசுரன் என்பவன் வாழ்ந்து வந்தான். இவன் சகல மந்திரங்களையும் தன் வசப்படுத்தி தேவர்கள் மற்றும் அந்தணர்கள் யாவருக்கும் தானே மேலானவன் என எண்ணும் படி அவாவுற்றான். அதனால் இமயமலை சாரலுக்குச் சென்று பன்னெடுங்காலம் தவமிருந்து பிரம்ம தேவனைத் துதித்தான். அவனது தவத்தை மெச்சிய பிரம்மன் அவன் முன் தோன்றி வேண்டும் வரம் யாதெனக் கேட்டான். துன்முகாசுரன் எழுந்து வணங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்கள் யாவும் என் வசமாக வேண்டும் வேதங்களை வெல்லவும் வேண்டும் என்றான். பிரம்மாவும் கேட்ட வரம் தந்து மறைந்தருளி னார்.

துன்முகாசுரன் பெற்ற வரத்தினால் அந்தணர்கள் தமது மந்திரங்களை மறந்து தமது தொழிலைச் செய்ய முடியாது அவதியுற்றனர். யாகங்கள் சிரார்த்தங்கள் போன்ற பல நற் காரியங்களையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் அந்தணர்கள் தமது நியமங்களை விடுத்து வாட்டமுற்றனர். அவர்கள் மேரு மலைச் சாரலை நாடி சதாஷி தேவியை வழிபட்டனர். தேவர்களும் யாகங்களின்மையால் அவிற்பாகமும் கிடைக்காது வடபால் சென்று மானச குளத்திலிருந்து சக்திதேவியைத் துதித்தனர். இவ்வாறு அந்தணர்களும் தமது கவலையை நீக்குமாறு தேவியை வருந்தி அழைத்தனர். தமது பக்தர்களின் கவலையை நீக்கும் பொருட்டு சர்வ அலங்காரமும் கொண்டு ஒரு பூங்கொடியையும் வில்லையும் திருக் கரங்களில் ஏந்தியவாறு தேவி தோன்றினாள்.

தேவியின் பேரழகும் கருணைமிகு கண்களும், திருக்கரங் களிலிருந்து நீர்த்தாரைகள் ஓயாமற் சொரிந்த வண்ணமிருந்தன. அந்தக் கருணை மழையினால் சகல ஜீவராசிகளும் விலங்குகளும் செடி கொடிகளும் அபிவிருத்தியடைந்தன. நதிகள் நீர் நிலைகள் யாவற்றிலும் வெள்ளம் கரைபுரண்டோடியது. குகைகளிலிருந்து தேவர்களும் வெளியே வந்து தேவியைப் போற்றித் துதித்தனர். தமது இன்பப் பெருக்கினால் துக்கம் மறந்து தங்களைக் காக்கவென வந்த அநேக கண்களையுடையவளாதலால் சதாஷி என்னும் திருப் பெயரால் அழைக்கப்படுவாய் என்று போற்றினர். தேவர்கள் தாம் தேவ மந்திரங் களை மறந்து வேதப்பசியாக இருப்பதாகவும் தெரிவித்தனர். உடனே தேவி தனது கையிலிருந்த பூங்கொடியால் காய் கனிகளையும் அன்னபதார்த்தங்களையும் உற்பத்தி செய்து வழங்கினாள். யாவரும் மகிழ்ந்தனர். இந் நிகழ்வால் எங்கணும் சிறந்த ஒலி பரவியது. இதனால் தேவிக்கு "சாகம்" என்ற பெயரும் வழங்கலானது. இவ்வாறு தேவர்கள் தேவியை துதித்துப் போற்றி வழிபடுவதை அறிந்த அசுரர்கள் தமது தலைவனிடம் ஓடிச் சென்று முறையிட்டனர். சீற்றங் கொண்ட துன்முகாசுரன் தமது வீரர்கள் மூலம் ஆயிரம் அக்குறோணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனைகளுடன் தேவி இருந்த இடத்துக்குச் சென்று அம்புமாரி பொழிந்த வண்ணம் தேவர்களைச் சூழ்ந்து விரட்டினர். தேவர்கள் தங்களை காப்பாற்றுமாறு தேவியிடம் முறையிட்டனர். தேவி தனது சக்கராயுத்தை எடுத்துத் தேவர்களைச் சுற்றி வந்து பாதுகாப்பளிக்கு மாறு அனுப்பி வைத்தாள். தேவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்த பின் தானே துன்முகாசுரனுடன் எதிர்த்துப் போரிட்டாள். இருவருக்கு மிடையில் கடும் போர் நடந்தது. அச் சமயம் தேவியின் திருமேனியி லிருந்து முப்பத்திரண்டு சக்திகள் தோன்றினர்.

மேலும் அறுபத்தி நான்கு சக்திகள் எண்ணற்ற கைகளுடன் தோன்றினர். இச் சக்திகள் யாவும் அசுரச் சேனையை விரட்டியடித்தனர். துன்முகன் சக்திகளோடு பத்துநாள் போரிட்டான். பதினொராம் நாள் சிவப்பு நிற ஆடையும் சிவப்பு நிற மாலையும் சிவப்பு நிற சந்தனமும் அணிந்து கொண்டு ஒரு பெரிய ரதத்தில் சதாஷி தேவியுடன் போரிட வந்தான். சதாஷி தேவிக்கும் துன்முகராசனுக்குமிடையில் இரண்டு சாம காலம் போர் நடந்தது. சக்தி தனது வலிமையை அறியச் செய்வதன் பேரில் ஐநூறு கொடிய பாணங்களை விட்டாள். இதனால் துன்முகனின் தேர்க்குதிரைகள் சாரதி தேரின் கொடியும் தம்பமும் அழிந்தன. ஒரு சில பாணங்கள் அசுரனின் உடலில் பல கோணங் களிலும் பலமாகத் தாக்கியதால் அசுரன் இரத்தத்தைக் கக்கிக் கொண்டு இரதத்திலிருந்து கீழே தேவியின் முன் விழுந்தான். அச் சமயம் அவனின் உடம்பிலிருந்து ஒரு ஒளிப்பிளம்பு தோன்றி தேவியின் உடம்பில் இணைந்தது. பிரம்மாதி தேவர்களும் மற்றுமுள்ளோரும் பாவலர்களும் சதாஷி தேவியைத் துதித்தும் பலவாறு புகழ்ந்தும் பாடி மகிழ்ந்தனர். தேவி யாவருக்கும் அபயம் தந்ததும் மறைந்தருளினார்.

## சக்தியை அறியாத சிரிப்பு

ஆதியில் பராசக்தியானவள் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத் தொழில்களையும் செவ்வனே இயக்குவதன் பேரில் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரரிடம் சரஸ்வதி, இலக்சுமி, பார்வதி ஆகிய சக்திகளையும் ஒப்படைத்தாள். முத் தொழிலும் கிரமமாக நடை பெற்று வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சமயத்தில் ஹாலஹயர் என்னும் அரசன் மூவுலகத்தையும் வென்று ஏகாதிபதியாக வாழ வேண்டித் தவம்புரிந்து பிரம்மாவிட மிருந்து வரம் பெற்றிருந்தான். அரசன் தனது அகம்பாவத்தின் கர்வத்துடன் தனது நால்வகை சேனைகள் புடை சூழ திருக்கைலாயத் தையும் வைகுண்டத்தையும் முற்றுகையிட்டுப் போர் தொடங்கினான். இந்த யுகத்தில் திருக்கைலாயத்தில் சிவனும் வைகுண்டத்தில் விஷ்ணுவும் வென்றனர். இவ் வெற்றி காரணமாக சிவனும் விஷ்ணுவும் தமது திறமையாலேயே அசுரனை வென்றதாக எண்ணித் தேவியரை இகழ்வாகப் பேசிச் சிரித்தனர். இதையறிந்த பார்வதியும் இலக்சுமியும் சக்திகளாகிய தம்மாலே தான் சிவனும் விஸ்ணுவும் வென்றதை தமது சக்திகளின்றி தமது ஆளுமையால் வென்றதாக கர்வமடைந் துள்ளனரே என எண்ணி பதிலுக்கு சிரித்து இகழ்ந்தனர். மேலும் அவ்விரு சக்திகளும் சிவன் விஷ்ணுவுக்குத் தெரியாமலே மறைந்து விட்டனர். சக்திகள் மறைந்ததும் சிவனும், விஷ்ணுவும் தமது அழகையும் ஞானத்தையும் வலிமையையும் இழந்து தொழில் புரிய ஆற்றல் (சக்தி) அற்று வருந்தினர்.

இதையறிந்த பிரம்மா தனது ஞானத்தால் உணர்ந்தார். அவர் களின் தொழிலின் அவசியத்தை உணர்ந்து தமது மனு முதலான புத்திரர்களையும் ஜனகர் முதலான முனிவர்களையும் அழைத்தார். சிவனும், விஷ்ணுவும் சக்தியில்லாத நிலையில் அவரவர் தொழில் செய்வாரின்றி இருப்பதால் அவர்கள் மீண்டும் தம் செயலைச் செய்ய உதவுமாறு பராசக்தியை வேண்டிப் பூசிக்கும் படி வேண்டினார். இதனால் யாவருக்கும் நற்பலன் கிட்டும் என்றும் தெரிவித்தார். அவர்களும் ஆசாரம் பேணி உள்ளன்புடன் பராசக்தியை வேண்டிப் பூசைகள் செய்து வழிபட்டனர்.

## சதி தேவி தீப்பாய்தலும் சக்திதேவியின் அங்கம் தங்கிய தலங்களும்

பிரம்ம புத்திரர்களும் சனகாதி முனிவர்களும் இமயமலைச் சாரலை அடைந்து ஆசாரம் பேணி உள்ளன்புடன் தேவியின் பீஜ மந்திரங்களை இடையறாது ஓதியவண்ணம் பன்னெடுங்காலம் தவமிருந்தனர். பக்தர்களின் தவத்தினால் கருணை கூர்ந்த பராசக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக் கண்களுடனும் நான்கு திருக்கரங்களுடனும் அவர்கள் முன் தோன்றினாள். யாவரும் சக்தியைக் கண்டதும யாவரும் ஏற்றிப் போற்றி வணங்கினர். தேவி அவர்கள் மீது கொண்ட பரிவினால் இனிய வார்த்தைகள் கூறி உங்கள் கவலை யாதென்றாள். அவர்கள் சிவனும், மகா விஷ்ணுவும் தமது சக்திகள் விலகியதால் செயலிழந்து தத்தமது பணியாற்றுஞ் சக்தியற்றுள்ளனர். அவர்களின் தேவியர் இணைந்து முன் போல அவரவர் கடமைகள் நிறைவேற்ற வேண்டும் என்றனர்.

சிவனும் விஷ்னுவும் எனது சக்திகளை அவமதித்ததால் இச் செயல் நடைபெற்றது. எதிர்காலத்தில் அவர்கள் அச் செயலைச் செய்ய மாட்டார்கள். என்னைப் பூசித்தால் அவர்களுக்கான சக்தி கிடைக்கும் மேலும் என் இச்சையால் ஒரு சக்தி தக்ஷனின் குலத்திலும் ஒரு சக்தி பாற்கடலிலும் தோன்றுவார்கள். யாவும் சிறப்பாக அமையும். நீங்கள் பக்தி பூர்வமாக என்னை வழிபட்டுப் பல நன்மைகளையும் அடைவீர்கள் என்று அருள் செய்த பராசக்தி மறைந்தருளினார். தக்ஷன் முதலானவர்கள் பிரம்மனிடம் சென்று நடந்தவற்றைத் தெரிவித்தனர்.

பின்னர் சிவனும், விஷ்ணுவும் சக்தி பெற்று அகங்காரமின்றித் தமது பணியை ஆரம்பித்தனர். சக்தி தேவி முன்னர் வாக்களித்த படி தக்ஷனுக்கு சக்தியின் அம்சமான குலமகள் அவதரித்தாள். அவளுக்கு தட்சதி எனப் பெயரிட்டு பெற்றோர் அன்புடன் வளர்த்து வந்தனர். அவள் சிவபெருமானையே எண்ணித் தவமிருந்து பத்தினியானாள். அவள் ஒரு சந்தர்ப்பத்தில் அக்கினிப் பிரவேசஞ் செய்தாள்.

ஒரு சமயம் துர்வாச முனிவர் சக்திக்குப் பிரியமான மாயா பீஜ மந்திரத்தை ஓதி வழிபட்டார். இதனால் சக்தி மனம் மகிழ்ந்து தான் அணிந்திருந்த மலர்மாலையைத் துர்வாச முனிவரிடம் தந்தாள். முனிவரும் இதனைப் பெரும் பேறாக எண்ணி மகிழ்ந்தார். அகமகிழ் வுடன் தக்ஷனின் மாளிகையை அடைந்து பராசக்தியின் திருவருளால் கிடைத்த மாலையைக் காண்பித்தார். தக்ஷன் அந்த மாலையை முனிவிரிடமிருந்து அன்புடன் கேட்டு வாங்கிக் கொண்டான். அன்றிரவு தனது படுக்கையறையில் மாலையை தூக்கி விட்டு தன் மனைவியுடன் கூடி மகிழ்ந்தான். அந்தப் புனிதமான மாலைக்கு மதிப்பளிக்காது படுக்கையறையில் மகிழ்ந்ததால் ஏற்பட்ட தோஷமும் பாவமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக மகள் சதிதேவி பெற்றோரிடம் இருந்த பக்தி மாறி அவர்களிடம் மன விரோதத்தைப் பெற்றாள். இத் தகறாறு காரணமாகவே சதிதேவி தக்ஷனிடமிருந்து பெற்ற தனது உடலை வைத்திருப்பது நீதியல்ல என்றெண்ணி யோகாக்கினியிற் புகுந்தாள். அந்த சக்தி சொரூபமான ஒளியே இமயமலையிற் தோன்றியது.

இதனால் சிவபெருமான் எவராலும் தாங்க முடியாத கோபத்தினால் மூவுலகோரும் அஞ்சும் படியான தீமைக்கு அடி கோலினார். சிவபெருமானின் கோபத்தினால் வீரபத்திரர் பத்திரகாளி தோன்றவும் அவர்களுடன் எண்ணற்ற பூதங்களும் தோற்றமெடுத்து மூவுலகையும் அழிக்கத் தொடங்கின. இக் கோரக் காட்சியைக் கண்ட பிரம்மா சிவபெருமானை வணங்கி தவறு செய்யாத ஏனையவர் களாகிய நாங்கள் ஏது செய்வோம் எனச் சரணடைந்தார். இதனால் மனமிரங்கிய சிவபிரான் தக்ஷன் ஆட்டுத் தலையுடன் எழுந்திருக்க வும் அனைவருக்கும் அபயமளித்தார்.

பின்னர் யாக சாலைக்குச் சென்று யோகக்கினியில் வெந்த சதி தேவியின் உடலைத் தன் தோள் மீது எடுத்துக் கொண்டு உலகெங்கும் திரிந்தார். அப்பொழுது விஷ்ணு முதலிய தேவர்கள் எம் பெருமானே உங்கள் தோள் மீதிருக்கும் தேவியின் உடல் சித்கலா ரூபமாக இருப்பதால் அதனை அகிலமெல்லாம் நிலைத்திருக்கும் சக்தி பீட மாக அமைத்து நீங்களும் அவ்விடங்களில் எழுந்தருள வேண்டும் என பிரார்த்தித்தார். எம் பெருமானும் அவர்களின் வேண்டுதலுக்கிணங்க அச் சக்தி பீடங்களை அமைக்குமாறு கேட்டிருந்தார். விஷ்ணுவும் சிவபிரானின் கட்டளையை நிறைவேற்றினார். தேவியின் உடற் பாகங்கள் வீழ்ந்த இடங்களில் அற்புதமான சக்தி பீடங்கள் அமைந்தன. அவ்வாறு அமைந்த இடங்கள் உலகில் 108 சக்தி பீடங்களாக அமைந்து இன்று வரை சிறப்புடன் இயங்குவதுடன் சக்தியின் அற்புதமான தலங்களாகவும் போற்றப்படுகின்றன. காசியில் விசாலாட்சி, மதுரையில் மீனாட்சி, காஞ்சியில் காமாட்சி போன்ற வெவ்வேறு பெயர்களும் விளங்க அச் சக்தி பீடங்களில் சக்தி தேவி அருளாட்சி புரிந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபிரானின் ஆணைப்படி திருமாலே குறிப்பிட்ட 108 சக்தி பீடங்களிலும் சக்தியின் சிலை வடிவங்களை அமைத்துள்ளார். சக்தியின் பீடங்களில் சிவபெருமானும் அருகருகே எழுந்தருளி யுள்ளார். சக்தியின் மாயா பீஜ மந்திரங்களை ஓதி உள்ளன்புடன் இடையறாது வழிபடும் எவரும் சக்தியின் திருவருளால் தாம் விரும்பியதை வேண்டியவாறு பெற்று மகிழ்வதை நாம் இன்று வரை காண்கின்றோம். (இன்று சக்தியின் 108 பீடங்களின் அமைவிடங் களுக்கு மேலாக சக்தியின் ஆலயங்கள் அமைக்கப்பட்டு தாய்த் தெய்வமாக வழிபடும் இடங்கள் பல சிறப்புகளையும் கொண்ட திரு ஊர்களாக இருப்பதை நாம் அறிவோம்.)

## ஜோதி மயமாகத் தோன்றிய குமாரி

சதி தேவியின் சரீரம் யோகாக்கினியில் புகுந்தபோது சிவபெருமான் சக்தியை இழந்து, செயலற்று ஒரு யோகியைப் போல ஓரிடத்திலிருந்து தேவியின் வடிவத்தையே தியானித்துக் கொண்டிருந் தார். சிவமும் சக்தியும் செயற்படாத வேளை அகில உலகமே இருள் சூழ்ந்த போல் ஏதும் செயற்பட இயலாது தவித்தனர். தேவர்களுக் கெல்லாம் அபசகுணங்கள் தென்பட்டன. இச் சம காலத்தில் தாரகன் என்ற அசுரன் தான் பெற்ற தவ வலிமையால் மூவுலகையும் அடக்கி ஆண்டு கொடுமைப்படுத்தினான். அசுரனின் கொடுமை தாங்க மாட்டாது அமரர்கள் மகா விஷ்ணுவிடம் சென்று முறையிட்டனர். திருமால் தேவர்களின் முறைப்பாட்டினைக் கேட்டதும் புன்முறுவல் செய்தார். ஒரு தாய் தான் பிள்ளையின் துன்பத்தை போக்குவாள் எனவே நாம் யாவரும் அன்னை பராசக்தியை நாடி எம்மைக் காப்பாற்றுமாறு வேண்டுவோமென்று கூறிக் கொண்டு இமயமலைச் சாரலுக்குச் சென்று தேவியைப் பூசித்தனர்.

தேவர்களின் இடையறாத பக்தியை அறிந்ததும் அதி கூடிய பிரகாசமான மின்னல் கொடி போன்ற தோற்றமுடைய கட்டிளம் குமாரி தோன்றினாள். அவளின் பிரகாசத்தில் தேவர்களின் கண்கள் கூச்சமடைந்தன. உவகையில் உள்ளம் பூரித்துப் பேரானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தனர். எமக்குரிய கவலைகளைப் போக்குவித்த தேவியே காத்தருள்வாய் எனச் சரணமடைந்தனர். இது கண்ட சக்தியானவள் புன் முறுவல் புரிந்து என் பக்தர்களைக் காப்பது தானே என் விருப்பம். கவலையை விட்டு உங்களுக்கு வேண்டியன யாவை எனக் கேட்டாள். தேவர்கள் தேவியை நோக்கி எங்களுக்கு தாரகாசுரன் என்பவனால் பல கேடுகள் சூழ்ந்துள்ளன. அவனுக்கு பிரம்மதேவன் சிவபிரானின் திருக்குமரனால் மரணம் ஏற்படும் என்று வரம் கொடுத்துள்ளார். சிவ பிரானோ தன் தேவியைப் பிரிந்த நிலையில் சக்தியற்றிருக்கிறாரே எனப் பலவாறு விசனத்துடன் முறையிட்டனர்.

தேவர்களை அன்புடன் அரவணைத்த பராசக்தி பர்வதராசன் தமக்கொரு மகவை வேண்டித் தவமிருக்கிறான் நான் பார்வதி என்ற பெயருடன் சக்தியின் தோற்றம் ஏற்பேன். அந்தப் பார்வதி தேவியை தேவர்களாகிய நீங்கள் சிவபிரானுக்கு திருமணஞ் செய்து வைப்பீர் கள் அப்பார்வதி தேவியே உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவாள் எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

அவ்விடத்திலிருந்த பர்வதராசன் தேவியைப் பலவாறு துதித்து பெருமகிழ்வடைந்தான். பல பிறவிகளில் செய்த தவப்பயன் தேவியை மகளாகப் பெறுவது பெரும் பேறேயாகுமென பல்வாறு புகழ்ந்து ஏற்றிப் போற்றியும் இன்புற்றான். தாயே இவ்வாறு கருணை கொண்ட நீ உனது சுய (விஸ்வ) ரூபத்தை பக்திபூர்வமான யோகத்தையும் சாத்திர பூர்வமான ஞானத்தையும் உபதேசித்தருளுமாறு வேண்டினான்.

தேவி தேவர்களையும் பர்வதராசனையும் நோக்கி உலகின் பிரபஞ்ச அமைப்பு முறை உயிர்களின் அமைப்பு முறை அவற்றின் பேதங்கள் யாவும் சக்தியான தன்னாலேயே இயக்கமடைகின்றன என்றும், மாயை என்னும் சக்தியால் தான் யாவற்றையும் இயக்க முடிகிறதென்றும் ஆன்மாக்களின் இயல்பு நிலைக்கேற்ப ஞானத்தை உணர வைத்து பரமாத்மாவை அடையும் வழிகளையும் விபரமாகக் கூறினாள். இப் பிரபஞ்சத்தை இயக்கும் ஆற்றலினால் அண்டமெல்லாம் தென்படும் அனைத்தும் மகா சக்தியாகிய தன்னுள்ளே அடங்கியுள்ளன. தேவைக் கேற்ப பிரளய காலங்களை அமைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது அழிக்கப்படும் யாவும் மீண்டும் தோற்றுவிக்கும் ஆற்றல் தன்னுள்ளேயே அடங்கியுள்ளன. தேவர்களும் பர்வதராசனும் கேட்டதன் பேரில் தனது விஸ்வ ரூபத்தை நேரிற் காண்பித்தாள். பாதாளம் முதல் விண் வரை வியாபித்த உருவத்தினுள் அண்டங்கள் கடல் மலைகள் மரங்கள் சூரிய சந்திரர் மற்றும் உப கிரங்கள் யாவும் தெரிந்தன. சக்தியின் இப் பயங்கரமான ரூபத்தை கண்டதும் தேவர்கள் முதலான அனைவரும் மயங்கி விழுந்தனர். அச்சமயம் நான்கு திசைகளிலிருந்தும் நான்கு வேதங்கள் முழக்கமிட்டன. மயங்கிய அனைவரும் மயக்கம் தெளிந்து எழுந்தனர். தமது நிலையை உணர்ந்து தேவியின் மீது பக்தியால் கண்ணீர் மல்க அவளைப் போற்றித் துதித்தனர்.

மேலும் தேவியை வணங்கி மகாசக்தியே உன்னுள் அடக்கமான சகலவற்றையும் காண்பித்தாய், எம்மைப் பயமடைய வைத்தது போதும் உனது கருணையுடைய இயற்கை அழகிய திருவுருவில் எமக்குக் காட்சி தருவாயாக என யாவரும் பணிந்தனர். தேவர்களின் பக்தியை மெச்சிய தேவி இயற்கை வனப்புடன் பேரிளம் சக்தி வடிவில் தோன்றினாள். திரிபுர சுந்தரியை யாவரும் கண்டு களித்துத் தமது பயம் நீங்கி பூரண திருப்தியுடனும் பெரும் மகிழ்வுடனும் துதித்தார்கள். தம்மைப் பக்தியுடன் நாடிய தேவர் களுக்கும் பர்வதராசனுக்கும் தேவி சகல விதமான வழிகளையும் உபதேசித்தாள். முறைப்படி சகல பூசைகள் யாவற்றையும் தவறாது செய்து மேன்மையுறுமாறு கேட்டிருந்தாள். இவ்வாறு கூறியதும் தேவி மறைந்தருளினார். தேவர்கள் யாவரும் ஆனந்தக் கடலில் மூழ்கினர்.

தேவி இமயமலைக்குச் சென்று கௌரி என்னும் பார்வதி தேவியின் பெயரில் சிவபிரானின் தேவியாக இணைந்தாள். இவ் இணைவினால் முருகன் என்னும் திருக்குமரன் தோன்றித் தாரகாசுரன் என்பவனைக் கொன்றான். ஒரு சமயம் தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்த போது அதிலிருந்து இலட்சுமி தோன்றினாள். இலட்சுமியை மகா விஷ்ணுவின் தேவியாகத் தேவர்கள் இணைத்தார்கள். சிவபிரானும், மகா விஷ்ணுவும் தத்தமது பணிகளை மிகச் சிறப்பாகச் செயலாற்றப் பார்வதி தேவியும் இலட்சுமி தேவியும் துணை புரிந்தனர். தேவர்களும் மிக மகிழ்வுடன் தத்தமது பணிகளை மேற்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவித்திரி தேவியின் பூசையும் விரதப் பயன்களும்

நாரத முனிவரின் வேண்டுதலின் பேரில் நாராயணர் சாவித்திரி தேவியின் சிறப்புகள் பூசை முறைகள் சாவித்திரி தேவியை வழிபட்டோர் அடைந்த நன்மைகள் பற்றி நன்கு விளக்கிக் கூறினார். வேதங்களின் தாயான சாவித்திரி தேவியை முதன் முதல் பிரம்ம தேவரும் வேதகணாங்களும் பண்டிதர்களும் பாரத நாட்டில் மகத தேசத்து மன்னன் அசுவபதியும் வழிபட்டனர்.

அசுவபதியின் மனைவி மாலதி என்பவள் வசிட்ட முனிவரிட மிருந்து சாவித்திரி தேவியைப் பூசிக்கும் முறைகள் மந்திரங்களை முறையாக ஓதக் கேட்டவள். இவள் சாவித்திரி தேவியை உள்ளன்புடன் பூசித்தும் தேவி காட்சி தராததால் மனம் வருந்தினாள். தன் மனைவி யின் வருத்தத்தை நீக்க, தானே பூசிக்க அசுவபதி முன் வந்தான்.

அசுவபதி மன்னன் புஸ்கரசேத்திரஞ் சென்று அகம் புறத் தூய்மையுடன் பல்லாண்டு காலம் தேவியை வேண்டித் தவமிருந்தான். மன்னனுக்கும் தேவி தரிசனம் தரவில்லை. அதனால் மன்னன் மன வேதனையுற்றான். அப்போது இலட்சம் காயத்திரி செபஞ் செய்யுமாறு அசரீரியாக ஒலித்தது. அச்சமயம் அவ் வழியே வந்த பராசர முனிவர் அசுவபதியை நோக்கி சாவித்திரி தேவியைப் பூசிக்கும் முறைகளை யும் அதன் பேறுகளையும் விபரமாகக் கூறினார்.

அசுவபதி சாவித்திரி தேவியின் தோத்திரத்தை படித்து உள்ளன் போடு வழிபட்டான். சாவித்திரி தேவி அசுவபதியின் வழிபாட்டிற்கு இரங்கி அவன் முன் தோன்றினாள். தேவி அசுவபதியை நோக்கி அரசே நீயும் உன் மனைவியும் ஒரு மகவுக்காக என்னை வழிபட்டீர்கள். உங்கள் விருப்பம் உரிய காலத்தில் நிறைவேறும் என்று கூறி மறைந்தருளினாள். குறிப்பிட்ட காலத்தில் மாலதி ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்தாள். அப் பிள்ளை சாவித்திரி தேவியின் கருணையினால் பிறந்ததால் சாவித்திரி என்றே பெயரிட்டு கண்ணென போற்றி வளர்த்தனர். சாவித்திரி முன் செய்த தவப்பயனால் அழகிய தோற்றமும் நுண்ணறிவும் சிறக்க வளர்பிறை போல வளர்ந்தாள். அவள் தக்க பருவத்தில் பூப்பெய்தி சகல அங்கலட்சணங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிந்து விளங்க நல்ல மதிநுட்பமும் நாவன்மையும் சமயோசித புத்தியும் கிடைக்கப் பெற்றாள். தங்கப் பதுமை போன்ற உருவமும் தெய்வபக்தியும் அடக்கமும் நற்பண்பும் யாவரையும் அனுசரிக்கும் மனப்பாங்கும் அவளை அலங்கரித்தன. சாவித்திரிக்கு மணப் பருவம் வந்ததும் பெற்றோர் வரன் தேடினர். சாவித்திரிக்கு ஏற்ற வரன் கிடைக்காததால் அவளையே தகுந்த கணவனைத் தேடி வருமாறு கூறினார் அவள் தனது தோழிகளுடனும் அரச பாதுகாவலர்களுடனும் குதிரை மீதேறிப் புறப்பட்டாள். அவள் பல நாடுகளுக்குச் சென்றும் ஏற்ற இளவரசர்கள் கிடைக்கவில்லை.முனிவர்கள் வதியும் பெரிய கானகத்தை அடைந்தாள். அக் கானகத்தில் பகையுள்ள மிருகங்கள் பறவைகள் யாவும் அன்பு தழுவி அமைதியாகக் காணப்பட்டன. இக் காட்சியைக் கண்ட சாவித்திரி அவ்விடத்தினருகே இருந்த முனிவர்களின் ஆச்சிரமத்தை நாடினாள். சாவித்திரியைக் கண்ட முனிவர்கள் அவளை ஆசீர்வதித்து வாழ்த்தினர்.

அவர்களின் வழிகாட்டலில் ஒரு குடிசையில் வாழ்ந்த கபோதியான மன்னனிடஞ் சென்றாள். அவரை வணங்கியதும் அந்த மன்னனின் மகனும் இளவரசனுமான சத்தியவானைக் கண்டாள். அவனையே கணவனாக ஏற்பதாகத் தீர்மானித்துக் கொண்டாள். அவ்வரசனிடம் தனது விபரங்களைச் சொல்லியும் அரசனின் நிலைமையையும் கேட்டாள். அரசன் சாலவதேசத்தரசனெனவும் தனக்கும் மனைவிக்கும் கண்பார்வை இல்லையென்றும் பகையரசன் தமது நாட்டைப் பிடித்ததால் தமது அமைதி தேடி அக் கானகத்தில் வசிப்பதாகத் தெரிவித்தார். தமது மகனே தமக்குரிய பணிவிடைகளைச் செய்வதாகவும் தெரிவித்தார்.

சாவித்திரி இச் செய்திகளுடன் தந்தையிடஞ் சென்றாள் தந்தையுடன் நாரத முனிவரும் உடனிருந்தார். அப்போது சாவித்திரி தனது முழுவிபர ங்களையும் தெரிவித்தாள். அச் சமயம் நாரத முனிவர் சத்தியவான் சகல சிறப்புகளும் பொருந்தியவன். ஆனால் அவனுக்கு இன்னும் ஒரு வருடம் தான் ஆயுளாகும் என்றார். இதையறிந்த மன்னர் மகளிடம் மறு பரிசீலனை செய்யுமாறு கூறினான். சாவித்திரி தான் தனது திடமான முடிவாகச் சத்தியவானையே வரனாக மனதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதித்துள்ளதாகவும் கூறினாள். சாவித்திரியின் திடமான கூற்றை நோக்கிய நாரத முனிவர் சாவித்திரி சாதுர்யமானவள் விவேகி இவள் சாவித்திரி நோன்பு என்னும் காரடையா நோன்பில் விரதம் இருந்து இயமனையும் வெல்லுவாள் என்றார். அசுவபதியும் தன் மகளுக்கும் சத்தியவானுக்கும் திருமணம் செய்து சத்தியவானுடன் அனுப்பி வைத்தான்.

கணவனுடன் கானகமேகிய சாவித்திரி தமது இல்லறப் பணியாக கணவன் மாமன் மாமியரின் பணிவிடைகளை அன்போடு செய்து இன்புற்றாள். சாவித்திரி, தேவியை வேண்டி விரதமிருந்து சாவித்திரி நோன்பான காரடையா நோன்பை மிகுந்த பயபக்தியுடன் கடைப்பிடித்தாள் தனது நாளாந்தப் பணிகளை பொறுப்புடன் செய்தாலும் சத்தியவானின் உயிரைக் காக்க வேண்டித் தேவியின் மீது பக்தியுடன் தன்னையே அர்ப்பணித்தாள். காலங்கள் கடந்தன. சத்தியவானின் மரண நாளை கணக்கிட்டு வந்த சாவித்திரி இறுதி நாளுக்கு முதல் நாள் இரவு தேவியின் விரதத்துடன் கணவனின் உயிருக்காக வேண்டி உபவாசமிருந்தாள். மறுநாளன்று அதிகாலை யில் எழுந்து தமது நியமப்படி சாவித்திரி தேவியின் பூசைகளை நிறைவு செய்து உண்ணா நோன்பிருந்தாள்.

காலையில் எழுந்த சத்தியவான் காட்டுக்கு விறகு வெட்டச் சென்றான். சாவித்திரியும் கணவனுடன் சென்றாள். சத்தியவான் ஒரு மரக்கிளையை வெட்டியதும் மயக்கமுற்று நிலத்தில் சரிந்தான். கணவனின் தலையைத் தன் மடிமீது வைத்துக் கொண்டு சாவித்திரி தேவியை எண்ணி இடையறாது தியானித்துக் கொண்டிருந்தாள். அவனின் உயிரைக் கவர வந்த இயம தூதர்கள் தேவியின் அருளாலும் சாவித்திரியின் கற்பினாலும் சத்தியவானின் அருகே செல்ல முடியாது இயமனிடம் சென்று முறையிட்டனர். இயமன் தனது எருமை வாகனத்தில் வந்து சத்தியவானின் உயிரைக் கவர்ந்தான். சாதாரண மனிதர்களின் கண்களுக்கு தென்படாத இயமனின் தோற்றம் பதிவிரதையான சாவித்திரியின் கண்களுக்குள் தெரிந்தது. கணவனின் உயிரைக் கவர்ந்த இயமன் திரும்பும் போது சாவித்திரியும் உடன் பின் சென்றாள். இயமன் தனது இயம லோகத்திற்கு எவரும் செல்லக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாதெனவும் சாவித்திரியை பின் வர வேண்டாமெனவும் கூறினான். பதிவிரதையான சாவித்திரி கணவனைத் தொடர்ந்து செல்வதே கடமையாகும் என்றாள்.

மானிடராகப் பிறப்பதும் இறப்பதும், அவர்கள் செய்த வினையின் பயனிற்கேற்ப துன்பத்தையும் இன்பத்தையும் அனுபவிப்பதும், பல பிறவி எடுப்பதுவும், இறப்பதுவும் உறுதியாகும். எவர் கண்ணுக்கும் புலப்படாத நான் சாவித்திரி தேவியின் பரமபக்தையும் பதிவிரதையுமான உன் கண்களுக்கு புலப்படுகிறேன். சத்தியவானின் வினைப்படி இன்றுடன் அவனின் ஆயுள் நிறைவாகிறது. அதன் படியே நான் அவனுயிரைக் கவர்ந்து செல்கிறேன். உனது ஆயுள் நிறைவடையும் போது தான் உனது உயிரும் கவரப்படும் என்றான். மேலும் மானிடரின் பல தத்துவங்களையும் அதன் பேறுகளையும் எடுத்துக் கூறினான். சாவித்திரி தேவி தமது வாழ்வின் பயனை அனுபவிக்க மகப்பேறும் இல்லற தர்மமாக அமைய வேண்டும் என்று தனது மதிநுட்பத்தினால் பரிந்து கூறினாள். அவளின் கூற்றினால் இயமன் மனமிரங்கி புன்னகைத்தான். சாவித்திரியின் அர்த்தமுள்ள வார்த்தைகளின் கருத்தை உணர்ந்தான்.

பெண்ணே வயதில் குறைந்த போதும் சாவித்திரி தேவியின் பேரருளால் சிறந்த இறை பக்தியும் மிகுந்து முதிர்ந்த ஞானியைப் போல உலக நீதியான தத்துவங்களை எடுத்துரைத்தாய் உனது இறை பக்தியையும் மெச்சினேன் என்னால் கவரப்பட்ட எவ்வுயிரும் மீளாது ஆனால் தேவியின் அருளும் ஆற்றலும் பெற்ற நீ கணவனின் உயிரை விட வேறு வரம் கேட்பாயாக என்றான். தேவியின் அருளை மனதளவில் மெச்சிய சாவித்திரி இயமதர்மராசனே என் பெற்றோருக்குப் பல புத்திரர்களையும் எனது மாமன் மாமியருக்கு இழந்த கண்பார்வையும் இழந்த இராச்சியத்தையும் எனக்குப் பல புத்திரர்களையும் தந்தருள வேண்டுமென பலவாறு வேண்டினாள். இயமதர்மராசன் வேண்டிய யாவற்றையும் தந்தான். தனது வரங்கள் சித்திப்பதற்காக தான் கவர்ந்த சத்தியவானின் உயிரையும் மீளச் செய்தான்.

சாவித்திரி தேவியின் நோன்பிருந்தத பயனாக தேவியினால் அளிக்கப்பட்ட பேரருளினால் சாவித்திரி இயமதர்மராசனிடமிருந்து பெற்ற வரங்களினால் இன்புற்றாள். இயமதர்மராசன் சாவித்திரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி பெண்ணே நீங்கள் இருவரும் பல புத்திரர்களைப் பெற்று பல இல்லற தர்மங்களையும் செய்து பன்னெடுங்காலம் வாழ்ந்து பரமபதத்தை அடைவீர்களாக என வாழ்த்தி அவ்விடம் விட்டகன்றான்.

இயமன் அவ்விடம் விட்டகன்றதும் சாவித்திரி சத்தியவானின் உடல் இருந்த இடத்தை நாடினாள் சத்தியவானும் துயிலெழுந்தது போல எழுந்தான். இருவரும் நடந்த சம்பவங்களைத் தமக்குள்ளே பகிர்ந்தனர். சத்தியவானும் சாவித்திரியும் தமது பன்னசாலையை அடைந்தனர். சாவித்திரியின் மாமன் மாமியர் தத்தமது பிரகாசமான கண்களினால் குதூகலத்துடன் இருவரையும் வரவேற்றனர். யாவரும் நடந்த சகல விபரங்களையும் கலந்துரையாடினர். சாவித்திரி தேவியின் விரதமான காரடையா நோன்பினையும், தேவியின் பேரருளையும் அதன் பெறுபேறாகத் தமக்குக் கிடைத்த வரங்களைப் பற்றியும் நேரிலே கண்டு இன்புற்றனர்.

அசுவபதி மன்னனும் மனைவியும் நாரத முனிவருடன் வந்து சேர்ந்தனர். சாவித்திரி தேவியின் நோன்பினை உரிய முறைப்படி பய பக்தியுடன் கடைப்பிடித்த சாவித்திரி தனது பக்தியால் கிடைத்த தேவியின் அருளினாலும் தனது மதி நுட்பத்தாலும் நாவன்மையாலும் தற்துணி வினாலும் இயமனின் நியதியை வென்று வரங்கள் பல பெற்ற வியப்பை நாரத முனிவர் அவ் இடத்தில் கூறினார். சாவித்திரியின் வரங்களினால் மாமன், மாமியரின் இழந்த கண் பார்வையும் இராச்சியமும் கிடைத்தன. அசுவபதிக்கும் மேலும் புத்திரச் செல்வங் கள் கிடைத்தன. எல்லாவற்றுக்கும் மேலாகச் சத்தியவானின் சென்ற உயிர் கிடைத்தது. இதனால் சத்தியவான், சாவித்திரியின் இல்லற வாழ்வு நிறைவாகவும், இன்பமாகவும், பற்பல பேறுகளையும் அனுபவிக்கும் நீடிய ஆயுளைத் தந்தன.

நாரத முனிவர் ஒரு வருடத்திற்கு முன்பு கூறிய ஆலோசனை யின் பேரில் சாவித்திரி நோன்பிருந்து தேவியின் அருள் பெற்று இயமனை வென்று வரங்கள் பல பெற்று யாவருக்கும் வழி காட்டியாக வாழ்ந்தாள். சாவித்திரி விரதம் என்னும் காரடையா நோன்பினையும் பய பக்தியுடன் கடைப்பிடித்த நோன்பின் பலனை அறிந்தோம். இந்த நிகழ்வு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவையாகும். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மகிமையை உணர்ந்த இந்து சமய மக்கள் இன்று வரை நன்கு தூய பக்தியுடன் அனுஷ்டித்து நற்பலனை அடைய அருள் பாலிக்கும் மகா சக்தியைப் போற்றி வழிபடுவோமாக.

## தேவேந்திரனுக்கு துர்வாசமுனிவர் இட்ட சாபம்

முன்னொரு காலத்தில் இந்திரன் அப்சரஸ் மங்கையான ரம்பை யுடன் காதல் மயக்கத்தில் கூடிக் குலாவி இருந்த கானகத்தினூடாக துர்வாச முனிவர் தமது சீடர்களுடன் சென்றார். முனிவரைக் கண்டதும் இந்திரன் ஓடிச் சென்று முனிவரையும், சீடர்களையும் வணங்கினான். இந்திரன் செய்த பணிவைக் கண்டு மகிழ்ந்த முனிவர் அவனை வாழ்த்தி தன் கையிலிருந்த பரமாத்மாவின் பிரசாதமான பாரிசாத மலர் மாலையையும் இந்திரனிடம் கொடுத்தார். அவன் அந்த மாலையை தானே வைத்திருக்காமல் போதையில் இருந்த காரணமாக தனது யானையின் மத்தகத்தின் மீது அலட்சியமாக வீசினான். தன் மீது மாலை விழுந்ததும் சினங்கொண்ட யானை கடவுளின் பிரசாதமாகக் கிடைத்ததை மகிழ்ச்சியின்றி அலட்சியமாக வீசியதால் இந்திரனை விட்டு தவஞ் செய்யப் புறப்பட்டது.

அவ்வாறு விட்டுப் பிரிந்த யானையை இந்திரனால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அப்போது முனிவர் இந்திரனை நோக்கி கடுஞ் சினத்துடன் அடே! அகம்பாவத்தினால் அந்த மாலையை அலட்சியமாக வீசினாய். இறைவனுக்குப் படைத்த நிவேதனம், காணிக்கை, பழம், மலர், நீர் ஆகியவற்றை பக்தியுடன் வாங்கி அனுபவிக்க வேண்டும். தவறின் பிரம்ஹத்தி என்னும் பாவத்தினால் சகல சம்பத்துகளையும் இழந்து துன்புற நேரிடும். அறிவிலியான இந்திரனே! உனது அகந்தையினால் பரமாத்மாவின் திவ்விய பிரசாதமான பாரிசாத மலர் மாலையை நீ அலட்சியமாக வீசியதால் சிறப்புடன் உன்னை வாழ்வித்த மகாலட்சுமி உன்னை விட்டு நீங்கி வைகுண்டம் சென்று வாழ்வாளாக.. எனச் சாபமிட்டார். முனிவர் தொடர்ந்து இந்திரனை நோக்கி இந்திரா! சர்வேஸ்வரனுக்கு ஆட்பட்ட நான் தேவர்களுக்கோ அன்றி வேறொருவருக்கோ அஞ்ச வேண்டியதில்லை. பகவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசாதத்தை எவன் ஒருவன் ஏற்று அனுபவிக்கிறானோ அவன் தான் என்னால் போற்றப் படுவான். பகவானின் பிரசாதமான மாலையை நீ அலட்சியமாக வீசியதால் நீ என் மதிப்பிற்கு அருகதையற்றவன் எனக் கடிந்தார்.

உடனே இந்திரன் முனிவரின் பாதங்களில் விழுந்து அழுது புலம்பி மன்னிக்குமாறு வேண்டினான். அப்போது முனிவர் எவன் மதி கெட்டு அலைகிறானோ அவனுக்கு எவரும் உதவ மாட்டார்கள். தமது பாவ வினைகளைத் தாமே உணர்ந்து வருந்துவர் எனப்பல உண்மை களை விளக்கியதும் துர்வாச முனிவர் அவ்விடம் விட்டகன்றார்.

உடனே இந்திரன் தனது சம்பத்துகள் தன்னை விட்டகன்ற நிலையில் தனது பட்டினமான அமராவதிக்குச் சென்றான். அங்கு அசுரர்கள் கூட்டம் கூட்டமாக எல்லா இடங்களிலும் காணப்பட்டனர். எவருக்கும் அஞ்சாத நிலையில் தமது கருமங்களைக் கவனித்துக் கொண்டு சாதாரன இயல்பு வாழ்வில் இன்புற்றனர். தேவர்கள் எவருமோ அவ்விடத்தில் காணப்பட வில்லை. இதனால் தனது வினைப் பயனால் வந்த கவலையை மேலும் பெருக்கிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். அவன் மந்தாகினிக் கங்கைக் கரையோரம் சென்ற போது கங்கையில் நீராடிய கரையில் நின்று கிழக்கே நோக்கியவாறு தேவ குருவான பிரகஸ்பதி சூரியனை நோக்கித் தியானித்துக் கொண்டு நிற்கிறார். அவரின் தியானம் முடிந்ததும் இந்திரன் தேவகுருவை நோக்கி ஓவெனக் கதறிக் கொண்டு குருவின் பாதங்களில் விழுந்தான். எழுந்து தனக்கு நேர்ந்த கதியை அழுதவாறு எடுத்தியம்பினான். தேவகுரு இந்திரனை நோக்கி நீ முன் வினைப் படி செய்த வினையை அனுபவித்தே ஆக வேண்டும்.

பிரம்மன் படைக்கும் போது சகல வினைப் பயன்களைப் பற்றியும் உணர்த்தியுள்ளான். எவரும் முன் செய்த நல்வினையினால் நற்பயனையும் தீவினைகளினால் தீய பயன்களையும் அடைவர். எதிர் கால நன்மை கருதாமல் மதிமயக்கத்தால் செய்த பாவச்செயலால் நீ அவஸ்தைப்படுகிறாய். என்று தேவகுரு கூறிய உண்மை நெறியால் குருவிமோசனம் ஏதுமில்லையென எண்ணிய இந்திரன் அவ்விடம் விட்டகன்று பிரம்மலோகஞ் சென்றான். பிரம்மாவின் சபையில் அவரைக் கண்டு வணங்கித் தனது துயரத்தை எடுத்துக் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மா இந்திரனை நோக்கித் தேவராசனே நீ எனது குலத்தில் உதித்தவன் தேவகுருவான பிரகஸ்பதியின் மாணவன். முன் நாளிற் செய்த நற்பயன் காரணமாகவே தேவேந்திரப் பதவியை அடைந்தாய். எவருக்கு முதலில் அவரவர் பெற்றோர் செய்த வினைப் பயனின் பேறாகவே பலாபலன் கிடைக்கும். அதற்கமைவாகவே இந்திரப் பதவி கிடைத்ததையிட்டு யாவரும் மகிழ்ந்தனர். துர்வாச முனிவர் இறைவனின் பிரசாதமான பாரிசாத மலர் மாலையை உன் மீதிருந்த அன்பினால் உன்னிடம் தந்து வாழ்த்தினார். அதை நீ பக்தியுடன் வாங்கி தெய்வ அநுகூலம் என்று போற்றி ஏற்றபடி அனுபவித்தால் பெரிய நன்மை அடைந்திருப்பாய். ஆனால் உன் முன் செய்த பாவ வினையும் உன் கெட்ட மதியால் அடைந்த அகந்தையும் மேலோங்க அந்த மலர் மாலையை அலட்சியமாக வீசியெறிந்த பாவியானாய். சிவனடியாரான துர்வாசமுனிவர் கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளான உன்னிடமிருந்த மகாலட்சுமியும் சகல சம்பத்துக்களும் உன்னை விட்டகன்றனர். அதனால் இப்போது உனது பாவச் செயலுக்காக வருந்துகிறாய். இதனால் தெய்வத்தாலும் வஞ்சிக்கப்பட்டுள்ளாய். இத் துர்ப்பாக்கிய முள்ளவனுக்கு யார் தான் உதவுவர். பிரம்மா மேலும் பல அறிவுரைகளால் இந்திரனின் மோசமான பரிதாப நிலையை உணர வைத்தார். இந்திரனுடன் கூட நின்ற தேவர்களையும் தேவகுருவையும் அழைத்துக் கொண்டு வைகுண்டம் சென்றார். வைகுண்டத்தில் இலட்சுமி நாதரை யாவரும் வணங்கித் தோத்திரம் பாடினர். மகாவிஷ்ணு இந்திரனுக்கு நேர்ந்த கதியை எடுத்தியம்பினார்.

இயல்பாகவே இந்திராதி தேவர்கள் சிறந்த ஆடை அணிகளுடன் ஆடம்பரமான வாகனங்களில் பவனி வந்து ஆனந்தமடையும் நிலை மறைந்திருந்தது. மேலும் பல செல்வங்களையும் அதனுடன் சேர்ந்த சோபையையும் இழந்தும், இன்பம் பொங்கும் இந்திரன் சோக மேலீட்டினால் வாடிய முகத்துடன் நிற்கக் கண்ட மகாவிஷ்ணு முதலில் திகைத்தார். தேவர்களே "யாம் இருக்கப் பயம் ஏன்" அஞ்சற்க உங்கள் தேவைக்குரிய சகல சம்பத்துகளையும் கொடுக்கின்ற இலட்சுமியையும் நான் தருகிறேன். ஆனால் பிரபஞ்சத்துக்குட்பட்ட யாவரும் என் வசப்பட்டுள்ளார்கள் அவர்கள் என் பக்தர்கள். அவர்களுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபமுண்டாக்குமிடத்தில் நான் தரிப்பதில்லை. விட்டு விலகிவிடு வேன். தேவேந்திரா! சங்கரருக்கு இணையான துர்வாசகருக்கு நீ கோபத்தை உண்டாக்கியதால் முனிவரின் சாபப்படி சம்பத்துகளின் வடிவமான இலட்சுமியும் உன்னைவிட்டு விலகியுள்ளாள். எங்கு ஈஸ்வர பக்தர்கள் அவமதிக்கப்படுகிறார் களோ அங்கு இலட்சுமியும் தங்க மாட்டாள். என்று பல நற் சிந்தனைகளையும் இந்திரனுக்கு உபதேசித்த நாராயணர் இலட்சுமியை நோக்கி தேவி! ஈஸ்வரரின் அநுக்கிரகத்தால் பாற்கடலைக் கடையும் போது ஒரு கலையால் நீ அங்கு பிறப்பாயாக என்று கட்டளையிட்டார். பின்னர் பிரம்மாதி தேவர்களுக்கு விடை கொடுத்தனுப்பினார்.

காலங்கள் கடந்ததும் பரமேஸ்வரனின் சித்தப்படி தேவர்கள் அசுரர்கள் இருபகுதியினராக நின்று திருப்பாற்கடலை கடைந்தனர். அப்போது பாற் கடலில் இருந்து அமிர்தம், தன் வந்திரி, உச்சையை வரம், ஐராவதம், பலவகை இரத்தினங்கள், சுதர்சனம், இலட்சுமி, வனமாலை என்பன தோன்றின. அவற்றை தேவர்கள் அடைந்து இன்புற்றனர். இலட்சுமியும் இந்திரன் நாணும்படி தேவர்களுக்கும் காட்சி தந்தாள். பல சம்பத்துகளையும் கொடுத்து மேலும் ஏதும் தேவையா எனக் கேட்ட இலட்சுமி தேவி புன்முறுவலுடன் யாவரையும் மகிழ்வித்தாள்.

இக் கதை மூலம் தேவர்களின் அரசனான இந்திரன் தன் அகந்தையினால் ஈஸ்வர பக்தனான துர்வாச முனிவரை அவமதித்ததால் சாபம் பெற்று சகல சம்பத்துகளையும் இழந்தான். ஈஸ்வரனையும் பக்தர்களையும் அவமதிக்கும் இடத்தில் இலட்சுமி தேவியின் சகல செல்வங்களும் தரித்திருக்காது இவை விலகினால் பெரும் பதவி, பெரும் மதிப்பு பல சிறப்புகளும் இருந்த போதும் இறைவன் மற்றும் பக்தர்கள் மீது அன்பும் பெரும் மதிப்பும் வைத்திருந்தால் மட்டும் இலட்சுமி கடாட்சமும் சகல சம்பத்துகளும் எங்கும் என்றும் தங்கி நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராமரியம்மனின் மகிமை

முன்னொரு காலத்தில் அசுரர்குல மன்னனான அருணன் என்பவன் தனது வீர வலிமையால் மூவுலகையும் அரசாளும் நோக்கில் தேவர்களை வென்று தனது எண்ணத்தை நிறைவேற்ற முன் வந்தான். இமயமலைச்சாரலுக்கு சென்று கங்கைக் கரையில் பன்னசாலை அமைத்துக் காயத்திரி தேவியை வேண்டித் தவமிருந்தான். உணவோ நீரோ எதுவுமின்றி காற்றையே சுவாசித்துக் கொண்டு நெடுங்காலம் தவமிருந்தான். அவனின் தவ வலிமையால் தவாக்கினி தோன்றி மூவுலகையும் எரியூட்டியது. இதனால் அச்சமுற்ற இந்திராதி தேவர்கள் பிரம்மாவிடஞ் சென்று முறையிட்டனர். பிரம்மா காயத்திரி தேவியுடன் அன்னவாகனம் மீதமர்ந்து அருணாசுரன் முன் தோன்றினர். பிரம்மா அவனை நோக்கினார். தவாக்கினியால் அவனது உடல் மெலிந்தும் பலதுவாரங்களுடன் அசைவற்றிருந்தது. அவனின் உயிர் மட்டும் தவ நிலையில் ஒட்டி இருந்தது. உடலிலிருந்து அதி பிரகாசமான தீப் பிளம்பு வெளிவந்தவண்ணமிருந்தது.

பிரம்மா அவனை நோக்கி அருணனே! நீ வேண்டுவது யாதெனக் கேட்டார். அருணன் எழுந்து பிரம்மாவை வணங்கிப் படைத்தற் கடவுளே எனக்கு இறவா வரம் வேண்டும் என்றான். அவனை நோக்கிய பிரம்மா பிறந்தவர்கள் அனைவரும் இறக்க வேண்டிய நியதி இருப்பதால் வேறு வரம் கேட்குமாறு கூறினார். அப்போது அசுரன் யுத்தத்தினாலோ, ஆயுதங்களினாலோ ஆண், பெண் என்ற இருபாலரி னாலோ, இரண்டு அல்லது நான்கு கால்களுள்ள பிராணிகளாலோ தனக்கு மரணம் ஏற்படக் கூடாதெனவும் தேவர்களை வெல்லவும் வலிமை வேண்டுமெனவும் வரம் கேட்டான். பிரம்மாவும் கேட்ட வரம் தந்து மறைந்தருளினார். உடனே அருணாசுரன் பாதாள லோகஞ் சென்று அசுரர்களை அழைத்து வந்து தேவர்களுடன் போர் தொடுக்க முற்பட்டான். ஒரு தூதனை அழைத்துத் தேவலோகஞ் சென்று இந்திரனைத் தன்னுடன் போர் புரிய வருமாறு சொல்லி அனுப்பினான். அசுர தூதுவன் அருணனின் செய்தியை இந்திரனிடம் எடுத்துரைத்தான். அதனைக் கேட்டதும் இந்திரன் பயந்தோடிச் சென்று பிரம்மாவிடஞ் சரணடைந்தான். பிரம்மா இந்திராதி தேவர்களையும் அழைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு மகா விஷ்ணுவிடஞ் சென்றார். தேவர்களின் துயர் துடைப் பதன் பேரில் மகாவிஷ்ணு யாவரையும் அழைத்துக் கொண்டு சிவபெருமானிடஞ் சென்று முறையிட்டனர். அச் சமயம் அருணாசுரன் சூரியன், இயமன், அக்கினி ஆகியோரை ஓடத்துரத்தி விட்டு அவர் களின் தோற்றத்தில் தானே அவர்களின் திசைகளிலிருந்து பணியாற்றினான்.

துரத்தப்பட்ட சூரியன் முதலானோர் கைலயங்கிரிக்குச் சென்று சிவபிரானிடஞ் சரணடைந்தனர். அனைத்துத் தேவர்களும் சிவபெருமானிடம் அருணாசுரன் என்பவன் தான் பெற்ற பல வரங்களின் வலிமையால் யுத்தத்தினால், ஆயுதங்களினால், ஆண் பெண்ணினால், இரண்டு கால் நாலு காலுள்ள பிராணிகளால் மரணம் ஏற்படக் கூடாதென்ற அகந்தையினால் எம்மைத் துன்புறுத்துகிறான் என்றார்கள். சிவபெருமான் தேவர்களை நோக்கி பராசக்தியிடம் சென்று சரணடையுங்கள் அவள் உங்கள் கவலையை போக்குவாள். அவன் செய்து வரும் காயத்திரி மந்திர ஜெபத்தை செய்யாது விட்டானாகில் மரணத்துக்கு ஆளாவான். என்று அசரீரி ஒலித்தது. இந்த அசரீரியைக் கேட்டதும் இந்திரன் தேவகுருவான பிரகஸ்பதியிடம் அருணன் காயத்திரி செபத்தை விட்டால் அவனைக் கொல்லலாம். எனவே அவனிடம் சென்று அவனை மந்திர செபத்திலிருந்து விடுவிக்க ஏற்ற வழிகளை செய்யுமாறு வேண்டினான். ஏனைய தேவர்கள் யாவரும் சக்தி தேவியின் பிரியமான மந்திரங்களை ஓதியும் தோத்திரங்களைப் பாடியும் இடையறாது வழிபட்டனர்.

தேவகுருவான பிரகஸ்பதி அருணாசுரனிடஞ் சென்று அவனைப் புகழ்ந்து அவனின் உறவைப் பேணினார். சக்தியின் சிறந்த உபாசகர் எனவும் தாமும் சக்தியின் பக்தராதலால் இருவர் உறவிலும் பல ஒற்றுமை இருப்பதைக் கூறினார். தேவ குருவின் இனிய வார்த்தைகளால் பெருமையும் அகந்தையும் தலைக்கேறிய அருணாசுரனுக்கு வேத மாயையும் சூழ்ந்தது. இதனால் காயத்திரி செபஞ் செய்யும் நியதியையும் மறந்தான். அசுரன் அகந்தையால் பரம மந்திரமான திரிசுபாத செபத்தை செய்ய மறந்து விட்டான். அதை மறந்தவுடன் அவனது ஜபதேஜஸ் அகன்று விட்டது. இதனால் மகிழ்ந்த தேவகுரு இந்திரனிடஞ் சென்று நடந்தவற்றைக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள் தமது சக்தி வழிபாட்டினை மிகுந்த பக்தியுடன் மேற் கொண்டனர். சில காலஞ் செல்லத் தேவர்களின் இடையறாத பக்தி பூர்வமான வழிபாடு தேவியை மனமிரங்க வைத்தது. தேவி சர்வ அலங்காரங்களுடன் அழகிய தோற்றத்தில் பல்வேறு வகை வண்டினங் கள் மொய்க்கும் வண்ணம் அழகிய மாலைகளையும் அணிந்தபடி தேவர்களிடம் காட்சி தந்தாள். தேவர்களை நோக்கி தேவர்களே நீங்கள் விரும்பும் வரம் யாதெனக் கேட்டாள். தேவர்கள் தேவியைத் தொழுது தம்மை வருத்தும் கொடிய அசுரர்களிடமிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு வேண்டினர். பிரமரங்களான வண்டுகளாற் சூழப்பட்ட பிராமரியம்மன் தனது திருக்கரங்களிலிருந்த பிரமரங்களை (வண்டு களை) யும் எப்பொழுதும் தன்னைச் சூழ்ந்திருக்கும் பிரமரங்களையும் பல்வேறின வண்டுகளாக உருவெடுக்கச் செய்தாள். அந்த வண்டுகளை அருணாசுரன் மீது ஏவிவிட்டாள். அவ்வண்டுகள் மூவுலகிலும் வரிசை யாகப் பறந்து குருவிக் கூட்டங்களைப் போல விண்ணிற் பறந்தன. இதனால் இப்புவியில் இருளாகவே காட்சி தந்தன. எங்கு பார்த்தாலும் வண்டுகளின் கூட்டம் அசுரர்களைத் தேடி அவர்களின் மார்பைத் துளைத்தன. அம்பினால் ஏற்படும் காயத்திலும் மோசமான கொடிய காயத்தை ஏற்படுத்தியதால் போர்க்களத்தில் எவரும் தவறவில்லை. வண்டுகளினால் மார்பு துழைக்கப்பட்ட அசுரர்கள் அனைவரும் மரண ஒலியை மீட்டனர்.

அசுரர் கூட்டம் முற்றாக அழிக்கப்பட்டதும் வண்டினங்கள் யாவும் தேவியிடம் வந்து சரணடைந்தன. அவ்வரிய ஆற்றலைக் கண்ட அமரர் கள் யாவரும் உவகை மேலிட உலக மாதாவான பிராமரியம்மன் மகிமையை வியந்தனர். மகிழ்ச்சியுடனும் பயபக்தியுடனும் தேவியை வழிபட்டுத்தம் நன்றியைத் தெரிவித்தனர். மேலும் தேவலோக அரம்பையின் ஆடல் பாடல்களையும் சிறப்புடன் ஏற்பாடு செய்தனர். தேவர்களின் அணையாத அன்பினால் கட்டுண்ட தேவி அவர்களுக்கு மேலும் வரங்கள் பல தந்து பக்தியை வளரச் செய்து மறைந்தருளி னாள். இப்புதுமையான கருணையுடைய நீதியான வீரச் செயலினால் பிராமரியம்மனின் மகிமையும் பெருமையும் மேலோங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்களின் அகந்தையை அடக்கிய யக்ஷன்

ஆதியில் அசுரர்கள் தமது வலிமையால் பலவித ஆயுதங்களுடனும் தமது மாயையாலும் தேவர்களுடன் பன்னெடுங்காலமாகப் போரிட்டு வந்தனர். அப்போது பராசக்தியின் துணையால் தேவர்கள் வெற்றியடைந்து அசுரர்களை பாதாளலோகத்துக்கு அனுப்பினர். இறுதியில் அமரர்கள் தமது திறமையால் தான் அசுரர்களை வெற்றி கொண்டதாகவும் தமது வலிமையை மெச்சியதுடன் தமது அகந்தையையும் வெளிக்காட்டினர். அப்போது சக்தி தேவி தேவர்களின் அகந்தையை அடக்க சித்தங் கொண்டாள். அவள் பல கோடி சூரியப் பிரகாசத்துடனும் பல கோடி சந்திரர்களின் தண்ணொளியுடனும் ஏக காலத்திற் தோன்றும் கோடி மின்னல்களின் பேரொளியாய் கை கால்கள் முதலிய உறுப்புகள் ஏதுமின்றி மிகப் பேரழகுடன் விளங்கும் யக்ஷ உருவத்தோடு முனிவர்கள் முன் தோன்றினாள்.

அப்போது தேவர்கள் ஆச்சரியமடைந்து இப் பெரிய உருவம் அசுரர்களின் மாயை தானா அல்லது யாரால் தோற்றுவிக்கப்பட்டதோ என அருகிற் சென்று அறிந்து வர முடிவு செய்தனர். அந்த உருவம் ஒளி வடிவமாக இருப்பதால் அக்கினி தேவனை அருகே சென்று அறிந்து வருமாறு இந்திராதி தேவர்கள் அனுப்பினர். அக்கினிதேவன் அதனருகே சென்று நீ யார்? எனக் கேட்டான். அப்போது யக்ஷன் அக்கினியைப் பார்த்து நீ யார்? ஏன் இங்கு வந்தாய்? உனது வலிமை யாதென முதலில் சொல் என்றான். அதனைக் கேட்டதும் அக்கினி தேவன் சகலவற்றையும் சுட்டெரித்துப் பொசுக்கி விடுபவன் என மமதையுடன் கூறினான். அப்போது யக்ஷன் ஒரு துரும்பை எடுத்து அக்கினியின் முன் போட்டு உன் வலிமையால் இதை எரித்துவிடு என்றான். அக்கினிதேவன் பலவாறு முயன்றும் எரிக்க முடியாது வெட்கம் அடைந்தவனாய் தேவர்களை அடைந்தான். தமது முயற்சி கடுமையானது என்று கூறினான்.

உடனே தேவர்கள் வாயு தேவனை யக்ஷனிடஞ் செல்லுமாறு அனுப்பினர். வாயு தேவன் ஆணவத்துடன் யக்ஷனை அணுகி நீ யார்? என்றான். யக்ஷன் வாயுவை நோக்கி முதலில் நீ யார் என்று சொல். உன்னிடம் என்ன வல்லமை இருக்கிறது என்றான். அதற்கு ஆணவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த வாயு தேவன் நான் தான் வாயுதேவன். எதனையும் உறுஞ்சி எடுக்கவும் கூடிய ஆற்றல் என்னிடம் உண்டு. உலகம் இயங்கவும் பேதமடையவும் வைக்கும் எனது தீர செயலினாற்றான் நடக்கிறது என்றான். வாயு தேவனின் ஆணவமான பேச்சைக் கேட்டதும் யக்ஷன் இதோ உன் முன்னுள்ள சிறு துரும்பை ஆட்டி அசைக்கச் செய் பார்க்கலாம். அவ்வாறு செய்யாவிட்டால் உன்னை இவ்விடம் அனுப்பிய இந்திரனிடமே சென்றுவிடு என்றான். உடனே வாயு தேவன் தன்னாலான பல வழிகளையும் பலமாகக் கையாண்டும் துரும்பை அசைக்க முடியவில்லை. இதனால் அவமானமடைந்த வாயு தேவன் இந்திரனிடஞ் சென்றான். இந்திரனிடம் தனக்கேற்பட்ட கர்வ பங்கத்தை கூறினான். தேவர்கள் யாவரும் இந்திரனையே அவ்விடஞ் செல்ல அனுப்பி வைத்தனர். இந்திரன் அவ்விடம் சென்றதும் யக்ஷனைத் துரத்த முயன்றான். ஆனால் பரமாத்வான யக்ஷ ரூபம் ஓடிப் போகாமல் இந்திரனை நோக்கி வந்து திடீரென மறைந்து விட்டது.

இந்திரன் அவமானமடைந்து ஆகா இந்த யஷன் என்னை ஒரு பொருட்டாக மதிக்கவில்லையே, என்னிடம் ஒரு வார்த்தையேனும் பேசாது போய் விட்டானே, என வருந்தினான். தனது இழந்த மானத்துடன் தேவர்கள் முன் செல்ல விரும்பாது அவ்விடத்தில் உயிர் விடுவதே மேல் எனக் கூறி யஷனிடம் சரணடைந்தான். அப்போது இந்திரா நீ மகாபீஜத்தை ஜெபஞ் செய்து வா அதனால் நீ சுகப்படுவாய். என ஒரு வானொலி கேட்டது. அதைக் கேட்ட இந்திரன் பன்னெடுங்காலம் ஆகாரம் ஏதுமின்றி கண் மூடியவாறு மகாபீஜத்தை ஜெபித்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு சித்திரை மாதம் நவமி திதி நடுப்பகலில் யக்ஷன் நின்றிருந்த இடத்தில் பேரொளி தோன்றியது. அவ்வொளி நடுவில் குமாரியாகவும் அப்போதே தோன்றிய இளம் பெண்ணாகவும் சூரியன் போன்ற பிரகாசத்துடன் உமா தேவி தோன்றினாள். தேவியின் தலையலங்காரமும் தலையிற் சூடிய இளம் பிறையும் இரு கைகளில் பாசமும் அங்குசமும் துலங்க மற்றிரு கைகள் அபய வரத முத்திரைகளை பதித்தவாறு சிவந்த ஆடைகளும் செஞ் சந்தனம் பூசிய செழுமையும் கருணையே உருவாக்க் காட்சியளித் தாள். அற்புதமான தோற்றத்துடன் தேவியின் உருவப் பொலிவும் சாயலும் யாவரையும் கவரக் கூடியவாறு அமைந்ததால் இதனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுற்றதும் தேவியின் மீதுள்ள பக்தி மேலீட்டினால் உள்ளமுருகி கண்ணீர் மல்க இந்திரன் தேவியைத் துதித்து வழிபட்டான். மேலும் தனது தூய சிந்தனைகளுடன் தேவியை நோக்கியவாறு ஜெகதாம்பிகையே இதற்கு முன் தோன்றிய யஷன் எங்கிருந்து வந்தான். என்பதை விபரமாகச் சொல்ல வேண்டுமெனப் பணிந்தான். இந்திரனின் வேண்டுதலுக்காகத் தேவி பின் வருமாறு கூறினாள். தேவேந்திரா அந்த யக்ஷன் காரணத்துக்கு காரணமான என் உருவமேயாகும். அது கோஷ சகிதமாகவும் சர்வ சாட்சியாகவும் மாயாதிஸ்ட தனமாகவும் விளங்கும் பிரம்ம சொரூபமாகும். சகல வேதங்களும் அதனுடைய திருவடிகளை பூசிக்கின்றனவோ தவங்கள் யாவும் எதனைச் சொல்கின்றனவோ அதை இனிச் சொல்கிறேன் கேள் ஓம் என்னும் ஓரெழுத்து மந்திரம் பிரம்மமாகும் அதையே ஹ்ரீம் சொரூபமாகவும் சொல்லுவர். இவ்விரு பீய மந்திரங்களும் எனக்குப் பிடித்தவையாகும். இந்த மந்திரங்களை நானே படைக்கிறேன்.

பிரளய கால முடிவில் யாவும் இயங்குவதன் பேரில் பிரம்மா விஷ்ணு உருத்திரர் யாவரையும் தோன்றச் செய்து அவர்களுக்கு உதவியாக என் அம்சத்திலிருந்து மூன்று சக்திகளை உருவாக்கி யாவையும் சக்தியால் இயங்க வைத்துள்ளேன். இச் செயல்களின் வடிவமாகவே மூவுலகையும் தேவர்கள் அசுரர்கள் மானிடர் என்றும் குலங்கள் தோன்றின. முத்திறந்தாருக்கும் சிந்தித்துச் செயலாற்றும் திறனையும் வழங்கியுள்ளேன். அசுரர் குலத்தவர் தாம் மேலான வர்களாக வருவதன் பேரில் தேவர்களுடன் போர் புரிகின்றனர். அவர்களிடம் நீதி குன்றிக் காணப்படுமிடத்து தேவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கிறேன். எனது உதவியுடன் வென்ற தேவர்கள் தமது திறமையால் மட்டும் அசுரர்களை வெல்ல முடிந்தது என்று அகந்தை கொள்ளுமிடத்து உங்கள் மமதையை நீக்கவே எனது மறைமுகமான யஷன் என்னும் உருவம் தோன்றியது. இப்போது உங்கள் கர்வம் நீங்கிவிட்டது. உங்கள் மமதையை விட்டு என்னைச் சரணடைவீர்களாக. என்று தேவி கூறியதும் இந்திராதி தேவர்கள் பக்தி சிரத்தையுடன் தேவியை பூசித்து வழிபட்டனர். தேவியும் மறைந்தருளினாள். தேவியின் அருள் வாக்கினால் தமது கர்வம் நீங்கி சிறப்பான வழிபாடுகள் செய்து இன்புற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராமணர்களின் பொறாமையும் கௌதம முனிவரின் சாபமும்

முன்னொரு காலத்தில் ஜீவன்களின் கர்ம வினைப் பயனாக பன்னிரண்டு ஆண்டுகளாக இந்திரன் மழை பெய்விக்காதிருந்தான். மனிதர்கள் விலங்குகள் உட்பட சகல உயிரினங்களும் கடும் பஞ்சத் தால் வருந்தின. மனிதர்கள் விலங்குகளைக் கொன்று தின்று பசியாறினர். பெண்கள் தமது பிள்ளைகளைக் கொன்று தின்றும் கணவன்மார், மனைவிமாரையே கொன்று தின்னவும் கூடிய பெரிய பசிப்பிணியும் கொடுஞ் செயல்களும் அதிகரித்தன. இந்த நிலையில் அந்தணர்கள் ஒன்று கூடிக் கௌதமரிடஞ் சென்றனர்.

பிராமணர்களை அன்புடன் வரவேற்று உபசரித்த கௌதம முனிவர் அவர்களைத் தன்னிடம் அழைத்து வந்த காரணம் யாதெனக் கேட்டார். அவர்கள் தமது துயரங்களையும் கூறித் தமக்கு அடைக்கலம் தருமாறு வேண்டினர். அப்போது முனிவர் அந்தணர்களே நீங்கள் தபோதனர்கள் உங்கள் தரிசனத்தினாலேயே தீய ஒழுக்கங்களும் நல்லொழுக்கமாக மாறியுள்ளது. உங்கள் வரவால் இவ் ஆச்சிரமம் புனிதமடைந்துள்ளது. நீங்கள் யாவரும் சக்தி ஜெபஞ் செய்து சுகமாக வாழுங்கள் என்று கூறி விட்டுத் தாமும் மிகுந்த பக்தி சிரத்தையுடன் காயத்திரியைத் தியானித்தார். பிராமணர்களுக்கு வேண்டியவற்றை தந்தருளுமாறு தேவியை வேண்டினார். அனைவரும் ஒன்று கூடிய பக்தியான வழிபாட்டை மெச்சிய காயத்திரி தேவி காட்சி தந்தாள். அவள் அனைவரையும் காக்கவல்ல சர்வபோஷன பாத்திரமொன்றை கௌதம முனிவரிடம் கொடுத்து கௌதமரே! நீர் எதையெல்லாம் விரும்புகிறாயோ அதையெல்லாம் இந்தப் பாத்திரம் தரவல்லது. நீ இதை வைத்துக் கொள் என்று கூறி மறைந்தருளினாள்.

பின்பு அந்தப் பாத்திரத்தில் மலை போன்ற அன்ன வகைக் குவியல்களும் அறுசுவை உணவுப் பண்டங்களும் அதி சிறந்த பட்டாடைகளும் மற்றும் அனைத்து வகையான அத்தியாவசியப் பொருட்களும் நிறைவாக உண்டாயின. முனிவர் அவற்றைக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வுடன் ஏற்று அனைத்துப் பிராமணர்களுக்கும் வாரி வழங்கினார். மேலும் அப் பாத்திரத்திலிருந்து பசு, எருமை, ஆடு முதலியவற்றையும் அவைகளுக்கு வேண்டிய புல் வகைகளையும் யாகத்துக்கு வேண்டிய சகல பொருட்களையும் தோன்றச் செய்து வழங்கினார். பிராமணர் களும் அவற்றை ஏற்று மகிழ்ச்சியுடன் யாகங்கள் பல செய்தனர். இதனால் பிராமணர்களும் பிராமணப் பெண்களும் சிறந்த ஆடை அணிகள் சந்தனம் முதலான வாசனைத் திரவியங்களை தரித்த வண்ணம் தேவலோகப் பெண்களைப் போல குதூகலத்துடன் வாழ்ந்தனர். கௌதம முனிவரின் ஆச்சிரமச் சூழல் சுவர்க்க லோகம் போலக் காட்சியளித்தது. இச் செய்தியை தேவர்களும் கேட்டறிந்தனர். இந்திரன் தனது அரச சபையில் மனிதர்கள் மரணமடையும் இக் கொடிய பஞ்ச காலத்தில் அவிசு முதலியவை உண்டாகாதவாறு வறுமை ஏற்பட்ட போதும் அங்கு அக் கருமங்கள் யாவும் நடைபெற வேண்டிய யாவற்றையும் கௌதம முனிவர் வழங்கினார் இப் பன்னிரு வருட காலமும் கௌதமர் முனிவர்களுக்கும் அந்தணர்களுக்கும் இங்குள்ள கற்பகதரு போல வழங்குகிறார். எல்லா முனிவர்களும் காயத்திரி மந்திரம் ஓதவும் யாகங்களைச் செய்ய வேண்டியவற்றை எதுவித கர்வமுமின்றி வழங்குகிறார் என்று கூறிய இந்திரன் பெரு வியப்படைந்தான்.

அவர்கள் யாவரும் முறைப்படி காயத்திரி தேவியைப் பூசித்து வரும் போது ஒரு நாள் நாரதர் தமது மகதியாழை மீட்டுக் காயத்திரி தேவியின் பரம குணங்களை பரவசத்தோடு பாடிய வண்ணம் முனிவர்களிடையே வந்தமர்ந்தார். அவரைக் கௌதமரும் ஏனைய முனிவர்களும் வணங்கி உபசரித்தனர். நாரதர் வந்தமர்ந்ததும் தமக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் கௌதமர் ஏற்படுத்தித் தருவதாக ஏனைய முனிவர்கள் கூறி அவரின் சேவையைப் புகழ்ந்தனர். அப்போது நாரத முனிவர் கௌதமரை நோக்கிப் பிரம்மரிஷியே இந்திரன் தமது தேவசபையில் நீர் ரிஷிகளைப் போசிக்கும் புகழை எடுத்துரைத்தார். உம்மை நேரிற் கண்டு செல்லவே இங்கு வந்தேன் என்றார். மேலும் அம்பிகை அருளாலேயே அவளை வழிபட்டு யாவரையும் மகிழ்விக்கும் பேறுகிடைத்தது, எனக் கூறி விட்டு காயத்திரி தேவியை வணங்கிய வண்ணம் தேவலோகஞ் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதமுனிவர் வந்து கௌதமரின் பெரும் புகழை மெச்சியதால் பொறாமை கொண்ட முனிவர்களும் அந்தணர்களும் கௌதமரின் புகழுக்கு கேடு விளைவிக்க முன்வந்தனர். அச் சமயம் பூவுலகெங்கும் நல்ல மழை பொழிந்து தேசங்கள் யாவும் செழித்தோங்கியது. மேலும் பொறாமை கொண்ட பிராமணர்கள் கௌதமரைச் சபிப்பதன் பேரில் மிக முதியதும் எந்த நிலையிலும் இறக்கும் நிலையிலுள்ள ஒரு பசுவைக் கௌதமரின் யாகசாலையூடாக ஓடும் வண்ணம் துரத்தி விட்டனர். தமது யாகத்தில் குறுக்கே வந்த பசுவை கௌதமர் ஹஹூம் ஹஹூம் என்ற சத்தத்தால் தடுத்தார் அதைக் கேட்டுப் பயந்த பசு அவ்விடத்திலேயே இறந்தது. அச்சமயம் பிராமண முனிவர்கள் துஷ்டரான கௌதமரால் பசு கொல்லப்பட்டது, எனக்கூறி கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். கௌதமர் தமது யாகத்தை பூர்த்தி செய்து விட்டு பசுவின் சம்பவத்தையிட்டுத் தியானித்தார். அவரது ஞான நோக்கில் பிராமணர்களின் செயல் தென்பட்டது. அப்போது கௌதமர் கடுஞ்சினங் கொண்டு "ஓ பிராமண அதமர்களே" நீங்கள் இனிமேல் வேதாகமங்களை காயத்திரி ஜெபத்திலும் தியானத்திலும் பராமுகராகி விடக்கடவீர்கள். மேலும் வேகத்தில் கூறும் யாகங்கள் ஈஸ்வரங்கள் சம்பந்தமான சாத்திரங்களிலும் மந்திரங்களிலும் மூலப் பிரகிருதி யிடத்தும் ஸ்ரீ தேவியிடத்தும் பற்றற்றவர்களாவீர்களாக. தேவி வழிபாடு, தேவி மந்திரம், தேவி உபாசனை மற்றும் நித்திய கருமங்கள் பிதிர்சிரார்த்தம் போன்ற சகல வழிகளிலும் பாராமுகமடைவீர்கள் மேலும் ஆசாரம் பேணாது தாய் சகோதரி உறவினரையும் தாரமாக்கும் தீய வழியிலும் பஞ்சமா பாதகங்களிலும் உங்கள் சிந்தனையைச் செலுத்தி நரகப் பாதையில் செல்லக் கடவீர்கள் உங்கள் சந்ததியில் உதிக்கும் அனைவரும் உங்கள் நரகப்பாதையிற் சென்று உங்கள் சாபத்தை அவர்களும் அடைவர். உங்கள் வீடுகள் யாவையும் இருளடைந்து போகட்டும். மகேஸ்வரி உங்களைக் கோபிக்கட்டும் எனப் பலவாறு பேசிச் சாபமிட்டார்.

பின்னர் கௌதமர் காயத்திரி தேவியின் பூசையிற் கலந்து வழிபட்டார். அப்போது காயத்திரி தேவி கௌதமரை நோக்கி பிராமணர்களின் தீய செயலைக் கண்டு புன்னகை செய்து நீ பாம்பிற்குக் கொடுத்த பால் எப்படி விஷமாகிறதோ அதேபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணர்களுக்கு செய்த நன்றியும் நஞ்சானது. கௌதமா! நீ சினந் தணிந்து சாந்தியடைவாயாக என்றாள். கௌதமரும் தேவியை வணங்கி தமது ஆச்சிரமத்தை அடைந்தார். கௌதமரின் சாபத்தினால் தமக்கு யாவும் மறைந்தும் பல தீமைகளும் ஏற்பட்டும் தமது துயர் நிலையை உணர்ந்தனர். தமக்கு ஏற்பட்ட சாபத்துக்கு விமோசனம் பெறவும் தமது வெட்கத்தால் கூசியும் கௌதமரிடம் வந்து சாஸ்டாங்கமாக விழுந்து வணங்கி தமக்கு கருணை காட்டுமாறு வேண்டினர். அவர்கள் யாவரும் கௌதமரை நாற்புறமும் சூழ்ந்து தமது பிழையை மன்னிக்குமாறு வேண்டினர். அப்போது கௌதமர் எனது சொல் ஒருபோதும் பொய்யாகாது நீங்கள் கிருஷ்ணாவதாரம் வரையில் நரகில் கிடப்பீர்கள் கலியுகத்தில் உங்களுக்கு பிறவி உண்டாகும். நீங்கள் சாப விமோசனத்தை விரும்பி காயத்திரி தேவியை வழிபடுவீர்கள் என்று சொல்லியனுப்பினார் கௌதமரும் இது பிரார்த்தம் என்று கூறி விட்டுச் சினம் தவிர்த்து மனச் சாந்தியடைந்தார்.

## சக்திகள்

ஆதிபராசக்தியே தனது வல்லமையால் ஒவ்வொரு பிரளய காலத்தின் முடிவிலும் அண்டமெல்லாம் இயங்கும் வண்ணம் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் நிறைவேற்று வதன் பேரில் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகிய மும் மூர்த்திகளையும் தாமே படைத்து முத்தொழிலையும் ஆரம்பிக்க வைத்தாள். இத்தொழில்கள் சிறப்புடன் நடைபெறுவதற்காகத் தனது அம்சமான சரஸ்வதி, இலட்சுமி, துர்க்கா ஆகிய முச்சக்திகளையும் தோற்றுவித்து இம் மூவருடனும் இணைத்து அவரவர் தொழிலை இயங்க வைத்தாள். யாவும் சிறப்புடன் செயற்படுகின்றன.

முச்சக்திகளுடன் மந்திர, தந்திர, சாத்திரங்கள் ஆகியவற்றின் தாயான சாவித்திரிதேவியையும், அகிலலோக புராணங்களுக்கும் ஆதி சக்தியாக விளங்கும் ராதாதேவியையும் சேர்த்தாற்போல பஞ்சசக்திகள் என அழைக்கப்படுகின்றனர். இவ்விதமான பஞ்ச சக்தி களும் பிரதான பணிகளின் சக்தியாக யாவற்றையும் இயக்கினாள். மேலும் பல பணிகளை இயக்குவதன் பேரில் பராசக்தியானவள் அவ்வப்போது பல சக்திகளைத் தோற்றுவித்து உலக நன்மையை மேலோங்கச் செய்தாள். எல்லாவற்றுக்கும் மேலாக பூமாதேவி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதாதேவி, சுரபி, மனஸாதேவி, சஸ்டிதேவி, காளிகாதேவி, ராதிகாதேவி, ஸ்வாகாதேவி, தஷிணாதேவி, சம்பத்துதேவி போன்ற பல சக்திகளை உருவாக்கினாள். இச்சக்திகள் யாவும் மகாசக்தியான ஆதிபராசக்தியின் அம்சமாகவே தோன்றின. தம் பணிச்சிறப்பினால் யாவராலும் போற்றித்துதிக்கப்படுகின்றனர். இவற்றுட் சில சக்திகள் சிறப்பை அறிவோம்

## சஷ்டிதேவி

இச்சக்தியானவள் பிரகிருதிதேவியின் ஆறாவது அம்சமாகத் தோன்றியதால் சஷ்டிதேவி என அழைக்கப்படுகிறாள். இவள் குழந்தைகளுக்கு அதிஷ்டமான தேவதையாக அமைந்தவள். மகப் பேற்றினையும், குழந்தைகளின் நீடிய ஆயுட் பலத்தினையும் வேண்டியவாறு தந்து காப்பவள் மனுவின் வம்சத்தவனான பிரிய வரதன் என்பவன் சிறந்த செங்கோல் மன்னன். இவன் மகப்பேறின்மை யால் புத்திரகாமேஷ்டி யாகத்தைச் சிறப்பாகச் செய்தபோது இவனுக்கு உரிய காலத்தில் ஒரு மகன் பிறந்தான். அப்பிள்ளை கண் திறந்தபடியே இறந்து காணப்பட்டது. அப்பிள்ளையைக் கண்டதும் பிரியவரதன் எடுத்து மார்போடணைத்தவாறு கதறிக்கொண்டு மயானம் நோக்கிச் சென்றான். அங்கு கதறியபடி தன் உயிரையும் துறக்க முற்பட்டான். அச்சமயம் விண்வெளியில் ஒரு அழகிய விமானம் தோன்றியது. அவ் விமானத்தில் பூரண அழகும், இளமையும், கருணை பொழியும் திருமுகமும், அருட்பார்வையால் எவரையும் வசீகரிக்கும் அழகிய கண்களையுமுடைய ஒரு பெண் தோன்றினாள். அப்பெண்ணைக் கண்டதும் பிரியவரதன் அவளைத் துதித்த வண்ணம் குழந்தையின் உடலைக் கிடத்திவிட்டுத் தேவியை நோக்கி "நீ யார் எனப் பல்வேறு கேள்விகளைக் கேட்டான். தேவி அவனுக்கு அண்மையில் வந்து அவனை நோக்கி மன்னவனே! முன்னொரு சமயம் தேவ அசுரர் போரில் தளபதியாக இருந்த தேவசேனை என்பது என் பெயராகும். பிரம்மாவின் புத்திரி. முருகப் பெருமானின் பிரதான நாயகியுமாவேன். மகப்பேறற்றவர்களுக்கு மழலைச் செல்வங்களையும், நாயகிகள் இல்லாதவர்களுக்கு பத்தினிகளையும், ஏழைகளுக்குச் செல்வத்தை யும் நானே வழங்கி வருகிறேன். இப்புவியில் யாவருக்கும் அவரவர் வினைக்கேற்பவே யாவும் வழங்குவது நியதியாகும் என்று கூறிய பின் அப்பிள்ளையை எடுத்து விளையாடுவது போல உயிரூட்டினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியவரதன் தேவியைத் துதித்தான். அவனின் வழிபாட்டில் மகிழ்ந்த தேவி அப்பிள்ளைக்கு வேதத்திற் குறிப்பிட்ட கர்மயோகத்தை உபதேசித்தாள். அரசனே! நீ சுயாம்புவ மனுவின் குமாரனாகையால் மூவுலகிலும் புகழ் பெற்று விளங்குகிறாய். நீ என்னை வழிபட்டு என் பூசையை அனைவரும் செய்யும்படி செய்து நீயும் தவறாது பூசை களைச் செய்து வருவாயாகின் உன் புத்திரனைத் தருகிறேன். உன் பாலகன் நல்ல ஞானசீலனாகவும், பூர்வ புண்ணியங்களை உணர்ந்தவ னாகவும், சிறந்த வீரனாகவும், முனிவர்களுக்குச் சக்தியை வழங்கு பவனாகவும், நற்கல்வி, நற்பொருட் செல்வங்களுடனும் மிகுந்து, யாவராலும் போற்றிப் புகழப்பட்டுச் சிறப்புடன் விளங்குவான் என்று கூறி வரந்தந்தாள். பிரியவரதனும் தான் சிறப்பாகத்தேவியை வழிபடுவ தாக உறுதியளித்தான். தேவியும் மறைந்தருளினாள்.

## மங்களசண்டிகாதேவி

சர்வமங்களதேவியான சண்டிகாதேவியானவள் மிகச்சாதுரிய மும், மிகுந்த கோபமும், வேண்டுவோரின் திருமணத்தை நிறைவேற் றும் அருட் சக்தியும் கொண்டவள். மனுவின் மரபில் உதித்த மங்களன் என்பவன் ஏழு துவீபங்களையும் நீதி தவறாது அரசாண்டு வந்தான். இவன் சண்டிகாதேவியைப் புகழ்ந்து பாடி வழிபட்டு வந்தான். இவனுக்குச் சகல மங்கலகரமான காரியங்களையும் தேவி அளித்து வந்தாள். இதனால் இத்தேவியை மங்களசண்டிகாதேவி என அழைத்து வந்தனர். இவள் கருணை கொண்டு அவர்களுக்கு வேண்டிய திருவருளை வழங்குவதுடன் பெண்களின் அதிதேவதையாகவும் விளங்கினாள். திரிபுரசங்கார காலத்தில் தேவர்கள் தமக்கு வெற்றி யுண்டாகும் வண்ணம் சகல திரவியங்களையும் வாரி இறைத்து இவளைப் பூசித்து வந்தனர். இதனால் மனமிரங்கிய சண்டிகாதேவி தேவர்கள் முன் தோன்றினாள். அவள் தேவர்களை நோக்கி தேவர் களே நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. உருத்திரமூர்த்தி திரிபுரங்களையும் எரித்து வெற்றியை நிலைநாட்டுவார் என்று கூறி மறைந்தருளினாள்.

உருத்திரமூர்த்தியால் திரிபுரங்கள் எரியூட்டப்பட்டதும் தமது எண்ணம் தேவியால் நிறைவேற்றப்பட்ட மகிழ்ச்சியினால் அவளைப் போற்றினர். இத்தேவியால் நிறைவேற்றப்பட்ட மகிழ்ச்சியினால் அவளைப் போற்றினர். இத்தேவிக்குப் பிரியமான அதிரசங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு அன்ன பதார்த்தங்களையும், பல்லினப் பழவகைகளையும் உள்ளன்போடு படைத்துச் சிறப்பான பூசை வழிபாடுகள் செய்தனர். தேவிக்குரிய பிரதான மந்திரங்களை ஓதியும் சிறப்பான ஆடல் பாடல் களுடன் தோத்திரங்கள் பாடியும் ஏற்றிப் போற்றி வழிபட்டனர். *இவ்வாறு சிறப்பான வழிபாடுகளை எவர் செய்தாலும் வேண்டிய* வற்றை வாரி வழங்கி மங்களசண்டிகாதேவி சகல மங்களமுண்டாக்கு வாள். மங்களத்துடன் வீரத்தையும் வழங்கும் இவள் தனது அருட் சக்தியால் யாவராலும் நன்கு போற்றப்படுகிறாள்.

## மனஸாதேவி

காசிப முனிவரின் மனத்தால் தோற்றுவிக்கப்பட்டதாலும், பரமாத்மாவையே தனது மனதால் தியானிப்பதாலும் இச் சக்தியான வள் மனஸாதேவி என அழைக்கப்படுகிறாள். மூன்று யுகங்களாகத் தன்னை ஒருநிலைப்படுத்தி நீண்ட தவக்கோலத்தில் கட்டை போலிருந்து நிட்டையைக் கடைப்பிடித்த இவளைப் பரமாத்மா விஸ்வ பூஜிதா என அழைத்தார். யாவரும் இவளை வழிபட்டு வருவதுடன் பரமாத்மாவே பாராட்டியதால் சர்வபூஜிதஜகத்கௌரி என்னும் பெயரையும் பெற்றாள். சிவப்பிரியை ஆனதால் சைவை என்றும், விஷ்ணுப் பிரியை ஆனதால் வைஸ்ணவி என்றும், பரிஷித்து மன்னன் நடாத்திய யாகத்தில் பாம்புகளைக் காப்பாற்றியதால் நாகேஸ்வரி என்றும், விஷத்தைப் போக்கும் சக்தியானதால் விஷஹரி என்றும், ஈஸ்வரியிடம் சித்தயோகத்தை அடைந்ததால் சித்தயோகினி என்றும் அழைக்கப்படும் பேறு பெற்றாள்.

இத்தேவியை ஞானவடிவமாகவும், யோக வடிவமாகவும், மிருக சஞ்சீவியினியாகவும், மகாஞானமுடையவளாகவும் அறிஞர்கள் போற்றுகின்றனர். இவளின் பல தோற்றங்களுக்குமுரிய திரு நாமங்களை பயபக்தியுடன் ஓதி வழிபட்டால் அவரவர் துயர் நீங்கி, வேண்டியவற்றை வரமாகவே பெற்று சக்தியால் அருள் பாலிக்கப் படுவர். இவள் மூன்று யுகங்கள் தவமிருந்து பெற்ற வரத்தினால் என்றும் இளமைத் தோற்றத்துடனும், பிள்ளைகளை அரவணைக்கும் தாயுள்ளத்துடனும் காட்சி தருகிறாள். இவளை உருத்திரர் காசிப முனிவர் ஆகியோர் ஆதரிக்கவும், முனிவர்கள், மனிதர்கள் வழிபடவும் செய்தனர். ஜகத்காரு முனிவர் நீண்ட காலம் தவஞ் செய்து இவளை பத்தினியாக அடைந்தவர். ஒரு சமயம் தவமிருந்த களைப்பினால் ஜகத்காரு முனிவர் இவளின் மடி மீது தலைவைத்து உறங்கிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர்களின் வழமைப்படி சூரியன் மறையும் நேரம் சந்தியா வந்தனஞ் செய்வது கடமை. தவறின் பிரம்மஹத்திதோஷம் கிடைக்குமே என அஞ்சினாள். உறக்கத்திலிருப்பவரை எழுப்புவதும் மகாபாபமாகும் என்பதை அறிந்தபோதும் தனது கணவன் சந்தியா வந்தனஞ் செய்யாது விடில் ஏற்படும் பிரம்மஹத்திதோஷம் பீடிக்காதிருப்பதற்காகக் கணவனை எழுப்பினாள். துயில் கொண்டெழுந்த முனிவர் சினங்கொண்டார்.

தனது மனைவிக்குத் தனது நித்திரைக்குப் பங்கம் ஏற்படுத்தியதால் ஏற்படும் தீமைகளை அடங்காக் கோபத்துடன் எடுத்துரைத்தார். அப்போது மனஸாதேவி கணவனின் கால்களில் விழுந்து கண்ணீர் மல்கத் தன்னை மன்னிக்குமாறு வேண்டினாள். அவளின் அடாத செயலுக்காக அவளை சபிக்க முற்பட்டார். அப்போது சூரியபகவானும், சந்தியாதேவியும் முனிவர் முன் தோன்றினர். முனிவரை நோக்கி அந்தணரே! உமது குல ஆசாரப்படி சாந்தமாக இருக்க வேண்டும். உரிய நேரத்தில் உரிய பூசை வழிபாடுகளைத் தவறாது செய்ய வேண்டும் என்பதனாலேதான் அவள் உமது நியதியை ஞாபகமூட்டினாள். அத்துடன் நியதிகளின் பல தத்துவங்களையும் எடுத்தியம்பினர். அதனால் மனஞ் சாந்தியடைந்த முனிவர் அழுதுகொண்டிருந்த தன் மனைவியை எடுத்துக் கட்டி அரவணைத்தார். தனது தவறுகளுக்காகக் கண்மாரி பொழிந்தார்.

அதேசமயம் மனஸாதேவி தன்குருவான ஜம்புநாதரையும் இஷ்ட தெய்வங்களான பிரம்மா, விஷ்ணு, காசிப முனிவரையும் சிந்தித்தாள். யாவரும் அவ்விடத்திற் தோன்றினர். யாவரும் வாதிட்டபின் ஜகத்காரு முனிவரை நோக்கினர். அவர் மனைவியை விட்டுப் பிரிந்து துறவுக்காக் காடேக இருந்தார். இல்லறம் பூண்டவர்கள் தமக்கெனச் சந்தானம் நிலைபெறச் செய்யாது துறவு மேற்கொள்வது அறச் செயலாகாது என்ற உலக நீதியை எடுத்துக் கூறினர். அதைக் கேட்டதும் ஜகத்காரு முனிவர் மந்திரபூர்வமாகத் தன் மனைவியின் நாபியைத் தொட்டு மனஸாதேவியே! இந்தக் கர்ப்பத்தால் உனக்கு மகப்பேறு கிடைக்கும். அவ்வாறு பிறக்கும் புதல்வன் சிறந்த பண்பாளனாகவும், அந்தணர்களில் உத்தமனாகவும் வேதங்களை உணர்ந்தவனாகவும், யாவற்றிலும் சிறந்து விளங்குவான் என்று கூறினார். அப்போது மனஸாதேவி அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினாள். வாடிய மனைவியைத் தூக்கி அரவணைத்த பின் துறவு பூண்டு தவஞ் செய்யப் போவதாகக் கூறி விடைபெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனஸாதேவி தன் கணவன் துறவறஞ் சென்றதும் குருவின் சிந்தனையுடன் இறைபக்தி மேலிட பார்வதி பரமேஸ்வரனிடஞ் சென்றாள். பார்வதிதேவி அவளை அன்புடன் அரவணைத்து மனச் சாந்தியை ஏற்படுத்த பரமேஸ்வரன் நல்லுபதேசஞ் செய்தார். இதனால் மனஸாதேவி கவலைகள் நீங்கவும் எதிர்கால நன்மை கருதி மகிழ் வுடன் வாழ சிவசக்தி உதவினர். சிறிது காலஞ் செல்ல மனஸாதேவி ஒரு சற்புத்திரனைப் பெற்றெடுத்தாள். அச்சிறுவன் தாயின் கருவறை யில் குடியிருந்தபோது சிவசக்தியினரின் நல்லுபதேசங்களை நன்கு உணர்ந்தான். அவனின் ஞான உணர்வை அறிந்த சிவபிரானால் "ஆஸ்திகன்" என அழைக்கப்பட்டான். ஆஸ்திகன் தன் நுண்ணறி வினால் வேதங்கள் யாவற்றையும் நன்கு கற்று ஞானிகளும் யோகி களும் போற்றும் சிறந்த ஞானியாகத் திகழ்ந்தான். சிவபிரான் அவனுக்கு நான்கு வேதங்களையும் கற்பித்தார். பின்னர் ஆஸ்திகன் உருத்திரமூர்த்தியிடம் உபதேசம் பெற்று அவரின் அனுமதியுடன் தவஞ் செய்யப் புறப்பட்டான். புஸ்கரஞ் சென்று மூன்று வருட காலம் தவஞ் செய்த பின் உருத்திரமூர்த்தியிடம் ஆசீர்வாதம் பெற்றான். சிறிது காலஞ் செல்லத் தாயார் மனஸாதேவியுடன் காசிப முனிவரிடஞ் சென்றனர். காசிப முனிவர் இவர்களை வரவேற்று உபசரித்து அந்தணர் களுக்குத் தானங்களை வழங்கி மகிழ்ந்தார்.

ஆஸ்திகனின் அழகையும் சிறப்பையும் கண்ட அதிதியும் திதியும் உட்பட அநேக பெண்கள் வியந்தனர். இச்சமகாலத்தில் பரிஷித்து மன்னன் பாம்பினால் கடியுண்டு இறந்ததால் வேதனையடைந்த அவனின் மகன் ஜனமேஜயன் தன் தந்தைக்காக ஒரு சர்ப்பயாகத்தை நடாத்தினான். எல்லாப் பாம்புகளும் யாகத்தில் வீழ்ந்து மடிந்தன. பரிஷித்து மன்னனைக் கடித்த தக்ஷன் என்னும் பாம்பு இந்திரனிடம் சென்று தஞ்சமடைந்தது. இதனால் வெறுப்புற்ற அந்தணர்கள் இந்திராதி தேவர்களையும் தக்ஷன் என்ற பாம்பையும் கொல்வதற்காகச் சென்றனர். இதனை அறிந்த இந்திராதிதேவர்கள் யாவரும் மனஸாதேவியிடம் சென்று தம்மைக் காக்குமாறு வேண்டினர். மனஸாதேவி தன் மகன் ஆஸ்திகனிடம் செல்லுமாறு அனுப்பினாள். யாவரும் பயந்து நடுங்கிய நிலையில் வந்ததைக் கண்ட ஆஸ்திகன் மனமிரங்கி யாகசாலைக்குச் சென்றான். யாகஞ் செய்துகொண்டிருந்த அந்தணர்களுக்கு வேண்டிய வரங்களையும் தந்து யாகத்தையும் நிறை வடையச் செய்தான். அந்தணர்களுக்கான தட்சிணைகளையும் தந்து யாவரையும் அனுப்பி வைத்தான். இந்திராதி தேவர்கள் மனஸா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவியை வணங்கிப் பூசித்தனர். இந்திராதிதேவர்கள் மட்டுமன்றி யாவரும் அன்புடனும் பயபக்தியுடனும் போற்றிப் புகழும் பதிவிரதை யான மனஸாதேவி காசிப முனிவர், சிவபிரான் ஆகியோரால் போற்றப்பட்ட சிறப்புடைய சக்திதேவியாவாள்.

## சுரபி (தெய்வீகப் பசு)

முன்னொரு காலத்தில் கோபியர்கள் புடைசூழ பிருந்தாவனத் தில் கிருஷ்ணர் ராதையுடன் விளையாடிக்கொண்டிருந்தார். அச்சமயம் கிருஷ்ணருக்குப் பசும்பால் குடிக்கும் ஆவல் ஏற்பட்டது. உடனே சுரபி என்னும் கோமாதாவையும் மனோரதம் என்னும் கன்றையும் சுரபியின் மடிததும்பிய வண்ணம் தன்னருகே தோற்றுவித்தார். அமுதத்திலும் சுவை மிக்க பாலை சுரபியின் மடியிலிருந்து ராதை ஒரு புதிய பாத்திரத்திற் கறந்தெடுத்தாள். அந்தப் பாலைக் கிருஷ்ணர் பருகும்போது பாத்திரம் உடைந்து நூறு யோசனை தூரம் சென்று ஒரு பாற்குளமாக நிறைந்தது. அந்தக் குளம் கோபியர்களும் ராதையும் விளையாடும் குளமாக அமைந்து எந்நேரமும் நிறைந்து காணப் பட்டது.

ஒரு சமயம் அச்சுரபியான காமதேனுவின் உரோமங்களி லிருந்து கோடானுகோடி கோபாலர்களும் கோடானுகோடி தெய்வீகப் பசுக்களும் தோன்றின. பசுக்களின் இனப்பெருக்கம் நன்கு விருத்தி யடைந்தது. இதனால் காமதேனுவின் பெருமையும் பூசை வழிபாடும் பாரெங்கும் பரவின. இதே நோக்கில் கோபூசை பிரபலமடைந்தது. மகாலட்சுமியின் சொரூபமாகவும், ராதையின் சசியாகவும், அதிஷ்ட தேவதையாகவும், பசுவினத்தின் தலைவியாகவும், தாயாகவும், பரிசுத்தமான உணவையே உண்பவளாகவும், துன்பங்களை நீக்குப வளாகவும் அமைந்த சுரபி தேவியைப் பூசிக்கிறேன் என்று பசுவின் தலை மீது நீர்விட்டு அலங்கரித்து மாலையில் தூபதீபம் காண்பித்து வழிபட்டால் நற்பேறடையலாம்.

முன்னொரு காலத்தில் விஷ்ணுவின் மாயையினால் காமதேனு பாலை மறைத்துக்கொண்டது. இதனால் தேவர்கள் வருந்தினர். பிரம்மாவின் ஆலோசனைப்படி இந்திரன் கோமாதாவைப் பூசித்து வழிபட்டான். மகிழ்வடைந்த சுரபி வேண்டியளவு பாலைச் சுரந்தாள். பாலிலிருந்து தயிர், நெய் முதலியனவும் பெருகியது. இதனால் தேவர் களும் நன்மையடைந்தனர். தெய்வீகப் பசுவின் பால், தயிர், நெய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியன இறைவனின் அபிஷேகம் யாகங்களுக்குத் திரவியமாக ஏற்கப்படுகிறது. மனிதர் மற்றும் மிருகங்களான சகல பாலூட்டிகளுக்கும் இல்லாத சிறப்பு இப்பசுக்களுக்கு கிடைத்த பேறாகும். பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகியவை பஞ்ச கௌவியம் என சிறப்புடன் இறையர்ப்பணமாக ஏற்கப்படுகிறது. மூவுலகிலும் பசுவின் பால் மற்றும் பாற்பொருட்கள் யாவும் சிறந்த பொருளாகவே கருதப்படுகிறது.

தெய்வீகப் பசுவின் ஒவ்வொரு அங்கங்களிலும் தேவர்கள் வாசஞ் செய்கிறார்கள். சக்தியின் அம்சமாகத் தோன்றிய அவளினால் தரப்படும் சகல பொருட்களும் தரமான, சத்தான, ருசியான சம்பத்தாகவே பயன்படுகின்றன. கோமாதாவினால் வெளியகற்றப்படும் கழிவுப்பொருட்கள் தாவரப் பசளையாகவும், கிருமி நாசினியாகவும், இல்லங்களை மெழுகிச் சுத்தஞ் செய்யும் புனிதப் பொருளாகவே ஏற்கப்படுகின்றது. இவ்வாறு எமக்கு வேண்டிய சகலவற்றையும் அன்புடன் தந்துதவும் சுரபி அன்னையை அன்புடன் அரவணைத்து போற்றி வழிபடுவோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிக்குரியவர்கள்

☆ அறநெறியான தூய பணியை உணர்த்திய எமது தாய்த்தெய்வமான சிவகாமி அம்பாளுக்கு எமது பணிவான நன்றிகள்.

☆ எமது வேண்டுதலை ஏற்று இம்மலருக்கான ஆசியுரை, வாழ்த்துரைகள், வெளியீட்டுரை, அணிந்துரை ஆகியவற்றை தமது சிரமத்தையும் பாராது உள்ளன்போடு தந்துதவிய பெருமக்கள்.

☆ இந்த நூலுக்கான பல ஆலோசனைகளையும் ஒப்புநோக்கியும் தந்துதவிய எனது மகன் சி.சரவணபவன்.

☆ மிகக் குறுகிய காலத்தில் அழகான இந்த மலரினை யாவரும் வியக்கும் வண்ணம் தமது கன்னி முயற்சியாக தாய்த் தெய்வத்தின் சிறப்பான பணியாக ஏற்று பொறுப்புடன் நிறைவேற்றிய கலைஞன் பா.ராஜேஷ்கண்ணா

ஆகிய யாவருக்கும் சிவகாமி அம்பாளின் வற்றாத பெருங்கருணை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

**மூ.சிவலிங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுடர்நிலவு கிரபிக்ஸ், இணுவில். 0776687443

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org